97296
17/225

V2:51y7N3
N05
97296

# பிழை திருத்தம்

இந்நூல் வாசிப்பவர் கீழே காட்டிய அச்சுப் பிழைகளைத் திருத்தத்தின்படி முன்னர்த் திருத்திக்கொண்டு வாசிப்பாராக.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 27 | உளறயுளாய் | உறையுளாய் |
| 14 | 13 | கனன்றன் | கனன்றனன் |
| 17 | 4 | ஈனந்தா | ஊனந்தா |
| ,, | 6 | ஈனம் | ஊனம் |
| ,, | 17 | ஈனமும் | ஊனமும் |
| 24 | 9 | பெண்ணாடகம் | பெண்ணாகடம் |
| 30 | 3 | எழுந்தருளியிருந்கும் | எழுந்தருளியிருக்கும் |
| 40 | 15 | யான் உமைபங்கர் | யாள் உமைபங்கரோ |
| ,, | 21 | அரக்களைவிர | அரக்கனைவிர |
| ,, | 22 | இரக்சு மொன்றிவீர் | இரக்க மொன்றிலீர் |
| ,, | 23 | புண்ணை | புன்னை |
| 42 | 7 | தொன்றங் | தோன்றங் |
| 43 | 10 | ழுமுவ | முழுவ |
| 45 | 26 | நண்ணிணார் | நண்ணினார் |
| 56 | 1 | ஈரைந்துத் | ஈரைந்துந் |
| 64 | 19 | நமக் | நமக்கு |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 73 | 28 | பாசுரர் | பாசுரம் |
| 74 | 1 | தான் | தாம் |
| 92 | 12 | எண்சிறடியாசிரிய | எண்சீர் ஓரடியாசிரிய |
| 102 | 9 | திருமாணி குழு | திருமாணி குழி |
| 116 | 10 | தீர்பார் | தீர்ப்பார் |
| 117 | 9 | அஞ்ஞாமல் | அஞ்சாமல் |
| 128 | 23 | திருக்கைலைபிருந்த | திருக்கைலையிலிருந்த |
| 149 | 5 | தங்கி | தாங்கி |
| 153 | 12 | ஞானத்தில் | ஞானத்தால் |
| 158 | 6 | முனி | முன் |
| 176 | 4 | ருண்பார்க்கு | ருண்பாக்கு |

குறிப்பு : 110 பக்கம் 11 ஆவது வரிமுதல் 16 ஆவது வரியிலுள்ள விஷயங்கட்குப் பதிலாகப் பின் வருபவைகளை வைத்துக் கொள்க.

'திருத்தொண்டர் திருவந்தாதி' பாடிய நம்பியாண்டார் நம்பிகளும், 'பெரிய புராணம்' நூலாசிரியராகிய அருண் மொழித்தேவரும், 'திருத்தொண்டர் புராண சாரம்' பாடிய உமாபதி சிவாசாரியார் அவர்களும் இச் செய்திகளைப்பற்றி யாதும் கூறிற்றிலர்.

97296
சென்னை-600 008



துக்கொண்டிருந்த ஓர் உபாத்தியாயர் இவ்விதப்பெருமை யடைந்ததன் காரணத்தை விசாரிப்போமானால், எந்தச் சாதாரணமான மனிதனும் அவருடைய வழியைப் பின்பற் றிக் கீர்த்தியடையக்கூடுமென்பது வெளிப்படும். பலரும் அவரைப்போல் சிறிதேனும் நடந்து, தேசசேவகஞ் செய்து, தமக்குப் புகழையும் பிறருக்கு நல்வாழ்வையும் தேடும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், அவரு டைய சரித்திரத்தையும் அதிலிருந்து நாம் அறியக்கிடக்கி ன்ற அந்தரங்க விஷயங்களையும் அறிந்தவரையில் சொல்ல முன்வந்தோம்.

## மகாராஷ்டிரரின் விசேஷ குணங்கள்.

இந்தியாவில் பிறந்த நாமெல்லோரும் மேன்மைப்பட வேண்டிய் தமதாயுள் முழுமையும் உழைத்ததல்லாமல் அந்த உழைப்பின் மிகுதியாலேயே உயிரையும் பறிகொடுத்த ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகலே 1866-ம் வருஷத்தில் கோலாப்பூர் என்ற மகாராஷ்டிர சமஸ்தானத்தில் ஒரு சிற் றூரில் பிறந்தவர். அவர் மகாராஷ்டிரப் பிராமணர். ஆத லின், அந்த வகுப்பாருக்குள்ள விசேஷ குணங்கள் அனைத் தும் அவரிடம் அதிகமாக விளங்கின.

வியாபார நிமித்தம் நம் இந்தியாவுக்குவந்த ஆங்கிலே யர், இத்தேசம் ஒற்றுமையின்றி சின்னபின்னப்பட்டிருந்த தைக்கண்டு நாடுபிடிக்க ஆரம்பித்த காலத்தில், மகாராஷ் டிரர்களே ஆங்கிலேயரின் எண்ணம் எளிதில் பலித்துவிடா மற் செய்யக்கூடிய நிலையிலிருந்தனர். புனா, குவாலியர், பரோடா, சோலாப்பூர், தஞ்சாவூர் முதலிய இடங்களிலும், இன்னும் சில விடங்களிலும் மகாராஷ்டிர ராஜ்யங்கள் வேரூன்றி மிக்க சிறப்புடன் விளங்கி யிருந்தன.

மகாராஷ்டிர ஆட்சி பரவி வலுப்பட்டதற்கு முக்கிய காரணம் பேஷ்வாக்கள். அவர்கள் முதலில் மந்திரிகளாயிருந்து, பிறகு அரசர்களாய் மகாராஷ்டிர ஆட்சி ஓங்கி வளரும்படி செய்தனர். அவர்கள் பிராமணர்களாகையால், அவ்வகுப்பார் நாட்டாளுந்திறமை தங்கள் ஜாதிக்கே உண்டென்று தங்களை மதித்துவந்தார்கள். ஆகையால் ஸர்க்காரின் முறைகளை ஆய்ந்தறிவதிலும், தேசத்தின் பொதுநன்மைக்கான வழிகளில் உழைப்பதிலும் அவர்களுக்குள்ள சிரத்தை வேறெந்தக் காரியத்திலும் இல்லை. மற்ற நாடுகள் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட பிறகே மகாராஷ்டிர நாடுகள் உட்பட்டனவாயினும், ஆங்கில ஆட்சியால் விளையும் நன்மைகளை அவர்களே சீக்கிரம் அறியத் தலைப்பட்டு, அதிலுள்ள குறைகளை நீக்க முயற்சிசெய்ய ஆரம்பித்தனர். தொட்டகாரியத்தைச் செய்துமுடிப்பதில் அவ்வகுப்பார் மிகப் பிடிவாதங்கொண்டவர்கள். மனச்சாட்சி தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள். தேசபக்தியிலும் ஆத்மத்தியாகத்திலும் சிறந்தவர்கள். இவை போன்ற குணங்கள் ஸ்ரீமான் கோகலேயிடம் நிறைந்திருந்தனவென்பது, அவருடைய சரித்திரத்தால் நன்கு புலப்படும்.

## வித்தியாப்பியாசம்.

அவருடைய தாய் தந்தையர் ஏழைகளாயினும், ஆங்கிலக்கல்வி கற்கவேண்டியதின் அவசியத்தை நன்கறிந்து, தம் மகனைக் கோலாப்பூரிலுள்ள ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார்கள். அவருக்கு வயது 12 ஆகையில் அவருடைய தந்தை இறந்துவிட்டார். அதன்பின் அவருடைய தமையனான கோவிந்தராவ் பணத்தட்டால் வெகு கஷ்டப்படநேர்ந்தும் அதைச் சகித்துக்கொண்டு தமது தம்பியைப் படிக்கவைத்தார். சிறுபிராயம் தொட்டே ஸ்ரீமான் கோகலே ஊக்கமும் முயற்சியு முடையவர். ஆதலின், 16 வயதிலேயே எப். ஏ.,



V2;5147N05
N15

F. A., பரீட்சையில் தேறி, பிறகு பம்பாய் சென்று "எல்பின்ஸ்டன் காலேஜ்" என்னும் உயர்தரக்கலாசாலையில் சேர்ந்துபடித்து 1884-ம் வருஷத்தில் பி.ஏ. B.A., பரீட்சையிலுந் தேறிவிட்டார். உடனே ஸர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்திருப்பாரானால், அவருடைய கூர்மையான புத்தியும் சலியாத உழைப்பும் யோக்கியப் பொறுப்பும் பெரிய பதவிக்கு அவரைக் கொண்டுவந்திருக்கும்; அல்லது சட்டத்தைப் படித்து வக்கீலாய் அமர்ந்திருப்பாரானால், தமது வாக்சாதுர்யத்தைக்கொண்டு மூட்டை மூட்டையாக அவர் பணம் சேர்ந்திருக்கலாம். அவ்வாறு செய்வதாக உத்தேசித்து சட்டப்பரீட்சைக்காகச் சிலநாள் படிக்குமுன், வக்கீல் உத்தியோகத்திலும் பணம் சம்பாதிப்பதிலும் அவருக்கிருந்த ஆசை தீர்ந்துவிட்டது. B. A., பரீட்சைக்குப் படித்தபொழுது அவர் கணித சாஸ்திரத்தைக் கற்றிருந்தாராகையால், எஞ்சினீரிங் காலேஜில் சேர்ந்து படிக்கலாமா அல்லது இங்கிலாந்துபோய் ஸிவில் ஸர்விஸ் பரீட்சைக்குப் படிக்கலாமாவென்றும் யோசனைசெய்தார்.

ஆயினும் நம்முடைய நற்காலமானது அவரை அத்துறைகளில் இறங்க விடவில்லை. அக்காலத்தில் மகாராஷ்டிர தேசமெங்கும் தோன்றிவந்த ஓர் உணர்ச்சியானது அவருடைய மனதில் புகுந்து தங்கிவிட்டதாலும் ஸ்ரீமான் திலகரிடத்தில் அவர் வசியப்பட்டுவிட்டதாலும், இளம்பிராயத்திலேயே பொருளாசையைத் துறந்து தேசசேவகத்தை விரும்பி, துறவறத்தை ஏற்பதுபோல் "தட்சிண வித்தியாசபை"யில் சேர்ந்துகொண்டார்.

## தட்சிண வித்தியாசபை.

அந்தச் சபை 1884-ம் வருஷத்தில் ஸ்ரீமான் திலகர் முதலியோரால் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குச் சில வருஷங்க

சென்னை-600 008

ளுக்கு முன்பே, பம்பாய் மாகாணத்தில் ஓர் உணர்ச்சி தோன்றி முற்றிக்கொண்டுவந்தது; மகாராஷ்டிர நாட்டில்தான் முக்கியமாக அந்த உணர்ச்சி பலமடைந்துவந்தது. இத்தேசமானது முன்னொருகாலத்தில் பெருமையுடனிருந்ததையும், பிறகு சீர்குலைந்து போய்விட்டதையுமறிந்த சில புத்திமான்கள் இனி எப்பொழுதேனும் இந்தியா பெருமையடைந்து பலதேசங்களுக்குமுன் தானும் மதிப்புற்று நிற்குமோவென்று கவலைப்பட ஆரம்பித்தனர்.

தெய்வச்செயலால் கிடைத்த ஆங்கில ஆட்சியே அந்த ஆசை நிறைவேறுவதற்குத் தக்க சாதனமென்று அவர்கள் நினைத்து, ஆங்கிலேயரின் வழியை அனுசரித்து, அவர்களுடைய கல்வியைப் பரவச்செய்து விட்டால், ஜனங்கள் கண்திறந்தவர்களாய்விடுவார்கள், பிறகு அவர்களே தங்களுடைய நன்மைகளைத் தேடிக்கொள்ளத் தொடங்குவார்கள் என்று எண்ணங் கொண்டனர். ஸர்க்காரும் அதே எண்ணத்தைக் கொண்டு, அதற்கான காரியத்தைச்செய்துவந்தார்கள்; ஆயினும், மெதுவாக விருந்தது ஸர்க்கார் செய்துவந்தவேலை. ஸர்க்கார் மூலமாகவே கல்வியும் அறிவும் தேசத்தில் பரவுவதென்றால், கணக்கற்ற தலைமுறை செல்லும்.

ஆகையால் ஸர்க்கார் செய்யும் வேலையைத் தாங்களும் மேற்போட்டுக்கொண்டு கல்வியைப் பரவச்செய்வதே உத்தமமான தேசசேவகம் என்று ஸ்ரீமான் திலகர் போன்றவர்கள் முடிவு செய்துகொண்டார்கள். மேற்கண்டவாறு நினைத்து உழைத்தவர்களில் சிலர் பகிரங்கமாக வெளியில்வந்து ஆடினர்; சிலர் திரைக்குப்பின்னிருந்து ஆட்டிவைத்தனர். பகிரங்கமாக ஆடினவர்களில் ஸ்ரீமான் பாலகங்காதர திலகரும், ஸ்ரீமான் அகர்கரும், ஸ்ரீமான் நாம்ஜோஷியும், ஸ்ரீமான் விஷ்ணுசாஸ்திரியும் முக்கியமானவர்கள்; மறைவிலிருந்து ஆட்டிவைத்தவர்களில் ஸ்ரீமான் மகாதேவ கோவிந்த ரானடேயே முதன்மையானவர்.



மேற்சொன்ன கருத்தைத் தங்களால் கூடியவரையில் நிறைவேற்றுவதற்காக 1880-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் மகாராஷ்டிர நாட்டிற்கு நடுநாயகமாக விளங்கும் புனாநகரில் ஸ்ரீமான் திலகரும், ஸ்ரீமான் நாம்ஜோஷியும், ஸ்ரீமான் விஷ்ணுசாஸ்திரியும் சேர்ந்து ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை வைத்தார்கள். அதற்குமுன் அப்பட்டணத்தில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் இல்லாமலிருக்கவில்லை; ஆனால் அப்பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து படித்தல் பணக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே கூடுமான காரியமாக விருந்தது. பலஜாதி ஏழைப்பிள்ளைகளும் படித்து முன்னுக்குவரும்படி செய்யவேண்டுமென்பது புது ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தவர்களின் கருத்து. ஆகவே தங்களுடைய யோக்கியதைக்குத் தக்கவாறு தாங்கள் சம்பளமெடுத்துக்கொள்ளாமல், உயிர்வாழ்தற்கு அவசியமானஅளவு உபாயமாகச் சம்பளம் எடுத்துக்கொண்டு உழைக்க வேண்டுமென்று தீர்மானித்து, அவ்வாறே நடந்து வருகையில், சில மாதங்களுக்குள் எம். ஏ., M.A., பரீட்சையில் தேறினவராகிய ஸ்ரீமான் அகர்கரும் அவர்களுடன் சேர்ந்து உழைக்க ஆரம்பித்தார். அப்பெரியோர்களின் முயற்சியால் பள்ளிக்கூடம் நன்றாய் நடைபெற்று வந்தது. ஆனால் நாளாகவாகத் தங்களுடைய உறுதி குறையின், தொட்டகாரியம் நிறைவேறாமற் போய்விடுமோ என்று அவர்கள் அஞ்சி, தங்களைச் சில நிபந்தனைகளால் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து, அதன் பொருட்டு எல்லோரும் சேர்ந்து தட்சிண வித்யாசபையை ஸ்தாபித்தார்கள்.

## சபையின் விதிகள்.

சபையில் சேருகிறவர்கள் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு, அச்சபைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் 20 வருஷம் உழைக்கவேண்டும். மாதமொன்றுக்கு 75 ரூபாய் தான் அவர்களுக்குச் சம்பளம். 20 வருஷ காலமான பிறகு அவர்கள் இஷ்டப்பட்டு விலகிக்கொண்டால் அவர்களது ஆயுள் முழுமையும் மாதமொன்றுக்கு 30 ரூபாய் உபகாரமாகக் கொடுக்கப்படும். அவர்களுடைய ஜீவதசைக்குப்பிறகு மூவாயிரம் ரூபாய் அவர்களுடைய சந்ததிகளுக்குக் கிடைக்கும்படி "இன்ஷ்யூரென்ஸ்" கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம்செய்து கொண்டு அதற்காகக் கட்டவேண்டிய வருஷச்சந்தாவைச் சபையே செலுத்திவரும். வீடு கட்டிக்கொள்ள அவர்கள் விரும்பினால் மனை இனாமாகக் கொடுக்கப்படும். 20 வருஷ ஊழியம்முடிந்து அவர்கள் விலகிக்கொள்ளும்பொழுது, வீட்டின் கிரயத்தைக் கொடுத்து சபையே அந்த வீட்டை வாங்கிக்கொள்ளும்.

B. A., பரிட்சையில் தேறினவர்களை சபையில் சேர்த்துக்கொள்ளலாமென்று ஆதியிலிருந்த விதியை மாற்றி இப்பொழுது M.A., பரிட்சையில் தேறினவர்களைத்தான் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

## பேர்கூஸன் காலேஜ்.

இவ்விதமான விதிகளுடன் சபை ஏற்பட்டுச் சிலமாதமாவதற்குள் வேறுசில புத்திமான்களும் அதில் சேர்ந்து கொண்டனர். ஆகையால் உபாயமாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சி பல மேதாவிகளின் சேர்க்கையால் பலப்பட்டுவிடவே, உயர்தரக்கல்விபோதிக்க ஒரு காலேஜையும் ஸ்தாபித்து



விட வேண்டுமென்று சபையோர் நினைத்து, 1885-ம் வருஷத்தில் ஒரு காலேஜை ஸ்தாபித்தார்கள். அப்பொழுது பம்பாயில் கவர்னராயிருந்த ஸர் ஜேம்ஸ் பெர்கூஸன், அக்காலேஜ் வைக்க அனுமதி கொடுத்தார். ஆதலின் அவருடைய பெயரே அந்தக் காலேஜுக்குக் கொடுக்கப்பட்டது. வாலிபர்களாகிய சிலர் சேர்ந்து ஸ்தாபித்த அந்தக்காலேஜில் இப்பொழுது 1200மாணவர்கள் உயர்தரக்கல்விபெற்று வருகின்றனர்.

தட்சிண வித்தியாசபைக்குட்பட்ட மற்ற வித்தியா ஸ்தாபனங்களில் இப்பொழுது 2500 பிள்ளைகள் படித்து வருகிறார்கள். விசாலமான கட்டிடங்களும், புஸ்தக சாலைகளும், சாஸ்திர ஆராய்ச்சி மண்டபங்களும், மற்றும்பல உபகரணங்களும் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. காலேஜ் ஏற்பட்டு சொற்பகாலங் கழிந்தபிறகு பம்பாய் கவர்ன்மெண்டார் சில பூமிகளையும் 50 ஆயிரம் ரூபாயையும் அதற்கு ஒருசமயத்தில் கொடுத்துதவின தல்லாமல், வருஷாவருஷம் பதினாயிரம் ரூபாய் கொடுத்தும் வருகிறார்கள்.

மகாராஷ்டிர நாட்டிலுள்ள பிரபுக்களிற் பலர் பலதொகைகளைக்கொடுத்து வித்தியாதானம் செய்வதாகிய இந்தப் புண்ணிய காரியத்தை ஆதரித்தார்கள். இப்பொழுது மொத்தமாய் நான்குலட்சம் ரூபாய் பெறக்கூடிய சொத்து அக்காலேஜுக்குச் சொந்தமாகவிருக்கிறது. மாணவர்கள் கண்டவிடங்களில் சாப்பிட்டு தேக சௌக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாமல் செய்வதற்காக, கலாசாலையிலேயே ஜாகைகள் ஏற்பட்டிருக்கின்றன. திறந்தவெளியில் விசாலமான விளையாட்டு ஸ்தலங்களும் இருக்கின்றன. அந்தக் காலேஜிலும் அதைச்சேர்ந்த மற்றப் பள்ளிக்கூடங்களிலும் எத்தனை மாணவர்கள் கல்விகற்கிறார்களோ அத்தனை மாணவர்கள்

இந்தியாவில் வேறெந்தக் காலேஜிலும் படிக்கவில்லை. இவ்விதச் சிறப்புகளை அந்தக் காலேஜ் பெற்றதற்கு முக்கியக் காரணமாகிய ஸ்ரீமான் கோகலே 1885-ம் வருஷத்திலே தட்சிண வித்தியாசபையில் சேர்ந்துகொண்டார்.

அந்தக் காலேஜானது மாணவர்களுக்குக் கல்விகற்பிக்கும் உத்தமமான காரியத்தைச் செய்துவருவதல்லாமல், இந்தியர்களுக்குள்ள உயர்குண மொன்றையும் விளக்கிக்காட்டி வருகிறது. கட்டினவீட்டுக்கு இந்தியர் பழுதுசொல்வார்களே அல்லாமல் தாங்கள் சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டக்கூடியவர்களல்லவென்று நம்மிடத்தில் அலட்சியபுத்தியுள்ளவர்கள் சொல்வது வழக்கம். சமயம் நேராததால் மாத்திரம் இந்தியர்களுடைய குணங்கள் பிரகாசிக்கவில்லையே யல்லாது சமயம் நேர்ந்தால் தங்களுக்கு வேண்டிய காரியங்களை இந்தியர்கள் தாங்களே செய்துகொள்ளக் கூடியவர்கள் என்பதைத் தட்சிண வித்தியாசபையின் முயற்சியால் ஏற்பட்ட பெர்குஸன் காலேஜும் மற்ற வித்தியா ஸ்தாபனங்களும் விளக்குகின்றன.

## ஸ்ரீமான் கோகலேயின் போதனா சக்தி.

ஸ்ரீமான் கோகலே சபையில் சேர்வதற்குமுன், திலகர் முதலியோர் முதலில் ஏற்படுத்தின ஹைஸ்கூலின் உபாத்தியாயர்களில் ஒருவராக வேலைபார்த்துவந்தார். பிறகு, காலேஜ் மாணவர்களுக்கு ஆங்கிலக் காவியங்களையும் வசனநூல்களையும் கணிதசாஸ்திரத்தையும் போதிக்கும் வேலை அவருக்கு ஏற்பட்டது. அக்காலத்தில் அவர் எழுதிப் பிரசுரம் செய்த கணக்குப் புத்தகமொன்று தேசத்திலுள்ள பல ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் பலவருஷம் உபயோகிக்கப்பட்டு வந்தது.



உலகத்திலுள்ள தேசங்களின் சரித்திரங்களையும் ராஜாங்க அர்த்தசாஸ்திரம் என்ற நெருடான சாஸ்திரத்தையும் சிறிதுகாலம் கழித்து காலேஜ் மாணவர்களுக்கு அவர் போதிக்கத்தலைப்பட்டு, காலேஜிலிருந்து நீங்கும் வரையில் அவைகளைத்தான் கற்பித்துவந்தார். ராஜாங்க அர்த்தசாஸ்திரத்தைப்பற்றி ஆங்கிலபாஷையிலுள்ள பிரமாணமான நூல்களை இரவும் பகலும் ஓயாமல் மூன்றுவருஷகாலம் படித்து, அதில் மிகப்பாண்டித்திய மடைந்துவிட்டார்.

சுமார் 150 வருஷங்களுக்குமுன், பார்லிமெண்டு சபையில் ஒருவராயிருந்து, தமது கல்வியாலும் பேசும் திறமையாலும் மிகக் கீர்த்திபெற்றிருந்த பர்க் (Burke) என்ற நூலாசிரியரின் கருத்துக்களே ஸ்ரீமான் கோகலேயின் மனத்தில் வேரூன்றிவிட்டன. ஸமரஸமான போக்கையே அந்த பர்க் ஆதரித்தவர். ஸ்ரீமான் கோகலேயும் தமதாயுள் முழுமையும் ஸமரஸப்போக்கையே ஆதரித்து, முழுப்பட்டினி கிடப்பதைக் காட்டிலும் ஒருகவளம் கிடைத்தால் அதைப்பெற்றுக் கொண்டே மீதிக்கு மன்றாட வேண்டுமென்று நினைத்து அவ்வாறே நடந்தும் போதித்தும் வந்தார்.

## காலேஜுக்கு அவர்செய்த வேறு ஊழியம்.

தம்முடைய பிரஸங்கவன்மையால் பெர்குஸன் காலேஜின் கீர்த்தியை அவர் பரவச்செய்ததுடன், விடுமுறைக் காலங்களிலெல்லாம் ஊரூராகச்சென்று காலேஜுக்குப் பொருள் சம்பாதிக்கவும் தலைப்பட்டார். பசியையும், சரீர சிரமத்தையும், மனத்தின் வேதனையையும் கருமத்தில் கண்ணுடையவர்கள் பாராட்டமாட்டார்களாகையால், தொட்ட காரியத்தை நிறைவேற்றுவதில் அவர் மனம் சலித்ததில்லை. பணத்தைக் கொடுக்கும்படி பணக்காரர்களுக்குப் பழக்கத்தை உண்டுபண்

னுவதே தாம் அவர்களுக்குச்செய்யக்கூடிய உபகாரமென்று அவர் நினைத்து அலைந்துதிரிந்து பொருள் சம்பாதித்து பெர்கூஸன் காலேஜை முன்னுக்குக் கொண்டுவந்த புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார். பெர்கூஸன் காலேஜை ஸ்தாபித்த காரியத்தில் அவருக்குப் பங்கில்லையாயினும், அது சிறப்புடன் விளங்கும்படி செய்தபெருமை அவரொருவருடையதே.

தட்சிணவித்யா சபையையும் பெர்கூஸன் காலேஜையும் ஸ்தாபிக்க மிகப் பாடுபட்டவராகிய ஸ்ரீமான் திலகர் 1890-ம் வருஷத்தில் சில மனஸ்தாபங்களை முன்னிட்டு காலேஜிலும் சபையிலும் தமக்கிருந்த ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவருடைய கொள்கைகளைக் கொண்டவர்கள் பிறகு பலவிதமாக சபையைத் தூஷிக்க ஆரம்பித்தார்கள். ஸர்க்கார் கொடுக்கும் உபகார திரவியத்தை காலேஜ் பெற்றுக்கொள்வதால், அது தன்னுடைய சுயேச்சையை இழந்துவிட்டதென்று அவர்கள் தூற்றுவது வழக்கம். அது சிறிதும் பொருந்தாத தூஷணை; ஏனென்றால் ஸர்க்காரிடம் உதவி பெற்றுக்கொள்வது தகாதகாரியமல்ல. வித்யா ஸ்தாபனங்களுக்குப் பொருளுதவி செய்யவேண்டியது ஸர்க்காரின் கடமையென்றே மேதாவிகள் வற்புறுத்துகிறார்கள். வித்யா ஸ்தாபனங்கள் பொருளுதவியைப் பெற்றுக்கொள்ள மறுத்தால், ஸர்க்கார் எவ்வாறு தங்கள் கடமையைச் செய்யக்கூடும்? நம்மிடமிருந்து வரிகள்மூலமாக வசூல்செய்யும் தொகையை நம்முடைய நன்மைக்கான வழிகளில் செலவிடும்படி செய்வதே நம்முடைய கடமை. ஸர்க்கார் உபகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, சபையோர் தங்களுடைய கொள்கைகளுக்கு மாறாக நடக்கவுமில்லை. புனாநகரில் ஸர்க்காரால் நடத்தப்படும் காலேஜ் ஒன்றுண்டு. அதனுடைய பிரின்ஸிபால் எப்பொழுதும் ஐரோப்பியராக விருக்க சபை சம்மதித்தால், அந்தக் காலேஜை சபையிடம் விட்டுவிடுவதாக ஸர்க்கார் சொன்னார்கள். அதற்கு சபை சம்மதிக்காததால், ஓர் ஊரில் இரண்டு காலேஜ்கள் நடைபெறும்படி செய்யத் தங்களால் கூடவில்லையென்று பெர்கூஸன் காலேஜுக்குக் கொடுத்துவந்த பணத்தை இரண்டுவருஷம் கொடுக்காமல் நிறுத்திவிட்டார்கள். அது போனாற்போகட்டுமென்று தட்சிண வித்தியா சபையோர் இருந்துவிட்டனரே யல்லாமல், தங்களுடைய நியமங்களை விட்டுக்கொடுத்து ஸர்க்கார் உதவியைப்பெற விரும்பவில்லை.



## ஸர்வஜனிக் ஸபை.

ஜனங்களின் அறியாமையை அகற்றி அறிவைப் பரவச்செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டவர்களாகிய அக்காலத்திய புத்திமான்கள் புனாவில் "ஸர்வ ஜனிக் சபை"யென்று ஒரு சபையை ஏற்படுத்தி, தேச க்ஷேமத்துக்குற்ற காரியங்களைப் பற்றி யோசனைசெய்து, அந்த யோசனைகளை கவர்ன்மெண்டுக்கும் ஸர்வ ஜனங்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு, மூன்று மாதத்துக்கொருமுறை ஒரு பத்திரிகையைப் பிரசுரஞ்செய்து வந்தார்கள். ஸ்ரீமான் கோகலே அந்த சபையின் காரியதரிசி உத்தியோகத்தையும் அப்பத்திரிகையின் ஆசிரியர் பதவியையும், 1897-ம்வருஷமாகிய தம்முடைய 21-வது வயதிலேயே ஒப்புக்கொண்டு சபையை நடத்தும் வேலையையும் பத்திரிகையைப் பிரசுரம் செய்யும் வேலையையும் செய்துவந்தார்.

சபையின் செல்வாக்கு நாடெங்கும் பரவத்தலைப்பட்டது. பத்திரிகை ஜனங்களின் கண்ணைத்திறக்க ஆரம்பித்தது. கவர்ன்மெண்டும் ஜனங்களும் அச் சபையையும் பத்

திரிகையையும் மதித்து அவைகளின் அபிப்பிராயங்களைக் கவனிக்கவும் ஆதரிக்கவும் ஆரம்பித்தார்கள். அந்தச் சபையின் பெயரால் எழுதப்பட்ட மகஜர்கள் அநேகமாக கோகலேயால் எழுதப்பட்டவை. அந்த மகஜர்களை யெல்லாம் கவர்ன்மெண்டார் மதித்து, தக்கவாறு நடந்துவரும் நாளில் ஸ்ரீமான் திலகரும் அந்தசபையில் சேர்ந்துகொண்டார். அவரைப் பின்பற்றின வேறுபலரும் அவருடன் சபையில் சேர்ந்துவிட்டபடியால், அவர்களுடைய பலத்தைக் கொண்டு திலகர் தாமொரு காரியதரிசியாய்விட்டார். அவருடன் சேர்ந்துழைப்பது கூடாத காரியமென்று அனுபோகத்தால் அறிந்திருந்த கோகலே உடனே அந்தச் சபையைவிட்டு விலகிக்கொண்டு, "தட்சிணசபை" யென்ற வேறொரு சபையை ஸ்தாபித்தார். அதுமுதல் "ஸர்வஜனிச்சபை" தன்னுடைய செல்வாக்கை இழந்துவிட்டது. புதிதாக ஏற்பட்ட "தட்சிணசபை" அந்த செல்வாக்கை அடையக்கூடவில்லை.

## ஸுதாரக்

ராஜாங்க விஷயங்களை "ஸர்வஜனிக்" சபையின் பத்திரிகை பரிசீலனை செய்து வந்ததுபோல் ஜனங்களின் ஆசாரங்களிலுள்ள அனர்த்தங்களைத் திருத்துவதற்காக "ஸுதாரக்" என்ற பத்திரிகை மகாராஷ்டிர பாஷையிலும் ஆங்கிலபாஷையிலும் சேர்ந்தாற்போல் நடத்தப்பட்டுவந்தது. அதன் ஆசிரியர்களில் ஒருவராகவும் ஸ்ரீமான் கோகலே நாலுவருஷகாலம் உழைத்தார். திலகர் முதலியோர் புனாவில் "புது ஆங்கிலப் பள்ளிக்கூட"த்தை ஸ்தாபித்த அப்பொழுதே இரண்டு பத்திரிகைகளையும் நடத்த ஆரம்பித்து, ஒரு அச்சுக்கூடத்தையும் வைத்தார்கள். "கேஸரி" என்ற பத்திரிகை மகாராஷ்டிர பாஷையிலும், "மராட்டா" என்ற பத்திரிகை ஆங்கிலத்தி



அவர் மிகவும் அபிமானம் பாராட்டினவரானதால் அதற்கு ஆபத்து நேரிடாமல் தன்னால் கூடிய பிரயாசையைப் பட அவ்வருஷம் அக்கிராஸனாதிபத்தியத்தை வகித்தார். அமிதவாதிகளும் மிதவாதிகளும் அவரைப் பரமகுருவாகப் பாவித்தவர்களானதால் அவ்வருஷம் காங்கிரஸ் ஒழுங்காகவே நடந்துவிட்டது.

ஆயினும் அமிதவாதக்கொள்கைகள் புயல்காற்றுபோல் பரவிவந்தபடியால் நேரக்கூடிய அனர்த்தங்களைத் தடுக்கவேண்டியது தேசத்தின் நன்மையை நாடியவர்களின் முக்கியமான கடமையாய் விட்டது. 1907-ம் வருஷம் பிப்ரவரிமாதமுழுமையும் ஸ்ரீமான் கோகலே அலகாபாத்து, லக்நௌ முதலிய பல பட்டணங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் செய்துவந்தார்.

## சுகாதாரக் குறை.

அடுத்த மார்ச்சு மாதத்தில் நடந்த ராஜப்பிரதிநிதி சட்டசபை மீட்டிங்கில் வரவு செலவு திட்டத்தை முன்னிட்டு தேசத்தின் குறைகளையும் தேவைகளையும் வழக்கம் போல எடுத்துச் சொன்னார். மணங்கொன்றுக்கு ஒரே ரூபாயாக உப்புவரியைக் குறைத்திருந்ததற்கு ஸ்ரீமான் கோகலே வந்தனம் செலுத்திவிட்டு, "செலவுபோக மிச்சப்பட்ட பணத்தை வருஷாவருஷம் ரயில்பாதை போடுவதில் கவர்ன்மெண்டு செலவிட்டு வருவதைப் பார்த்தால், ரயில்பாதை அதிகமாய் விட்டால் போதுமென்றே ஜனங்கள் விரும்புகிறார்கள் போல் தோன்றுகிறது. இதுவரையில் 400 கோடி ரூபாய் ரயில் பாதைகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. சுகாதாரத்துக்காக செலவிடப் பட்டிருக்கிறது ஒன்றுமில்லை யென்றே சொல்லிவிடலாம். காலராவும், பிளேகும், மலேரியா என்ற விஷ ஜ்வரமும் வருஷா வருஷம் பல்பட்டணங்களைச்

சூறையாடிக் கொண்டிருக்கின்றன. 1000-ல் 35 பெயர்கள் இத்தேசத்தில் மரண மடைகிறார்கள்; இங்கிலாந்திலோ 16 பெயர்கள்தான் மரணமடைகிறார்கள். இந்த நிலைமையில் சுகாதாரம் போனவழி போகட்டுமென்று விட்டு விடுவது தகுமா? சென்ற 9 வருஷத்தில் ரயில்பாதைபோட செலவிட்ட 31 கோடி ரூபாயையும் சுகாதாரத்துக்காகச் செலவிட்டிருந்தால், எவ்வளவு வித்தியாச மேற்பட்டிருக்காது? லோகல்பண்டு போர்டுகள் முனிஸிபாலிட்டிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களே சுகாதாரத்தைப் பற்றி கவனிக்கவேண்டியவை யென்று கவர்ன்மெண்டு சொன்னால் அது சரியல்ல. பட்டணங்களெல்லாம் வெகு ஏழ்மையான நிலைமையி லிருக்கின்றன. கவர்ன்மெண்டின் பொக்கிஷத்தில் சென்ற 9 வருஷகாலத்தில பணம் திணறிக்கொண்டு கிடைக்கையில், ஸ்தல ஸ்தாபனங்கள் மூச்சுவிடக் கஷ்டப்படும் ஸ்திதியில் இருந்திருக்கின்றன. இக்காலத்திய முறைகளை அனுசரித்துச் சுகாதார வேலைகளைச் செய்வதென்றால், ஏராளமாகப் பணம் செலவிடவேண்டும்; கவர்ன்மெண்டு இனாமாகக் கொடுத்து உதவினாலொழிய ஸ்தல ஸ்தாபனங்கள் பணத்துக்கு எங்குபோகும். சுகாதாரத்தை விருத்திசெய்கிறதற்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பணங்கொடுத்து உதவுவதைவிட வேறு இனத்தில் செலவிடுவது அவ்வளவு விரும்பத்தக்க காரியமல்ல. பணம் மிச்சப்பட்டால் அந்தந்த மாகாண கவர்ன்மெண்டுகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடவேண்டும். சுகாதார வேலைகளைச் செய்து முடிக்கும் விஷயத்தில் அந்த கவர்ன்மெண்டுகள் பணத்தைச் செலுத்தவேண்டும். கிடைக்கிற பணத்தை யெல்லாம் ரயில் பாதையில் செலவிடவேண்டுமென்று வியாபாரஞ்செய்யும் ஐரோப்பியர்கள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். இங்கும்



இங்கிலாந்திலும் அவர்கள் செல்வாக்குள்ளவர்களாக விருக்கிறார்கள். ஆயினும் அந்த நிர்ப்பந்தத்துக்கு கவர்ன்மெண்டு உட்படக்கூடாது. ஆனால் ரயில்பாதைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி முதல் தொகையின் வட்டிக்கு இப்பொழுது கட்டி வருகிறபடியால்; கடன்வாங்கி ரயில் போடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை" என்று மறுபடியும் ஏற்கெனவே சொன்ன வாதங்களையே எடுத்துச் சொன்னார். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்பதை ஸ்ரீமான் கோகலே அனுபோகத்தில் அறிந்தவர். ஆனால் 1906-ம் வருஷத்தில் வரவு செலவு திட்டத்தைப்பற்றிப் பேசியபொழுது, அப்பொழுது சேனாதிபதியா யிருந்த லார்டு கிச்சனர் "சொன்னதைச் சொன்னதையே கோகலே 3 வருஷமாகச் சொல்லுகிறார்" என்று சொல்லியிருந்தார். அப்பொழுது அவருக்குப் பதில்சொல்ல சமயங் கிடைக்கவில்லையாகையால் 1907ம் வருஷத்தில் அவருக்குப் பதில் சொன்னார்: "சொன்னதைச் சொன்னதையே நான் மூன்று வருஷமாகச் சொல்லி வருவதாக மாட்சிமைதங்கிய சேனாதிபதி சென்ற வருஷத்தில் சொன்னார். அப்படி சொல்லும்படி யிருப்பது என்னுடைய பிசகா? நான் எடுத்தும் சொல்லும் குறைகளை காதில் வாங்க அவருக்கு இஷ்டமில்லையானால், அதற்குப் பரிகாரம் அவருடைய கையிலேயே இருக்கிறது" என்று பதில் சொன்னார்.

லார்டு கிச்சனர் கோபித்துரைத்ததற்கு பதில் சொல்ல ஒருவருஷங் காத்திருந்தாராயினும் லார்டு கிச்சனர் இடத்தில் அவருக்கு வெகு மதிப்புண்டு. போரில் லார்டு கிச்சனர் சமர்த்தரானாலும், சாதுர்யமாக பேசவல்லவரல்லர். ராணுவ முறையைக் கண்டித்து ஸ்ரீமான் கோகலே பேசுவாரானால், அதற்குப் பதில்சொல்ல முன்னாடியே யோசித்துவைத்துக்

கொள்வதற்காக கோகலே என்னசொல்லப்போகிறார் என்று அவர் தனிமையில் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு வருஷம் கேட்டார். அவரிடத்தில் தமக்கிருந்த மதிப்பை உத்தேசித்து ஸ்ரீமான் கோகலே அவ்வருஷத்தில் சொல்ல உத்தேசித்திருந்த வாதங்களையெல்லாம் சொல்லாமல் சுருக்கிக்கொண்டார் என்று ஸ்ரீமான் கோகலேயின் மாணாக்கரும் நண்பரும் பெர்கூஸன் காலேஜ் பிரின்ஸிபாலுமாகிய ஸ்ரீமான் பாஞ்சபே தாமெழுதியுள்ள நூலில் சொல்லியிருக்கிறார்.

## ராஜப்பிரதிநிதி சொன்ன தைரியம்.

சட்டசபைகளின் நடவடிக்கைகளைப்பற்றிய பழைய விதிகளின்படி, வரவு செலவு திட்டத்தைப்பற்றிப் பேசும் பொழுது மாத்திரமே தேசத்தின் நிலைமையைபற்றி மெம்பர்கள் பேசக்கூடுமாகையால், நாம் மேலே பிரஸ்தாபித்த வரவு செலவு திட்ட மீட்டிங்கில் ஸ்ரீமான் கோகலே ஒரு முக்கியமான விஷயத்தைபற்றி கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கை செய்தார். "ஜனங்களுக்கும் ராஜாங்கத்துக்கு முள்ள கட்டை கெட்டியாய்ச் செய்யவேண்டுமானால், தேசத்தை ஆளும் வேலையில் ஜனங்களை எப்படி அதிகமாகச் சம்பந்தப் படுத்திக்கொள்ளலாமென்று யோசிக்கவேண்டியதே முக்கியமான விஷயம். பழைய முறைப்படி இந்தியாவை இன்னும் ஆளக்கூடுமென்று நினைக்கும் ஆங்கிலேயர்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திலிருந்து வெளிப்பட்டே இந்தியர் தங்களுடைய க்ஷேமத்தைத் தேடக்கூடுமென்று நினைக்கும் இந்தியர்களும் இப்பொழுதுள்ள நிலைமையை அறிய முடியாதவர்கள். தேசத்தை ஆளும்வேலையில் இந்தியர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்வதற்குப் பெரிய இடைஞ்சலாக விருப்பவர்கள் ஸிவில்ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்களே. அவர்களே ராஜப்



பிரதிநிதிக்கும் இந்தியா மந்திரிக்கும் யோசனை சொல்லுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் அங்கீகரிக்காத எந்த யோசனையும் நிறைவேறக்கூடவில்லை. நிர்வாகத்தை நடத்தும் அதிகாரிகள் நீதிவழங்கும் அதிகாரிகளாகவும் இருக்கக்கூடாதென்று இந்தியர்கள் கேட்டுக்கொண்டால், அந்த அதிகாரம் நிர்வாக அதிகாரிகளுக்கு இல்லாமல் தனியாகப் பிரித்துவிட்டால், அவர்களுக்குள்ள பலம் குறைந்துவிடுமென்று ஆட்சேபிக்கிறார்கள். ராஜப் பிரதிநிதிக்கும் இந்தியா மந்திரிக்கும் யோசனை சொல்லுகிறவர்களில் இரண்டொருவர் இந்தியர்களாகவிருக்க வேண்டுமென்று இந்தியர்கள் கேட்டுக்கொண்டால், ரகஸ்ய ஆலோசனைகள் வெளிப்பட்டுவிடக் கூடுமென்று ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் சொல்லுகிறார்கள். சட்டசபைகளின் அமைப்பைத் திருத்தி மெம்பர்களுக்குச் சிறிது அதிகாரமுண்டாகும்படி செய்யவேண்டுமென்றால், அந்தத் திருத்தம் கவர்ன்மெண்டின் அமைப்பையே மாற்றிவிடுமென்கிறார்கள். லோகல்பண்டு போர்டுகள் முனிஸிபாலிட்டிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அதிகாரிகளுக் குட்பட்டவைகளாக இல்லாமல் ஸர்க்கார் செய்துவிட வேண்டுமென்று கேட்டால், ஜனங்களின் நன்மையை அவைகள் நாடினவைகளாகையால், அவைகளுடைய திறமையைக் குறைத்துவிடக்கூடிய எந்த மாறுதலும் செய்யக்கூடாதென்பார்கள். இவ்வாறு ஒரு கோட்டையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறோமேயல்லாது, எங்கேயாவது ஒருபக்கத்தில் வெட்டிக்கொண்டு உள்ளே நுழைந்தோமென்பதில்லை. பல வருஷங்களாக இவ்வாறு இருந்துவருவதால், ஜனங்களுடைய மனப்போக்கு கொஞ்சங் கொஞ்சமாக மாறிவந்திருப்பதல்லாமல், சமீப காலத்தில் மளமளவென்றும் மாறியிருக்கிறது. ஆயினும்

சில விஷயங்களில் முக்கியமான திருத்தங்களைச் செய்ய கவர்ன்மெண்டார் உத்தேசித்திருப்பதாய்ச் சென்ற வருஷ முதல் ஒரு பிரஸ்தாபமுண்டாயிருக்கிறது. ஜனங்களின் மனப்போக்கு வெகு மிடுக்காக இருக்கிறது; ஆகையால் செய்ய உத்தேசித்திருக்கிற திருத்தங்களை உடனே அறிவித்து, அவைகளை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தாலொழிய, அவைகளால் விளையக்கூடிய நன்மையில் பாதி வீணாய்விடலாம்; உள்ள நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது; நெருக்கடியாகக்கூட விருக்கிறது; கவர்ன்மெண்டார் வெகு உன்னதமான ராஜதந்திரத்துடன் யோசனைசெய்து முடித்தாலொழிய, கஷ்டங்கள் உண்டாகும் போலிருக்கிறது; அவைகளின் முடிவென்னவாகுமோ" என்று ஸ்ரீமான் கோகலே சொல்ல, ராஜப் பிரதிநிதி லார்டு மிண்டோ பின்வருமாறு அவருக்குப் பதில் சொன்னார்:—

"இந்தியாவில் மாறுதலுண்டாய்க் கொண்டிருக்கிறதென்று கனம் மிஸ்டர் கோகலே சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். புதிய ஆசைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன; அவைகள் கிரமமானவைகளே; அவ்வாசைகள் நிறைவேறும்படி செய்ய கவர்ன்மெண்டு தயாராக விருக்கவேண்டியதுதான். மாறுதலொன்று தேசத்தில் உண்டாய்க்கொண்டிருக்கிறதை நான் அறிவேன். நாம் சும்மா விருக்கக் கூடாது. காலத்தின் குறிகளை இந்தியா கவர்ன்மெண்டு அறியத் தவறிப்போய் விடுமானால், அதைவிடப் பெரிய துர்ப்பாக்கியம் இந்தியாவுக்கு வேறு இராது. ஆகையால் என்ன திருத்தங்களைச் செய்யக்கூடுமோ அவைகளைச் செய்ய நாமே ஆரம்பம் செய்யவேண்டியது அவசியமென்று நான் நினைத்து, தேசத்திலுண்டாயிருக்கிற மாறுதல்களுக்குத் தக்கவாறு என்ன திருத்தங்களைச் செய்யலாமென்று யோசனை



செய்வதற்காக என்னுடைய சபையி[illegible] ஒரு கமிட்டி யாக நியமித்தேன். அவர்கள் தயார்செய் [illegible] நானும் என்னுடைய சபையும் யோசித்துப் பார்த்து, எங்களுடைய அபிப்பிராயங்களை இந்தியா மந்திரிக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று லார்டு மிண்டோ பகிரங்கமாகச் சொன்னதிலிருந்து, அவ்விஷயமாக ஏற்கெனவே உண்டாயிருந்த பிரஸ்தாபம் உண்மைதானென்று நிச்சயமுண்டாயிற்று.

திருத்தங்களைச் செய்ய இந்தியா மந்திரியும் சம்மதமுள்ளவராயிருந்ததால், உத்தேசத் திருத்தங்களை இந்தியா கவர்ன்மெண்டார் அந்த வருஷம் ஆகஸ்டுமாதத்தில் அவருக்குத் தெரிவித்தார்கள். அவை என்னவையென்று இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பகிரங்கமாகப் பிரசுரம் செய்யப்பட்டன. மாகாண கவர்ன்மெண்டுகள் மூலமாக தேசத்திலுள்ள தகுந்த மனிதர்களின் அபிப்பிராயங்களையும் தெரிந்து கொண்டார்கள். ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் இந்தியர் ஒருவர் ஸ்தானம் பெறும்படி இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பைப்பற்றிய விதிகளை மாற்றவேண்டுமென்று லார்டு மிண்டோ உத்தேசித்ததைச் சிலர் பலமாக ஆட்சேபித்தார்கள். இந்தியர்களுக்கென்று அந்த ஸ்தானம் பொதுவாக ஏற்படுத்தப்பட்டாலும் அநுஷ்டானத்தில் ஹிந்துக்களுக்கே கிடைக்குமென்று சொல்லி சிலர் முகம்மதியர்களைக் குத்திவிடப் பார்த்தார்கள். முகம்மதியர்களுக்குத் தனியாக சட்டசபையில் ஸ்தானம் உண்டு பண்ணவேண்டுமென்று லார்டு மிண்டோ சிபார்சு செய்திருந்ததை ஹிந்துக்களிற் பலர் ஆட்சேபித்தார்கள். ஆகையால் ஸ்ரீமான் கோகலே இங்கிலாந்துக்குச் சென்று லார்டு மார்லிக்கு யோசனை சொல்லவேண்டுமென்று "பம்பாய் மாகாண

[illegible]" அவரைத் தேடிக்கொண்டது. அவர் புறப்படுவதற்கு முன் காங்கிரஸ் சம்பந்தமாக பெரிய அடாத செய்கையொன்று ஏற்பட்டது.

## ஸூரத்தில் நடந்த காங்கிரஸ் அமளி.

1907-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஸூரத்தில் காங்கிரஸ் கூடியபொழுது மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் மனஸ்தாபம் முற்றிவிட்டது. தங்களுடைய கொள்கைகளைக் காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டுமென்று அமிதவாதிகள் பிடிவாதஞ் செய்தனர். அதன் பலனாக காங்கிரஸ் சபையில் கலகமுண்டாகி அது கலைந்துபோய் விட்டது. இவ்விஷயம் தேசத்தில் பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. சுமார் 22 வருஷங்களாக நடந்து வந்த காங்கிரஸ் திடீரெனக் கலைந்துபோய் விட்டால், அதனுடைய பிரயத்தனங்களால் நன்மை உண்டாகுமென்று நம்பியிருந்தவர்களுக்கு எவ்வளவு வருத்தத்தை உண்டுபண்ணியிராது. ஆயினும் மிதவாதிகள் உடனே அலகாபாத் நகரில் கூடி அடுத்த வருஷமுதல் காங்கிரஸ் ஒழுங்காக நடப்பதற்கு வேண்டிய யோசனைகளைச் செய்து காங்கிரஸின் லட்சியங்கள் இன்னவைதானென்றும், அவைகளை முதலில் அங்கீகரித்த சில சபைகளின் மெம்பர்களாயுள்ளவர்களே அதில் சேரலாமென்றும் தீர்மானஞ்செய்து முடிவுசெய்தார்கள். அது முதல் அமிதவாதிகள் காங்கிரஸில் சம்பந்தப்படாமல் ஒதுங்கியே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

## சட்டசபைகளின் அமைப்பு திருத்தப்பட்டது.

பம்பாய் மாகாண சபையின் பிரதிநிதியாக ஸ்ரீமான் கோகலே 1908-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கு மறுபடியும்



## திருத்தங்களுக்குக் காரணமான மகா புருஷர்கள்.

"பிற்காலத்து ஜனங்கள் தங்கள் அகக்கண்ணால் இக்காலத்தைப் பார்ப்பார்களானால், இரண்டு உருவங்களே முக்கியமாக அவர்களுக்குத் தெரியும். அவ்விரண்டில் தங்களுடைய உருவம் ஒன்று; லார்டு மார்லியின் உருவம் மற்றது. தங்களை நேரில் புகழவேண்டியிருப்பது எனக்கு சங்கடமாயிருந்தபோதிலும், இதுபோன்ற விசேஷ சமயத்தில் அந்த ஒழுங்கைமீறித்தான் நடக்கவேண்டி இருக்கிறது. தாங்கள் ராஜப்பிரதிநிதியாக வந்தவுடனேயே ஜனங்களுடைய புது ஆசைக்கேற்ப, ராஜாங்கத்தை நடத்தும் வேலையில் அவர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது உண்மையில் நியாயமென்று ஒப்புக்கொண்டீர்கள். உடனே தாங்கள் யோசனைசெய்ய ஆரம்பித்து, உத்தேசத் திருத்தங்களை 1907-ம் வருஷத்தில் பிரசுரம் செய்தீர்கள். அவைகள் ஜனங்களுக்குத் திருப்தியை உண்டுபண்ணவில்லை; ஆட்சேபனை பலமாயிருந்தது. மறுபடியும் அவைகளைத் திருத்தினீர்கள். இப்பொழுதேற்பட்டிருக்கிற திருத்தங்கள் அநேகமாகத் தங்களால் பிரேரணை செய்யப்பட்டவைகளே; தங்களுடைய நிர்வாக சபையில் இந்தியருக்குத் தாங்கள் ஸ்தானமுண்டு பண்ணினதுதான் மற்றெல்லாத் திருத்தங்களிலும் மேலானது. தாங்கள் அன்னியில் அத்திருத்தம் உண்டாயிருக்காது. லார்டு கர்ஸனுக்குப் பிறகு தாங்கள் ராஜப்பிரதிநிதியாக வந்தபொழுது தேசத்தில் புயலடித்துக்கொண்டிருந்தது. தங்களுடைய பதவியை வேறொருவர் கையில் தாங்கள் விட்டுச் செல்லுங்கால், வானம் வெளுத்துப் பிரகாசமாயிருக்கும். இதனிலும் பெரிய சந்தோஷம் தங்களுக்கு என்ன உண்டாகக்கூடும்? எத்தனையோ பெயர்கள் ராஜப் பிரதிநிதியாக இருந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அத்தனை பெயர்களிலும் லார்டு வில்லியம்

பெண்டிங், லார்டு கானிங், லார்டு ரிப்பன் ஆகிய மூவருடைய பெயர்களையே ஜனங்கள் நினைப்பில் வைத்துக்கொண்டு பாராட்டுகிறார்கள். அந்த ஜாப்தாவில் தங்களுடைய பெயரும் சேர்க்கப்பட்டு பிற்காலத்தோர்களால் பாராட்டப்படுமென்று இனி நடக்கப்போகிறதை இப்பொழுதே நான் சொல்லுகிறேன். லார்டு மார்லியைப் பற்றி ஒரு வார்த்தைதான் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளை அடக்க அச்சுகூடச்சட்டம் செய்யவும், விசாரணை செய்யாமல் தேசத்து ஜனங்களை வெளிப்படுத்தவும் அவர் இந்தியா மந்திரியாயிருந்தகாலத்தில் அனுமதி கொடுத்ததைத் தவிர, நன்மை யொன்று முண்டாகாம லிருந்திருக்குமானால், அது மனுஷ்ய ஜாதிக்கே குறைவாகவிருந்திருக்கும். தமதாயுள் முழுமையும் உத்தமமான கொள்கைகளையே போதித்து வந்திருக்கிறவரும், வெகு தூரங்களிலுள்ள அன்னிய தேச ஜனங்களாலும் கொண்டாடப்படுகிற வருமாகிய அவர், மற்றவர்களைப்போல் மாமூலுக்குக் கட்டுப்பட்டவராக மாத்திரம் எவ்வாறு இருந்துவிடக்கூடும்? அதிகாரங்களைத் தங்கள் கையிலிருந்து பிறருக்குப் பிரித்துகொடுக்க இஷ்டப்படாத ஒரு கூட்டம் உத்தியோகஸ்தர்களுக்குத் தலைமையை வகிக்கும் கஷ்ட நிலைமையிலும், அவருக்கு இயல்பாயுள்ள பெரியபுத்தி வெளிக்கிளம்பிப் பிரகாசித்துவிட்டது. பிரபுவே, தாங்களும் லார்டு மார்லியுமாகச் சேர்ந்து மாய இருளில் விழுந்து விடுவதாயிருந்த இந்த தேசத்தைக் காப்பாற்றி விட்டீர்கள். ஏனென்றால் ஒரு தேச கவர்ன்மெண்டு எவ்வளவு வல்லமையுள்ளதாயிருந்த போதிலும், கடுமையால் மாத்திரம் ஜனங்களுடைய ஆசைகளை அடக்கிவிட ஒரு நாளும் முடியாது.''



## திருத்தங்களினால் ஏற்பட்ட முக்கிய மாறுதல்கள்.

மேற்கண்டபடி ஸ்ரீமான் கோகலேயால் புகழப்பட்ட சீர்திருத்தங்கள் என்னவென்று விரிவாகச் சொல்வதென்றால் வளருமாகையால், முக்கியமான இரண்டொரு அம்சங்களை மாத்திரம் குறிப்பிடுவோம். சட்டசபை மெம்பர்களின் தொகை முன்னிருந்ததை விட இரண்டுபங்குக்கு அதிகமாக்கப்பட்டது. நிலமுடையவர்களில் பெரிய மனிதர்கள் “ஓட்” கொடுத்து தங்கள் பிரதிநிதிகளாகச் சிலரைப் பொறுக்கி சட்டசபைக்கனுப்ப பாத்தியம் பெற்றார்கள். முனிஸிபாலிட்டிகள் ஜில்லா போர்டுகளின் பிரதிநிதிகள் முன்னிலும் அதிக ஸ்தானம் பெற்றனர். தேச நிர்வாகத்தைப் பற்றி சட்டசபையில் முன்னிலும் அதிகமாகக் கேள்விகள் கேட்கவும், தீர்மானங்களைப் பிரேரணை செய்யவும், மசோதாக்களைத் தயார்செய்து ஆஜர்செய்யவும் சபை மெம்பர்களுக்கு அதிகாரமுண்டாயிற்று. ஏற்கெனவே சொன்னபடி மாகாண கவர்னர்களின் நிர்வாகச் சபைகளிலும், ராஜப்பிரதிநிதியின் நிர்வாகச் சபையிலும் இந்தியர் ஸ்தானம் பெற்றனர். இந்தியா மந்திரியின் ஆலோசனை சபையில் இருவர் இந்தியர்களாக இருக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அந்த ஸ்தானத்திலொன்றை முதல் முதல் அவருக்குக் கொடுப்பதாக லார்டு மார்லி சொல்லியும், ஸ்ரீமான் கோகலே தமக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். இந்தியா மந்திரியின் ஆலோசனை சபையில் ஒருவராயிருந்து இந்தியாவுக்குத் தாம் செய்யக்கூடிய நன்மையைவிட, வெளியிலிருந்து செய்யக்கூடிய நன்மை அதிகமாயிருக்குமென்று நினைத்தே அந்தப் பெரிய பதவியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

## ஒரு புதுத் தீர்வை.

புதுத்திருத்தங்களை அனுசரித்து அமைக்கப்பட்ட சட்டசபையில் 1910-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் கவர்ன்

மெண்டாரால் ஒரு மசோதா ஆஜர் செய்யப்பட்டது. அன்னிய தேசங்களிலிருந்து வரும் புகையிலைச் சுருட்டு, சாராயம், கிரோஸின் எண்ணெய், வெள்ளி, முதலிய சில சமான்களுக்கு விதிக்கப்பட்டு வந்த கடல் சுங்கத் தீர்வையைச் சிறிது அதிகமாக்கி கவர்ன்மெண்டின் வருமானத்தை ஜாஸ்தி செய்யவேண்டுமென்பது அந்த மசோதாவின் கருத்து. யுத்தமுதலிய விசேஷமில்லாத சாதாரண காலத்தில் புதுத்தீர்வை விதிப்பது வழக்கமில்லாத விஷயமானாலும், புகையிலைச் சுருட்டுக்கும் சாராயங்களுக்கும் தீர்வையை அதிகப்படுத்த ஆட்சேபணையில்லையென்றார், சீனா முதலிய பிறதேசங்களுக்கும் இந்தியாவுக்கும் நடந்து வந்த வியாபாரமானது வெள்ளியின் விலையையே பொருத்ததாக இருந்து வருவதால் வெள்ளிக்குத் தீர்வை விதித்தால் இந்தியாவின் வியாபாரம் பாதகப்படுமென்றும், நாடெங்கும் உபயோகத்துக்கு வந்துவிட்ட கிரோஸின் எண்ணெயின் விலை அதிகமாகும்படி அதன் தீர்வையை அதிகப்படுத்தினால் ஏழை ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகுமென்றும் ஸ்ரீமான் கோகலேயும் மற்றப் பிரதிநிதி மெம்பர்களும் சொல்லி ஆட்சேபணை செய்தார்கள். கவர்ன்மெண்டுக்கு அதிகப் பணம் வேண்டியிருக்குமானால் கிரோஸின் எண்ணெய்க்கு உத்தேசிக்கப்பட்ட தீர்வையை அன்னிய தேசச் சர்க்கரைக்கு விதிக்கலாமென்று ஒரு ஆலோசனை சொன்னார்கள். அந்த ஆலோசனைக்கு சாதகமாக 18 மெம்பர்களும் பாதகமாக 39 மெம்பர்களும் அபிப்பிராயம் கொடுத்தார்கள். கடைசியில் அந்த மசோதா அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாய்விட்டது.

மறுநாள் வரவு செலவு திட்டம் ஆஜர் செய்யப்பட்டு ஆலோசனைக்கு வந்தது. சுகாதாரத்துக்காக சுமார் 31 லட்சம் ரூபாய் கடன் வாங்கிச் செலவிட திட்டத்தில் ஏற்பாடு செய்ய



வேண்டுமென்று ஸ்ரீமான் கோகலே ஒரு பிரேரணை செய்து அதைப்பற்றிப் பேசினார். ஆனால் அந்தப் பிரேரணை அங்கீகரிக்கப்படவில்லை. சௌகர்யப்பட்டால் பிறகு சுகாதாரச் செலவை அதிகப்படுத்துகிறதாக கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டனர். அவருடைய கொள்கைகளை அப்போதைக்கப்போது கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளவில்லையாயினும், பிறகு அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் சொன்னதே இதை ரூபிக்கப் போதுமானது. அதைப் பிறகு சொல்வோம்.

## அபின் வரும்படி.

வருஷா வருஷம் ராணுவச் செலவும் சிவில் செலவும் அதிகமாகி வருகிறதைப்பற்றி விசாரித்து ரிபோர்டு செய்யும்படி ஒரு கமிஷனை நியமிக்க வேண்டுமென்று 1911-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் ஸ்ரீமான் கோகலே சட்டசபையில் ஒரு பிரேரணையைச் செய்தார். ஒரு முக்கியமான இனத்தில் கவர்ன்மெண்டின் வரும்படி குறைந்துகொண்டே வந்தது. சில வருஷங்களில் அந்த வரும்படி அடியோடு போய்விடக் கூடியதாயிருந்தது. வரும்படி குறைவதற்குத் தகுந்தாற்போல் செலவு குறையாமல் அதிகப்படுமானால், புது வரிகள் விதிக்க அவசரமுண்டாகுமென்று ஸ்ரீமான் கோகலே பயந்து, செலவைக் குறைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் பொருட்டு மேற்கண்டபடி கமிஷன் நியமிக்க வேண்டுமென்றார். உப்பை உற்பத்தி செய்யும் பாத்தியம் ஏகதேசமாக கவர்ன்மெண்டுக்கிருந்து வருவதுபோல், அபினை உற்பத்திசெய்யும் பாத்தியமும் ஏகதேசத்தில் கவர்ன்மெண்டால் அனுபவிக்கப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அபின் அநேகமாக சீனாவுக்கே

அனுப்பப்பட்டு, அத்தேச ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதனால் அவர்களுடைய தேக திடம் குறைந்துகொண்டே வந்ததால், அந்தேச கவர்ன்மெண்டார் அந்த வழக்கத்தை மாற்றக் கருதி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டார்கள். ஒரு ஜாதி கெட்டுப் போவதால் கிடைக்கும் வருமானம் அதர்ம சம்பாத்தியமென்று பார்லிமெண்டில் பல மேதாவிகள் கருதினார்கள். சீனா கேட்டுக்கொண்டபடி அதற்கு உபகாரம் செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள, அதுவும் சம்மதித்தது. இந்தியாவில் பொது ஜன அபிப்பிராயமும் சீனாவுக்கு சாதகமாயிருந்தது. சீனர்கள் எப்படியாவது முன்னுக்கு வரப் பிரயத்தனப்படுவார்களானால், நம்மால் கூடிய உதவியை அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று பத்திரிகைகள் தாங்கி எழுதின. ஆகையால் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த அபினைப் பத்து வருஷத்தில் வருஷத்துக்குக் கொஞ்சமாகக் குறைத்து அடியோடு நிறுத்தி விடுவதாக இந்தியா கவர்ன்மெண்டு சம்மதித்தது. ஆகையால் அந்த இனத்திலிருந்து கிடைத்து வந்த வரும்படி வருஷாவருஷம் குறைய வேண்டியதுடன் பத்து வருஷத்தில் இல்லாமலே யாய்விடும். கவர்ன்மெண்டார் அதற்குத் தக்கபடி செலவைச் சுருக்கிக்கொள்ள வேண்டுமென்பது ஸ்ரீமான் கோகலே வற்புறுத்த நினைத்த விஷயம். கமிஷன் நியமிக்க கவர்ன்மெண்டு சம்மதிக்கவில்லையாயினும் அவருடைய அபிப்பிராயங்களை நாளடைவில் அனுசரிக்க ஆரம்பித்தனர்.

### மிச்சப் பணத்தைச் செலவிடவேண்டிய வழி.

அபின் வரும்படி குறையுமென்று எதிர்பார்த்ததற்கேற்ப, வருஷாவருஷம் திட்டத்தில் அந்த வரும்படியைக்



கொஞ்சங்கொஞ்சமாகக் குறைத்து கவர்ன்மெண்டார் திட்டமேற்படுத்துவது வழக்கம். ஆனால் அந்தந்த வருஷ திட்டத்தைக் காட்டிலும் சில சமயங்களில் அந்த வரும்படி அதிகமாகக் கிடைத்து வந்தது. அப்படிக் கிடைத்த தொகையை ஜனங்களின் சுகாதாரத்துக் கேற்ற வழிகளில் செலவிட வேண்டுமென்றும், ரயில் பாதையில் செலவிடக் கூடாதென்றும் ஸ்ரீமான் கோகலே வற்புறுத்தினவர். சுகாதார வேலைகளுக்காக மிச்சப் பணத்தைச் செலவிடுவதாயிருந்தால் ஒரு வருஷம் கிடைத்ததுபோல் இன்னொரு வருஷமும் திட்டத்துக்கு அதிகமாக வரும்படி கிடைக்குமென்று எப்படி எதிர்பார்க்கக் கூடுமென்றும், தண்ணீர்க்குழாய் வைத்தல் முதலிய சுகாதாரவேலைகளைத் தொட்டுக்கொண்டால் வருஷாவருஷம் தொகை கொடுத்துக்கொண்டே போனாலொழிய வேலைகள் அரைகுறையாக நின்றுவிடவேண்டியிருக்குமென்றும், ஆகையால் நிச்சயமில்லாத வரும்படியை நம்பிக் கையிலுள்ள பணத்தைச் செலவிட்டால் அது வீணாய் விடுமென்றும் எதிர்வாதம் சொல்லப்பட்டது. இந்த ஆட்சேபனைக்கு வெகு சுலபமாக ஸ்ரீமான் கோகலே பதில் சொன்னதானது அவருடைய சமயோசித புத்தியைக் காட்டும். ஒரு வருஷத்தில் மிச்சப்படும் தொகையைப் பல ஊர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து ஒரே சமயத்தில் பல வேலைகளைத் தொட்டுக்கொண்டால் மேற்குறிப்பிட்ட ஆட்சேபனைக் கிடங்கொடுக்கும். கையிலுள்ள தொகையைக்கொண்டு சில ஊர்களின் சுகாதாரவேலைகளை ஆரம்பஞ் செய்து முடித்து விடுகிறதாக உத்தேசித்து அந்த ஊர்களுக்கு மாத்திரம் பிரித்துக் கொடுத்துவிட்டால், வருஷங் கொஞ்சமாக அத்தொகையை அவ்வூர்கள் செலவிட்டு சில வருஷங்களில் வேலையை முடித்து விடக்கூடும். எதிர்வாதத்தின்படி ஒரு ஊருக்கும் நன்

மையுண்டாக வழியில்லை. பின் சொன்ன முறைப்படி சில ஊர்களின் குறைகள் நிவர்த்தியாய்விடும். மறுபடியும் ஒரு வருஷத்தில் தொகை மிச்சப்படுமானால், வேறு சில ஊர்களுக்குக் கொடுத்துஉதவலாம். மேற்கண்ட வாதத்தை அந்த சமயத்தில் கவர்ன்மெண்டு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்ட போதிலும் பிறகு நாளடைவில் சுகாதார அபிவிருத்தியின் பொருட்டு முன்னிலும் தாராளமாகச் செலவிட ஆரம்பித்ததிலிருந்து, ஸ்ரீமான் கோகலேயின் வேலை வீணாய்விடவில்லையென்று தெரியும்.

## பிரதமக் கல்வியைப்பற்றிய மசோதா.

சட்டசபைகள் திருத்தம்பெற்று ஜனப்பிரதிநிதிகளுக்கு ஆதிக்கம் அதிகமாக வேண்டுமென்றும், சுகாதாரம் விருத்தியடைய வேண்டுமென்றும், பிரதமக்கல்வி பரவவேண்டுமென்றும் ஸ்ரீமான் கோகலே விரும்பிப் பலவருஷங்களாக அவ்விஷயங்களின் அவசியத்தை இந்தியாவில் சட்டசபையிலும் காங்கிரஸிலும், இங்கிலாந்தில் பொதுஜனக்கூட்டங்களுக்கு முன்னும் பார்லிமெண்டு மெம்பர்களிடத்திலும் வற்புறுத்தி வந்ததற்கேற்ப சட்டசபைகளின் அமைப்பு ஒருவாறு திருத்தமடைந்ததானது இன்னும் சில வருஷங்களாகிற வரையில் போதுமென்று அவர் நினைத்து அவ்விஷயத்தில் ஓரளவு திருப்தியடைந்தவராய் விட்டார். ஜனங்களின் சுகாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய வழிகளில் முனிஸிபாலிட்டிகள் செலவிடுவதற்காக 1908ம் வருஷம் முதல் வருஷமொன்றுக்கு 30 லட்சம் ரூபாய் கொடுத்து வருகிறதாக அந்த வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மிகவும் பெரிதாகிய இந்த தேசத்தில் சுகாதாரச் செலவுகளுக்காக வருஷமொன்றுக்கு 30 லட்சம்



ஜனவரி மாதத்தில் கவர்ன்மெண்டார் செய்தார்கள். கல்வி மெம்பர் ஸ்தானத்தை முதல் முதல் வகித்தவர். ஹார்கோர்டு பட்லர் கல்வியின் பெருமையை நன்கறிந்தவராகையால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமான் கோகலே ஒரு மசோதாவைத் தயார்செய்து சட்டசபையில் அதை ஆஜர்செய்ய அனுமதி கேட்டார். அனுமதி கொடுக்கப்பட்டது. மசோதாவைச் சட்டசபையில் ஆஜர்செய்து அதைத் தாங்கி ஸ்ரீமான் கோகலே பேசிய பேச்சானது அவருடைய சிறந்த பிரசங்கங்களில் ஒன்று. "ஒரு அவசியத்தைப் பல வருஷங்களாக இந்த சட்டசபையில் அடிக்கடி நான் எடுத்துச் சொல்லிவந்திருக்கிறேன்; கவர்ன்மெண்டை நடத்துகிறவர்கள் அன்னிய தேசத்தில் பிறந்தவர்களாயினும், இந்த தேசத்தில் பிறந்தவர்களைப்போல் அபிமானமுள்ளவர்களென்று நாங்கள் நினைக்கும்படியிருக்கவேண்டியது. மற்றத் தேசங்களில் அந்தந்த தேச கவர்ன்மெண்டுகள் தங்களுடைய ஜனங்கள் பொருட்டு என்னென்ன பொறுப்புகளை ஏற்றுக்கொள்கின்றனவோ அதே பொறுப்புகளை இந்தியா கவர்ன்மெண்டும் ஏற்றுக்கொண்டால், மேற்சொன்ன மாதிரி நாங்கள் நினைக்கக்கூடும். தேசம் அமைதியாயிருக்கும்படி பார்த்துக்கொள்வது ஜனங்களின் பொறுப்பென்பதை நாங்களும் உணர்ந்து அம்மாதிரி நடக்கவேண்டும். கவர்ன்மெண்டும் ஜனங்களும் சேர்ந்து உழைத்துச் செய்யவேண்டியிருக்கிற பல பெரிய வேலைகளிலும் தேசமெங்கும் கல்வி பரவும்படி செய்யவேண்டியதாகிய வேலையே மிகப் பெரிது. மெதுவாகத்தான் அந்தவேலை நடக்கக்கூடும்; ஆகையால் அதை சீக்கிரம் ஆரம்பிக்க வேண்டியதுதான் நமது கடமை. அவ்வாறு இப்பொழுதே ஆரம்பம்செய்து, ஜனங்களும் கவர்ன்மெண்டும் சேர்ந்து உழைத்தால் இன்னொரு தலைமுறை கிளம்பு

வதற்குள் அந்தவேலை நிறைவேறிவிடும். நிறைவேறிவிட்டாலோ, அடுத்த தலைமுறை அதிக சக்தியுடன் தங்கள் வேலையைச் செய்யக்கூடும். அவ்விதப் பலனை உத்தேசித்து இப்பொழுது வேலைசெய்யும் நமக்கு அந்தப் பலனுண்டாகுமென்ற நம்பிக்கையே போதுமான பிரதிப் பிரயோஜனம். வெகு தூரத்திலிருக்கிற புண்ணிய க்ஷேத்திரத்துக்குப் போய்விடவேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை; அதை உத்தேசித்து ஓரடியாவது எடுத்துவைத்தால் போதுமென்றே விரும்புகிறேன்" என்று அப்பொழுது பேசி முடித்தார்.

சட்டசபையில் மசோதா ஆஜர்செய்யப்பட்டதும் கவர்ன்மெண்டாரே அதனிடத்தில் தயவாயிருந்தார்கள். தேசமெங்கும் ஜனங்கள் அதை ஆதரித்தார்கள். பத்திரிகைகள் தாங்கி எழுதின. இங்கிலாந்தில் பல கனவான்கள் இந்தியா மந்திரியைப் பேட்டிகண்டு அவர் அந்த மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். குறிகள் எல்லாம் நன்றாயிருந்தன. ஆகையால் மசோதா சட்டமாய் விடக்கூடுமென்று நம்பக்கூடியதாயிருந்தது. ஆனால் சட்டசபையில் சிலரை ஒரு கமிட்டியாக வழக்கப்படி நியமித்து மசோதாவை அவர்கள் ஆராய்ந்து திருத்தும்படி செய்யவேண்டுமென்று ஸ்ரீமான் கோகலே கேட்டுக்கொண்டபொழுது குறுக்குச்சுவர் எடுத்ததுபோல் மாகாண கவர்ன்மெண்டுகளின் ஆட்சேபனை கிளம்பிற்று. குழந்தைகள் அவசியம் படித்துத்தானாகவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டாயப் படுத்தாமலிருக்கிற நிலைமையிலேயே கல்வி பரவிவருகிற வேகம் திருப்தியாயிருக்கிறதென்று மாகாண கவர்ன்மெண்டுகள் எழுதியிருந்தன. "இப்பொழுது கல்வி பரவிவரும் வேகத்தைக்கொண்டு ஒரு சிறுகணக்குப் போட்டுக் காட்டுகிறேன். தேசத்திலுள்ள ஆண்பெண் எல்லாக் குழந்தைகளும் படித்தவர்களாக எத்-



ரூபாய் போதாதாயினும் அவ் விஷயத்தின் அவசியத்தை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு நடத்த ஆரம்பித்துவிட்டபடியால் நாளாகவாக அதைக்காட்டிலும் அதிகத்தொகை கிடைக்கலாமென்று ஸ்ரீமான் கோகலே நம்பினார். ஏழைகளாகிய முனிஸிபாலிட்டிகள் சுகாதாரவிருத்திக்கேற்ற பெரிய செலவுகளைச் செய்ய ஐவேஜி யில்லாதவைகள் என்பதையும், அவைகளுக்கு மாகாண கவர்ன்மெண்டுகள் கொடுக்கும் சொற்பத்தொகைகள் போதாவென்பதையும், இந்தியா கவர்ன்மெண்டு கொடுத்து உதவினால்தான் வேலை நடக்குமென்பதையும், அவ்வாறு கொடுத்து உதவுவது அந்த கவர்ன்மெண்டின் கடமை என்பதையும் ஸ்ரீமான் கோகலே வருஷா வருஷம் வற்புறுத்தி வந்ததை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டதே பெரிய வெற்றி. இனிப் பிரதமகல்வியைப் பரவ செய்யவேண்டிய விஷயத்தில் அதிகக்கவனம் செலுத்தவேண்டுமென்று அவர் நினைத்து அவ் விஷயமாக அடிக்கடி சட்டசபையில் பிரஸ்தாபத்தை உண்டுபண்ணி வந்தார். எழுதப்படிக்க அறியாது அஞ்ஞான இருளில் திண்டாடுகிற நம் ஜனங்களின் பரிதாப நிலைமையைக் குறித்து "வெல்பி கமிஷன்" முன் சாட்சி சொன்னது முதலே சமயம் கிடைத்தபொழுதெல்லாம் அவர் பேசிவந்தபடியால், அவ் விஷயத்தின் அவசியம் அவருடைய மனதில் வேரூன்றியிருந்ததென்பது தெரியும். "அந்தந்த தேசத்திலுள்ள குழந்தைகள் படிக்கும்படி கட்டாயப் படுத்துவதும், அவர்கள் செலவு செய்யாமலேயே கல்வியைக் கற்கும்படி செய்யவேண்டியதும் தங்கள் கடமையென்று நாகரீக தேசங்களின் கவர்ன்மெண்டுகள் ஒப்புக்கொண்டு அவ்வாறே நடத்தி வருகின்றன. பரோடா சமஸ்தானத்தில் கேக்வார் மகாராஜா அம்மாதிரி செய்ய ஏற்பாடு செய்துவிட்டார். [illegible]டாவில் அவ்வாறு செய்யக்

கூடியதை பிரிட்டிஷ் இந்தியாவில் இந்திய கவர்ன்மெண்டும் செய்யக் கூடுந்தான்" என்று 1905ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசியபொழுதே சொல்லியிருந்தார். ஆகையால் சட்டசபையில் ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் தீர்மானங்களைப் பிரேரேபணைசெய்ய அதிகாரம் பெற்றவுடன், 1910ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் அவ்விஷயமாக ஒரு பிரேரேபணையைச் செய்து அதை வற்புறுத்தி வெகு நன்றாகப் பேசினார். பிரதமக்கல்வியைக் குழந்தைகளுக்கு இனாமாகபோதிக்க ஆரம்பம் செய்யவேண்டுமென்று அவர் செய்த அந்தப் பிரேரேபணையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கவில்லையாயினும், அவ்விஷயத்தைத் தாங்களே கவனிப்பதாகச் சொன்னார்கள். இந்தியா தேசம் அவருடைய அபிப்பிராயத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதாயிருந்தால் பணச்செலவு ஏராளமாக ஆகுமென்றும், அவ்வளவு பெரிய செலவை ஏற்றுக்கொள்ள பொக்கிஷத்தின் நிலைமை கூடியதாயில்லையென்றும் அந்த சமயத்தில் கவர்ன்மெண்டார் சமாதானஞ் சொன்னபடியால், சிலதினங்கழிந்து வரவு செலவு திட்ட மீட்டிங் நடந்தபொழுது "மற்ற இனங்களில் செலவைமட்டுப்படுத்தி பிரதமக்கல்வி சுகாதாரம் முதலிய இனங்களில் செலவிடப் பணத்தை மிச்சப் படுத்தக் கூடாமற்போனால், புதிதாக வரி விதித்தாவது இந்த வழிகளிற் செலவிட வேண்டுமென்று சொல்ல நான் தயாராகவிருக்கிறேன்" என்று அழுத்தமாக அவர் சொன்னார். அவருடைய வாதங்களின் நியாயம் கவர்ன்மெண்டாருடைய புத்தியில் பதிந்து விட்டாற்போல் தோன்றுகிறது. ஏனென்றால், கல்வி இலாக்காவைத் தனியாகப் பிரித்து நிர்வாக சபைமெம்பர்களில் ஒருவர் அந்த இலாக்காவின் தலைமையை வகிக்கும்படி 1911ம் வருஷம்,



தனை வருஷமாகுமென்று அதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள். சென்ற 10 வருஷத்தில் பள்ளிக்கூடங்களிலுள்ள பையன்களின் தொகை 32 லட்சத்திலிருந்து 40 லட்சமாக உயர்ந்திருக்கிறது; அதாவது சுமார் 7½ லட்சம் பிள்ளைகள் அதிகமாயிருக்கிறார்கள். அதே 10 வருஷத்தில் பெண்களின் தொகை 5 லட்சத்திலிருந்து 7 லட்சமாயிருக்கிறது; அதாவது சுமார் 1¾ லட்சம் பெண்கள் அதிகமாயிருக்கிறார்கள். இந்தக் கணக்குப்படி வருஷமொன்றுக்கு 75 ஆயிரம் பையன்களும் 17 லட்சம் பெண்களும் அதிகமாகிறார்கள். இனிமேல் ஜனத்தொகை பெருகப் போகிறதில்லையென்றே வைத்துக்கொள்வோம். ஆனால் பெருகாமலிராது! மேற்சொன்ன தாமஷ்படி ஆண்பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்கூடத்துக்குப் போக 115 வருஷமாகும்; பெண்கள் எல்லோரும் பள்ளிக்கூடத்துக்குப் போக 665 வருஷமாகும்" என்று பல நியாயங்களைக் காட்டி அவர் பேசியும் முடிவில் பிரயோஜனப் படவில்லை. மசோதாவுக்கு பாதகமாக 38 மெம்பர்களும் சாதகமாக 13 மெம்பர்களுமே அபிப்பிராயங்கொடுத்ததால், மசோதா நிறைவேறவில்லை. ஆயினும் அதுமுதல் பிரதமக் கல்விக்காக கவர்ன்மெண்டார் அதிகப் பணம் செலவிட்டு வருவதால், நாளடைவில் ஸ்ரீமான் கோகலேயின் எண்ணம் நிறைவேறுமென்று நாம் நம்ப இடமுண்டு. கல்விக் கடலாகிய ஸ்ரீமான் ஸர் C. சங்கரன் நாயர் இப்பொழுது கல்விமெம்பர் ஸ்தானத்தைப் பெற்றிருப்பதால், அவருடைய காலத்தில் ஸ்ரீமான் கோகலேயின் முக்கிய ஆசையை நிறைவேற்றிவைப்பாரென்று தேச முழுமையும் நம்பியிருக்கிறது.

---

## தென் ஆபிரிக்கா இந்தியர்களின் நிலைமை.

இந்த சமயத்தில் தென் ஆபிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை கவலைக்கிடமாய்க் கொண்டிருந்தது. அது பிரிட்டிஷாரும் டச்சுக்காரரும் குடியேறிய நாடு. பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்டது. அங்கு வேலைசெய்ய இந்தியர்களைக் கூட்டிக்கொண்டுபோக அநுமதி கொடுக்கவேண்டுமென்று பல வருஷங்களுக்குமுன் அந்நாட்டு கவர்னர் ஜெனரல் இந்திய கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டார். அங்கேயே இந்தியர்கள் தங்கிவிட இஷ்டப்பட்டால் அவர்களுக்கு சில சௌகர்யங்கள் செய்துகொடுக்க அத்தேச கவர்ன்மெண்டு ஒப்புக்கொண்டால், அவர்களை அழைத்துப்போக அநுமதி கொடுக்கிறதாக அப்பொழுது கவர்னர் ஜெனரலாயிருந்த புண்ணியவான் சொல்ல, தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டு அவ்வாறே ஒப்புக்கொண்டது. சில வருஷங்களாகிற வரையில் இந்தியர்கள் அங்கு அன்பாகவே நடத்தப்பட்டு வந்தார்கள். வெறும் பாலைவனமாக விருந்த அந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் தோட்டங்களும் துரவுகளும் உண்டாய் விட்டன. பணம் கொழிக்க ஆரம்பித்தது. இந்தியர்களுடைய பிரயாசையினாலேயே தங்கள் நாடு செழித்த தென்பதை அத்தேச ஜனங்கள் செல்வச் செருக்கால் மறந்து, தாங்கள் உயர்ந்தவர்கள் போலும் இந்தியர்கள் தாழ்ந்தவர்கள் போலும் நினைத்து நடக்க ஆரம்பித்தார்கள். இந்தியர்களில் யாரையும் "கூலி" யென்றே அவர்கள் சொல்வது வழக்கம். 'கூலி வேலைக்காரன்' என்றும், 'கூலி வியாபாரி' என்றும், 'கூலி பாரிஸ்டர்' என்றும் நம்மவரை இகழத் தலைப்பட்டார்கள். தெருக்களில் இந்தியர்கள் தாராளமாக நடமாடக்கூடாது. பட்டணத்தில் குடியிருக்கக் கூடாது. நமது தேசத்தில் பறைச்



சேரிகள் இருப்பதுபோல் அங்கு இந்தியர்களுக்கு ஒதுக்கமாகக் குடியிருப்பு ஏற்பட்டிருக்கிறது. டிராம்வண்டிகளில் ஏறக்கூடாது. ரயில்வண்டிகளில் உயர் வகுப்புகளில் உட்காரக்கூடாது. கிறிஸ்தவக் கோவில்களில் இந்தியக் கிறிஸ்தவர்கள் கூட நுழையக்கூடாது. ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்கு எதேச்சையாகப் போகக்கூடாது. அவர்களுடைய எல்லாத் துக்கங்களையும் சொல்வதென்றால் வளரும். ஒருகாரியமாக அங்கு போன பம்பாய் பாரிஸ்டர் ஸ்ரீமான் காந்தி இந்த அநியாயங்களைக் கண்டு மனங்கசிந்து தம்மால் கூடியவரையில் பாடுபட்டு இந்தியர்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று மனதில் தீர்மானித்துக்கொண்டார். மேற் சொன்ன கஷ்டங்களையெல்லாம்விட இரண்டு கஷ்டங்கள் பொறுக்கக்கூடாதவைகளாக விருந்தன. தோட்டங்களில் வேலை செய்கிறதாகப் பத்திரமெழுதிக் கொடுத்து அங்குபோகிறவர்கள் அந்த ஒப்பந்தப் பத்திரத்தில் குறித்த கெடுவானவுடன் அங்கேயே யிருக்க இஷ்டப்பட்டால் ஒன்று மறுபடியும் ஒருதோட்டத்தில் வேலைசெய்ய சம்மதித்துப் பத்திரமெழுதிக் கொடுக்கவேண்டும்; அல்லது வருஷமொன்றுக்கு மூன்றுபவுன் வரி செலுத்தவேண்டும். ஒருதடவை தோட்டத்தில் வேலைசெய்து வெளிப் பட்டவர்கள் மறுபடி தோட்டத்தில் வேலைசெய்ய ஒருநாளும் சம்மதிக்கமாட்டார்கள். அந்த வாழ்வைவிட நரக அவஸ்தை அதிகக் கஷ்டமானதாயிருக்கமுடியாது. மூன்றுபவுனை ஒரே காலத்தில் கொடுப்பது ஏழைகளுக்குக் கூடாதகாரியம். எந்த தீச்செயலைச் செய்தாவது 3 பவுனைக்கொடுத்துவிட்டு மறுபடி தோட்டவேலைக்குப் போகாமல் தப்பித்துக்கொள்ள ஜனங்கள் விரும்பி ஆண்களிற் சிலர் திருடவும் பெண்களிற் சிலர் விபசாரஞ் செய்தும் கெட்டுப்போக நேரிட்டது. துன்மார்க்கத்தைக்

ஆடிந்து ஸன்மார்க்கத்தை ஆதரிக்கக் கடமைப்பட்ட கெவர்ன்மெண்டின் நிர்ப்பந்தம் சகிக்காமல் பிரஜைகள் துன்மார்க்கத்தைக் கடைப்பிடிக் தொழுக நேருவது மிகவும் பரிதாபமான நிலைமை. அந்த வரியைவிடப் பெரிய வேதனை வேறொன்றுமிருந்தது. ஹிந்து மதாச்சாரப்படியும் முகம்மதிய மதாச்சாரப்படியும் நடந்த விவாகங்களை அந்தேச சட்டம் விவாகமாகவே பாவிக்கவில்லை. ஹிந்துக்களுடைய மனைவிகளையும் முகம்மதியர்களுடைய மனைவிகளையும் வைப்பாட்டிகளாகவே கருதி அவர்களுடைய சந்ததிகளைக் கிரமமான வாரிஸுகளாக நினைக்காமல் விபசாரத்தால் பிறந்த குண்ட கோளர்கள்போல் நடத்தி வந்தது. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல், உடம்பை உழைத்து மானமாக் ஜீவிக்கலா மென்று போன விடத்தில் அவிசாரிப்பட்டம்பெற்றுக்கொண்டு மானமற்று உயிர் வாழ்ந்து என்ன நன்மை; ஆகையால் என்ன கஷ்டப்பட்டாவது இந்த அவமானத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமான் காந்தியும் பிறரும் தீர்மானித்துக் கொண்டார்கள். நமது தேசத்துப் பெண்களும் புருஷர்களுடன் சேர்ந்து துன்பப்பட முன் வந்ததிலிருந்து எவ்வளவு அவர்கள்மனம் நொந்து போயிருந்தார்களென்பது தெரியும். என்ன செய்தால் இந்தக் கஷ்டம் நிவர்த்தியாகும்? யாரிடத்தில் சொன்னால் கேட்பார்கள்? அதுவோ சுய ஆட்சி பெற்றகுடியேற்ற நாடு. அதனுடைய உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிட்டுக்கொள்ள பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்கும் சுதந்தரமில்லை. ஆனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அக்கரை யெடுத்துக்கொண்டால், தென் ஆப்பிரிக்கா மந்திரிகள் தாட்சண்ணியத்துக்காக ஒருசமயம் இணங்கி வரலாம். இணங்கிவந்தாலும் வராவிடினும் தர்மம் தலைகாக்கும் என்ற ஸத்யவாக்கியத்தை நம்பித் தங்களுடைய



கடமையைச் செய்யவேண்டுமென்று அங்குள்ள நமது சகோதரர்களும் சகோதரிகளும் தீர்மானஞ்செய்து கொண்டார்கள். மூன்றுபவுன் வரியைக்கொடுக்க வேண்டியதில்லை. அனுமதி பெறாமலே ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குப் போக வேண்டியது; சீட்டுவாங்கிக் கொள்ளாமல் தெருக்களில் சாமான் விற்கப்புறப்படவேண்டியது. அதிகாரிகள் என்னசெய்வார்கள்? கைது செய்து கொண்டு போய் சிறைச்சாலைக்கு அனுப்பினால், திமிறாமல் சாந்தமாகப் போகவேண்டியது. எவ்வளவு பெயர்களை எத்தனை நாளைக்குச் சிறையிலடைப்பார்கள்? என்று அவர்கள் ஆலோசித்துக்கொண்டு மேற்சொன்னபடி விதிகளை மீறிநடந்து கூட்டங் கூட்டமாக சிறைக்குப்போகத் தலைப்பட்டார்கள். ஸ்ரீமான் காந்தி பரம்பரையாக திவான்கள் வம்சத்தில் பிறந்தவராயினும், பாரிஸ்டர் பதவியை வகித்தவராயினும் மகரிஷிகள் போன்ற குணக்கடலாயினும் பலதடவை சிறையிலிருந்திருக்கிறார். விலங்கு தரித்துத் தெருவோடு பலர் பார்க்கப் போயிருக்கிறார். நெற்றி வியர்வை நிலத்தில்விழ வேலைசெய்திருக்கிறார். அவருடைய உத்தம பத்தினியும் சிறையிலிருந்து அவஸ்தைகளை அனுபவித்திருக்கிறார். இன்னும் அளவற்ற சாது ஜனங்கள் சிறையிலிருந்திருக்கிறார்கள்.

## ஸ்ரீமான் கோகலேயின் தூது.

இவ்வாறு நடக்கும்பொழுது 1912ம்வருஷத்தில் ஸ்ரீமான் கோகலே இங்கிலாந்திலிருந்தார். தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் பார்த்து அறிந்து கொள்ளும்படி ஸ்ரீமான் காந்தி அவரைக் கேட்டுக்கொண்டார். பிரிட்டிஷ் மந்திரிமார்களைக் கண்டு யோசித்தபொழுது, அவர்களும் அவ்வாறே சொன்னார்கள். பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு

மந்திரி தென் ஆப்பிரிக்கா மந்திரிமார்களுக்குக் கடிதமெழுதி ஸ்ரீமான் கோகலே இந்தியரின் நிலைமையை நேரில் கண்டு அறிந்துகொள்வதற்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். நமது ராஜப்பிரதிநிதியாயுள்ள மகாபுருஷனாகிய லார்டு ஹார்டிஞ்சும் ஸ்ரீமான் கோகலேயின் எண்ணத்திற்கு அனுகூலமாகவே சொல்லியிருந்தார். ஆகையால் இவ்வித சுபக்குறிகளுடன் அவர் அங்குபோய்ச் சேர்ந்ததற்கேற்ப, அங்கு உபசாரங்களும் பலமாயிருந்தன. ஜெனரல்போதா, ஜெனரல் ஸ்மட்ஸ் என்ற இரண்டு முக்கியமான மந்திரிகளும் அவரிடத்தில் வெகுமரியாதையுடன் நடந்துகொண்டு பல தடவை கலந்துபேசினார்கள். இந்தியர்களுடைய கட்சிமிகவும் நியாயமே என்றும், ஆனால் தென் ஆப்பிரிக்கா வெள்ளைஜனங்களின் மனோபாவமானது இந்தியர்களுக்கு எல்லா சுதந்தரங்களும் கிடைக்க இடங்கொடுக்காதாயினும் மூன்றுபவுன் வரியைக் கட்டாயம் தள்ளிவிடுகிறதாகவும், மற்ற விஷயங்களில் என்ன சௌகர்யங்களைச் செய்யக்கூடுமோ அவைகளைச் செய்கிறதாகவும் வாக்குறுதி செய்தார்கள். ஒவ்வொரு ஊராய் ஸ்ரீமான் கோகலே போனபொழுது அந்தந்த ஊர் முனிஸிபல் சேர்மன் அவரை எதிர்கொண்டழைத்தார்; இந்தியர்கள் கூட்டங்கூடி அவரை உபசரித்தார்கள். அவர் போனவிடமெல்லாம் திருநாள் போலிருந்தது, இவ்வாறு தென் ஆப்பிரிக்கா அதிகாரிகளுடன் பேசிமுடித்துக்கொண்டு ஸ்ரீமான் கோகலே இந்தியாவுக்குத் திரும்பிவந்து, தாம்போய்வந்ததைப்பற்றி விவரமாக இத்தேச ஜனங்களுக்கு அறிவித்தார். இந்தியர்களுக்கு அங்குள்ள எல்லாக்குறைகளும் நீங்கும்படி பிடிவாதஞ் செய்ய வேண்டுமேயல்லாது சிலகுறைகள் மாத்திரம் நீங்கசம்மதிப்பது சரியல்லவென்று சிலர் அதிருப்திப்பட்டார். தென் ஆப்பிரிக்கா



வெள்ளை ஜனங்களுள்ள நிலைமையில் எல்லாக் குறைகளும் இப்பொழுது நீங்கப்பிரயத்தனஞ் செய்வது பிரயோஜனப்படாதென்று ஸ்ரீமான் காந்தியே நினைத்து சில கஷ்டங்கள் நீங்கினாற்போதுமென்று தான் அபிப்பிராயப்பட்டார். ஆனால் தென் ஆப்பிரிக்கா மந்திரிகள் ஸ்ரீமான் கோகலேயிடத்தில் ஏற்றுக்கொண்ட காரியங்களைக்கூட செய்யக்கூடாதவர்களாய் முன்போல் 3 பவுன் வரியை வசூல் செய்ய ஆரம்பித்தனர். கவர்ன்மெண்டு அதிகாரிகள் சொன்ன சொல்தவறி நடக்க ஆரம்பித்தும், ஜனங்கள் கோபங்கொண்டு முன்போல் சிறைக்குப்போக ஆரம்பித்தனர். முன்னிலும் கலகம் பெரிதாய் விட்டது. சம்பாதிக்கும் ஆண்கள் சிறைக்குப்போய்விட்டால், பெண்களும் குழந்தைகளும் எவ்வாறு காலட்சேபஞ் செய்யக்கூடும்? ஆகையால் இந்த சமயத்தில் இந்தியா பண உதவிசெய்தால்தான் ஆரம்பித்த காரியத்தை நிறைவேற்ற முடியுமென்று ஸ்ரீமான் காந்தியும் கோகலேயும் கேட்டுக்கொள்ள இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் தாராளமாகப் பண மனுப்பினார்கள். பல ஆங்கிலேயர்களும் பொருளுதவி செய்தார்கள். நாள்தோறும் அங்கு நடந்த அக்கிரமங்களைத் தந்திவழியாக இந்தியா கேட்டு நடுங்கிற்று. இந்த நிலைமையில நமது ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு முன்வந்து தாம் ப்ரிட்டிஷ் மந்திரிகளுக்கு எழுதியிருப்பதாயும், இந்தியர்கள் பயப்பட வேண்டாமென்றும் தைரியஞ்சொல்ல, ஒருவாறு நம்பிக்கையுண்டாயிற்று. இது பெரிய கதையாகையால் சுருக்கமாகச் சொல்லிவிடுவோம். கடைசியாக மூன்று பவுன் வரிதள்ளப்பட்டது. இந்தியர்களின் விவாகங்களை அங்கீகரித்துச் சட்டமேற்படுத்தப்பட்டது. வேறு சில சிறுகுறைகளும் நீக்கப்பட்டன. மற்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்களுக்குள்ள குறைகள் அங்கும் இரு

ந்து கொண்டு தானிருக்கின்றன. அக்குறைகள் நீங்கி பிரிட்டிஷ் பிரஜைகளுக்குள்ள எல்லா சுதந்தரங்களும் நமக்குக் கிடைக்கவேண்டியதே நியாயம். ஆனால் அவைகளை வற்புறுத்த அது தகுந்த சமயமல்ல. ஏழை ஜனங்கள் சிறையிலிருந்து கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் வெகுநாள் பிடிக்கக்கூடிய வாதத்திலிறங்குவது புத்திசாலித்தனமாயிருந்திருக்காது. அந்தசமயத்தில் ஸ்ரீமான் கோகலே பேசிக் கொண்ட ராஜிநிபந்தனைகளின்படி அத்தேசத்தில் நம்மவர்களுக்குள்ள குறைகள் நீங்கிப்போய் விட்டதாக அவர் நினைக்கவுமில்லை; அவைகள் நீங்கவுமில்லை. முன்னிருந்த குறைகள் இப்பொழுதும் இருக்கின்றன. மற்றக்குடியேற்ற நாடுகளிலும் அம்மாதிரிக்குறைகள் இருந்து கொண்டுதானிருக்கின்றன. ஆகையால் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் எல்லாவற்றிலும் இந்தியர்களுக்குள்ள குறைகள் நீங்கும் காலம் வரும் பொழுதுதான் தென்ஆபிரிக்காவிலும் நீங்கும். ஆனால் அங்கு இந்தியர்களுக்கு ஏற்பட்டிருந்த விசேஷக் கஷ்டங்கள் நீங்கிவிட்டன. அவைகளை நீக்கவேண்டுமென்றே ஸ்ரீமான் காந்தியும் கோகலேயும் கையில் கங்கணங் கட்டிக் கொண்டார்கள். அவர்கள் உத்தேசித்தகாரியம் நிறைவேறிவிட்டது. பாக்கியுள்ள குறைகளை நீக்க நாம் பிரயத்தனப்படுவதை ஸ்ரீமான் கோகலே தடுக்கவில்லை.

## பப்ளிக் ஸேர்விஸ் கமிஷன்.

அவர் தென்ஆபிரிக்காவிலிருக்கையிலேயே இந்தியாவின் ஆளுகை சம்பந்தமாகச் சில விஷயங்களைப் பற்றி விசாரணை செய்து ரிபோர்ட் செய்வதற்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு கமிஷனை நியமித்தார்கள். ஸர்க்கார் உத்தியோகங்களை எவ்வளவு இன்னும் இந்தியர்களுக்குக் கொடுக்கலாமென்



றும், ஸிவில் ஸேர்விஸ் இலாக்கா உத்தியோகங்களுக்குத் தகுதியுள்ளவர்களைப் பொறுக்கி யெடுப்பதற்காக இங்கிலாந்தில் நடத்தப்படும் போட்டிப் பரீக்ஷையை இந்தியாவிலும் நடத்தவேண்டுமா என்றும், நடத்துவது உசிதமா வென்றும், விசாரித்துத் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி அந்தக்கமிஷனை கவர்ன்மெண்டார் நியமித்தார்கள். ஸர்க்கார் உத்தியோகங்களைப் பெற இந்தியர்களுக்குள்ள யோக்கியதையையும் பாத்தியங்களையும் ஸ்ரீமான் கோகலே வெகுநாளாக ஆராய்ந்து அறிந்தவராகையால் அந்தக் கமிஷன் மெம்பர்களில் அவரொருவராக நியமிக்கப்பட்டதானது தேசமெங்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணிற்று. ஸர்க்கார் உத்தியோகங்களை இந்தியர்கள் தங்களுடைய பாத்தியங்களுக்குத் தக்கபடி பெற விரும்புவதால் அவர்களுக்கு இயற்கையாயுள்ள யோக்கியதைகளே நாளடைவில் மழுங்கிப் போய் விடுகின்றனவென்று அவர் நடுங்கினவராகையாலும், இந்தியர்களின் யோக்கியதைகளையும் பாத்தியங்களையும் பல வருஷங்களாகப் படித்தறிந்தவராகையாலும் சாட்சிகளைக் கொண்டு கமிஷன் மெம்பர்களுக்கு அவைகளை வெளிப்படுத்திக் காட்ட அவரினும் சிறந்தவராக வேறொருவரையும் கவர்ன்மெண்டார் நியமித்திருக்க முடியாது. சென்னை ஹைகோர்ட் ஜட்ஜியான ஸ்ரீமான் அப்துர் ரஹீம் கமிஷன் மெம்பர்களில் ஒருவராக நியமனம் பெற்றதைப் பற்றியும் தேச ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமடைந்தனர், முகம்மதியர்களுடைய நன்மை வேறு, இந்தியர்களுடைய நன்மை வேறு என்று பாவிக்காது, இரு ஜாதியாரும் ஒத்துத்தான் முன்னுக்குப்போக வேண்டுமென்று அவரும் நம்பினவர். இவ்விருவர்களைத் தவிர பல பல அபிப்பிராயங் கொண்ட வேறு சிலர் நியமிக்கப்பட்டனர். வழக்கப்படி

அவர்களிற் சிலர் இந்தியர்களிடத்தில் அனுதாபமுள்ளவர்களென்று சொல்லப் படுவதுண்டு. சிலர் அனுதாபமில்லாதவர்களென்று விசாரணைக் காலத்திலேயே ஊகிக்கப்பட்டது. இம்மாதிரி அமைப்பைப் பெற்ற அந்தக் கமிஷன் 1913-ம் வருஷாரம்பத்தில் சென்னைமா நகரில் விசாரணையைச் செய்ய ஆரம்பித்தது. அதன் அக்கிராஸனாதிபதியாகிய லார்டு இஸ்லிங்டன் ஆரம்பதினத்தில் செய்த பிரசங்கமானது இந்தியர்கள் சந்தோஷப்படும்படி யிருந்தது. அதைக் கேட்ட சில ஆங்கிலப் பத்திரிகைகள் ஆத்திரப்பட்டுத் துள்ளி விழுந்தன. சாட்சிகளில் இரண்டொருவர் தாறுமாறாகச் சொல்ல ஆரம்பித்தனர். ஸ்ரீமான் கோகலேயும் ஸ்ரீமான் அப்துர் ரஹீமும் உடனே அவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பிக்கவே அவர்கள் பதில் சொல்லமுடியாது திணறி வாய்குளறிப்போனதும்; சில சமயங்களில் அக்கிராஸனாதிபதியாகிய லார்டு இஸ்லிங்டன் ஜாக்கிரதையாகப் பதில் சொல்லும்படி அவர்களுக்கு எச்சரிக்கை செய்ததும் நம் சுதேசமித்திரனை வாசித்து வந்திருக்கிறவர்களுக்கு நினைப்பிலிருக்கலாம். ஒவ்வொரு நாளும் சாட்சிகளை நேரில் விசாரிப்பதற்கு முன், எழுத்து மூலமாக முன்னாடியே அவர்கள் அனுப்பியிருந்த பதில்களைப் படிக்கவும், அவர்களைக் குறுக்கு விசாரணைசெய்யத் தயார் செய்து கொள்ளவும் ஸ்ரீமான் கோகலே வெகு பிரயாஸைப் படவேண்டியிருந்தது. நீர் ரோகத்தால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த அவருடைய தேகஸ்திதி சரியா யில்லாமலிருந்தும் அவர் அதைப் பொருட்படுத்தாது இரவும் பகலும் உழைத்து ஏற்றுக் கொண்ட வேலையைத் திருப்திகரமாகச் செய்து, தம்முடைய அசௌக்கியத்தை அதிகப்படுத்திக் கொண்டார். பாதி விசாரணையை முடித்துக்கொண்டு கமிஷன் இங்கிலாந்துக்குப்



போனபொழுது அவரும் கூடப்போய் அங்கு செய்யவேண்டியிருந்த வேலைகளையும் குறைவறச் செய்தாராயினும் நாளுக்கு நாள் அவருடைய தேகஸ்திதி கவலைக்கிடமாய்க் கொண்டிருந்தது. படித்த இந்தியர்களைப் பாம்புபோல் பிடுங்கி அற்பாயுவில் கொள்ளை கொண்டுபோகிறதாகிய நீர்ரோகம் என்ற பீடை சில வருஷங்களாகவே அவரைப் வருத்திக்கொண்டிருந்தது. பெர்கூஸன் காலேஜுக்காகப் பொருள் தேட வேண்டி ஊரூராய் அலைந்த காலத்திலேயே அவர் உடம்பைக் கெடுத்துக் கொண்டுவிட்டார். பிறகு சட்டசபையில் ஸ்தானம் பெற்ற பிறகு அந்த வேலையே அவருக்குச் சரியாயிருந்தது. ஆகையால் தேக சௌக்கியத்தை கவனிக்க அவருக்கு சாவகாசமேயில்லை. வியாதி நாளுக்கு நாள் முற்றிக் கொண்டேயிருந்தது. வெளியில் போய் உலாத்தி மனோல்லாசமாக விருந்தால் வியாதியின் உக்கிரம் சிறிது குறையுமென்று புஸ்தகங்களில் படித்திருந்தாராகையால், சிற்சில சமயங்களில் புனா நகருக் கருகிலுள்ள மலைப்பக்கத்துக்குப் போய் சுற்றித்திரிந்து வருவர். அக்காலங்களில் வியாதியும் சிறிது தணியும். ஆனால் அம்மாதிரி சங்கல்பமாகச் செய்தே தீரவேண்டுமென்ற வைராக்கியமில்லை யாகையால், சில நாட்கழிந்து அந்த வழக்கத்தை விட்டுவிடுவர்.

## வியாதி முற்றிவிட்டது.

இவ்வாறு முற்றிக் கொண்டுவந்த வியாதி 1913-ம் வருஷத்தில் கமிஷன் வேலையாக அவர் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த காலத்தில் அதிகமாகி விட்டது. பிரான்ஸிலுள்ள விச்சியென்ற சுகஸ்தானத்தில் சிலகாலம் வசித்தால் தேகஸ்திதி சிறிது அனுகூலப்படலாமென்று டாக்டர்கள் சொன்னதைக் கேட்டு அங்குபோய்ச் சிறிது காலந் தங்கிவிட்டு 1913-ம் வரு

ஷம் ஸெப்டம்பர் மாதத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவந்து மறுபடியும் 1914-ம் வருஷத்தில் கமிஷனுடன் சேர்ந்துகொண்டு ஊரூராய்ச் சென்று பாக்கி சாட்சி விசாரணைக்குக் கூடவிருந்து மறுபடியும் இங்கிலாந்துக்குச் சென்றார். கமிஷன் ரிபோர்ட் எழுதவேண்டிய விஷயமாக அங்கு மற்ற மெம்பர்களுடன் கலந்து யோசித்துக் கொண்டிருக்கையில் மறுபடியும் அவருடைய தேகஸ்திதி கெட்டுவிட்டது. தூக்கமின்மையாலும் அவஸ்தைப்பட ஆரம்பித்தார். அவரிடத்தில் மிக்க மதிப்பும் அபிமானமும் வைத்திருந்த கமிஷன் மெம்பர்கள் அவருடைய தேகஸ்திதியை உத்தேசித்துத் தாங்கள் செய்யவேண்டிய வேலையை சில மாதங் கழித்துச் செய்து கொள்ளலாமென்று ஒத்தி வைத்தார்கள். மழைக்காலத்தில் இங்கிலாந்தின் குளிர் அவருடைய தேகஸ்திதிக்கு ஒத்துக் கொள்ளாதாகையால், மாரிகாலத்தை இந்தியாவில் அவர் கழிக்க வேண்டியே அவர்கள் அவ்வாறு தங்களுடைய வேலையை ஒத்தி வைத்தனர். இந்த 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போகிறதாக உத்தேசித்துக் கொண்டு இந்தியாவுக்கு வந்த அவர் மறுபடி அங்குபோய் கமிஷன் ரிபோர்டு முடியுங்காலத்தில் கூட விருக்கமுடியாமற் போனது நம்முடைய துரதிருஷ்டமே ஒழிய வேறல்ல. "இன்னும் ஒரு வருஷந்தான் தாங்கள் ஜீவித்திருக்கக் கூடும்; ஆனால் மனதுக்கு வேலை கொடுக்காமல் சாந்தமாக விருக்கக் கூடுமானால், மூன்று வருஷ மிருந்தாலுமிருக்கலாம்" என்று டாக்டர்கள் எச்சரிக்கை செய்தும், ஒரு வருஷங் கூட இருக்கக்கூடாத வண்ணம் முன்னிலும் அதிகமாக மூளையை உபயோகித்து அவர் பிரயாஸைப் பட்டதுபோல் எந்த மனிதன் பிறர் பொருட்டு உழைப்பன்? கடைசித் தடவையாக அவர் இந்தியாவுக்குப்



புறப்பட்டபொழுது அவருடைய ஆங்கில நண்பர்கள் கூடி உபசாரம் செய்து வெகு மரியாதையுடன் அவரை வழி அனுப்பினார்கள். "இதுதான் கடைசித்தடவை. இனி கோகலேயைப் பார்க்கப் போகிறதில்லை என்பது எங்களுக்குத் தெரிந்த விஷயந்தான். அவருக்கும் அது தெரியும். ஆயினும் அந்த நினைப்பைச் சிறிதும் காட்டிக் கொள்ளாது வெகு மன உல்லாசத்துடன்தான் அவர் புறப்பட்டுப் போனார்" என்று அவர்கள் எல்லோரும் சொல்லுகிறார்கள். தென் ஆபிரிக்காவுக்கு அவர் புறப்பட்டபொழுதே அவருடைய தேகஸ்திதி நெருக்கடியாகத்தான் இருந்தது. அதை உத்தேசித்து அந்தப் பெரிய பிரயாணத்துக்கும் அவர் அஞ்சவில்லை. சிறிது ஜாக்கிரதையாக விருக்கவேண்டுமென்று டாக்டர்கள் எச்சரிக்கை செய்தால், நமது கோகலே முன்னிலும் பதின்மடங்கு அதிகப் பிரயாசைப் படுகிறது வழக்கம். "இன்னும் சில காலந்தானே நானிருக்கப்போகிறேன்; அதற்குள் என்னுடைய வேலையைச் செய்துவிட வேண்டும். டாக்டர்கள் சொல்லுகிறபடி சும்மாவிருக்க என்னால் கூடவில்லை. புஸ்தகங்களைப் படிக்காமல் ஒருசமயம் இருக்கலாம்; ஆனால் மனது யோசனை செய்வதை எப்படித் தடுக்கக் கூடும். எப்பொழுதும் என் மனம் யோசனையிலேயே ஆழ்ந்து விடுகிறது. மூளை வேலைசெய்கிற ஒரு மனிதனைப் பார்த்து நீர் சாந்தமாக விருக்கவேண்டுமென்று டாக்டர்கள் சொல்லும்பொழுது, மனுஷ்ய எத்தனத்துக்குக் கூடாத ஒரு காரியத்தைச் செய்யும்படித் தாங்கள் சொல்லுகிறதாக அவர்கள் நினைக்கவில்லைப் போலும். ஆகையால் சீக்கிரம் நான் இறந்து விடுவேன் என்று டாக்டர்கள் சொல்லுகிற அபிப்பிராயத்தை மதித்து, எனக்கு பாக்கியிருக்கிற சொற்ப காலத்துக்குள் என்னுடைய வேலையைச் செய்து விடவேண்டு"

மென்று தமது நண்பர்களுக்குச் சமாதானஞ் சொல்லிக் கொண்டே வழக்கப்படி இரவும் பகலும் வேலைசெய்து கொண்டே இருந்தார்.

## பிழைக்க வழியுண்டோ!

கமிஷன் வேலையைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டுமென்று அவசரப்பட்டு அவர் உழைத்து கொண்டிருக்கையில் சென்னையிற் சில பிரமுகர்கள் கிளம்பி அமித வாதிகளையும் மிதவாதிகளையும ராஜிசெய்து இருகட்சியாரையும் ஒன்றாய்க் கூட்டி காங்கிரஸ் சபையை சென்னையில் நடத்தவேண்டுமென்று தீர்மானஞ் செய்துகொண்டு புனாவுக்குச் சென்று ராஜிபேசினதன் முடிவாக, ஸ்ரீமான் கோகலேக்கு வேதனையை உண்டு பண்ணக்கூடிய பிரஸ்தாபங்கள் பத்திரிகைகளிற் தோன்ற ஆரம்பித்தன. எப்பொழுதும் அவர் மிக ரோஷக்காரர். இந்தப் பிரஸ்தாபங்கள் மனக் கிலேசத்தை அதிகப் படுத்தின. இந்த நிலைமையில் சென்ற பிப்ரவரி மாதம் 12-ந் தேதி வெள்ளிகிழமை யன்று புனா நகரில் ஸ்ரீமான் காந்தியையும் அவருடைய மனைவியையும் உபசரிக்க ஒரு மீட்டிங் நடந்தது. அன்று இந்திய ஊழியச் சங்கத்தில் அவர்கள் பொருட்டு ஒரு சிறு விருந்து நடந்து கொண்டிருக்கையில் கோகலேக்கு மயக்கமுண்டாகி ஸ்மாரணையை இழந்துவிட்டார். சிறிதுநேரம் கழித்துத் தெளிந்து எழுந்து விட்டாராயினும் அவருடைய வைத்திய நண்பர்கள் பயப்பட ஆரம்பித்தார்கள். ஆயினும் ஏற்கெனவே அம்மாதிரி நெருக்கடியான நிலைமைகளிலிருந்து சௌக்கிய மடைந்திருந்தாராகையால் இந்தத் தடவையும் ஒருகால் தப்பித்துக் கொள்ளலாகாதா என்று ஆசைப்பட்டார்களே ஒழிய தேகமிருந்த நிலைமை நம்பிக்கைக்கு இடங்கொடுக்கவில்லை. புதன்



கிழமை யிரவு வெகு பிரயாசையுடன் முக்கியமான ஒரு எழுத்து வேலையைச் செய்து முடித்தார். வியாழக் கிழமை கூட வேலைசெய்தார். வெள்ளிக்கிழமை யன்று வியாதி மறுபடி திரும்பிக்கொண்டது. அன்று காலையிலேயே முடிவு நெருங்கிவிட்டதென்று நிச்சயமாக நினைத்து விட்டார். தம்முடைய சகோதரிகளிடத்திலும், தம்முடைய இரண்டு பெண் குழந்தைகளிடத்திலும் நண்பர்களிடத்திலும் தாம் போய் வருகிறதாக சொல்லிக்கொண்டு, தம்முடைய குடும்ப விஷயங்களைப்பற்றி என்ன செய்யவேண்டுமென்று அறிவித்தார்.

## "போய்வருகிறேன்."

"இங்குள்ள தமாஷ்களையெல்லாம் வெகு காலமாகப் பார்த்தாய்விட்டது. இனி அந்தப் பக்கத்தில் என்ன இருக்கிறதென்று போய்ப் பார்க்கிறேன்" என்று சமீபத்திலிருந்தவர்களுக்குச் சொல்லிவிட்டு, அன்று இரவு 11 மணிக்கு வெகுசாந்தமாக சரீரத்திலிருந்து பிரிந்து போனார். அவ்வாறு போனவர் வேறு சரீர மெடுத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். கடைசியாக இங்கிலாந்திலிருந்து புறப்பட்டதற்குச் சிலநாள் முந்தி உலகெலாம் புகழ் படைத்த நமது பௌதிக ரஸாயன சாஸ்திர வல்லவராகிய ஸ்ரீமான் ஜோதிஸ் சந்திரவஸுவுடன் இங்கிலாந்தில் அவர் பேசிக்கொண்டிருந்தபொழுது "ஸர்வ சாஸ்திர பண்டிதராகிய தாங்கள் மரணத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்களோ எனக்குத் தெரியவில்லை; ஆனால் ஜீவன் சரீரத்தை விட்டுப் பிரிந்தபிறகு மறுபடியும் வேறு சரீரத்தை எடுத்துக்கொண்டு உலகில் பிறக்கிறதென்பதை நான் நம்புகிறேன். இந்தப் பழுதாய்விட்ட சரீரத்தை விட்டுவிட்டு, வேறு புதுச் சரீர

மெடுத்துக்கொண்டு நான் வரப்போகிறேன். வந்து இந்தியாவுக்காக உழைப்பேன். அவசியமிருந்தால் இந்தியாவின் பளுமுழுமையையும் நானே சுமப்பேன்" என்று சொன்னாராகையால், சீக்கிரம் நமது மத்தியில் தோன்றி அவருடைய பிரிவால் புலம்பும் நம்மைத் தேற்றி நமக்கு வழிகாட்டுவாரென்றே நம்புவோம். அதுவரையில் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி கொஞ்சங் கொஞ்சமாகவாவது நம்முடைய சக்திக்குத் தக்கபடி நாமெல்லோரும் அவர் போன வழியில் போய்க்கொண்டிருப்போமானால், அவர் திரும்பி வந்து "நீங்கள் இதுவரையில் என் செய்தீர்கள்" என்று கேட்டால், "இதோ! பாருங்கள், தாங்கள் போனபொழுது எங்களை அங்குவிட்டுச் சென்றீர்கள், இப்பொழுது சிறிது முன்னுக்கு வந்திருக்கிறோம்" என்று சொல்லக்கூடும்.

இது நிற்க, மறுநாட் காலையில் அந்தத் துக்கச்செய்தி தந்திமூலமாக முக்கியமான பட்டணங்களுக்கெல்லாம் எட்டிவிட்டது. பம்பாயிலிருந்தும் அருகிலுள்ள வேறு பட்டணங்களிலிருந்தும் அவருடைய நண்பர்கள் கூட்டங் கூட்டமாகப் புனாவுக்குப் போய்ச் சேர்ந்தனர். அவருடைய சரீரத்தை அலங்காரஞ் செய்ய, வந்து விழுந்த புஷ்பமாலைகள் வண்டிக் கணக்காய்க் குவிந்தன. மயானத்துக்குப் போகும் வழியில் எள்ளைப்போட்டால் அது கீழ்விழாதபடி கும்பல் கூடிவிட்டது. லட்சக் கணக்காகக் கூடியிருந்தவர்கள் மத்தியில் ஸ்ரீமான் பால கங்காதர திலகர் கம்பீரமாக எழுந்து நின்று, ஜீவித்த புருஷன்போல் சயனித்துக்கொண்டிருந்த அந்தப் புனித சரீரத்தைச் சுட்டிக்காட்டி "ஓ ஜனங்களே! இந்தச் சரீரத்தினின்று நீங்கிய புருஷன் உத்தமோத்தமன். அவருடைய உத்தம குணங்களைக் கடைப்பிடித் தொழுகுவீராகில்



அந்த ஜீவனுக்குத் திருப்தியுண்டாகும்" என்று சொல்லக் கேட்டவர்கள் விம்மி விம்மி அழுதார்கள்.

பத்திரிகைகள் மூலமாக ஞாயிற்றுக்கிழமைக்குள் இந்தச் செய்தி தேசமெங்கும் பரவிவிட்டது. பெற்றோரை இழந்தார்போலும், மக்களை இழந்தார்போலும், கேட்டவர்கள் எல்லோரும் திடுக்கிட்டு அழுத கண்ணீர் ஆறாக வோடியது. எந்த பட்டணங்கள், எந்தக் கிராமங்கள், எந்த சபைகள், எந்த மனிதர்கள் இந்த துக்கத்தைக் கொண்டாடினார்கள் என்று சொல்லப்புகுந்தால், இந்தியாவிலுள்ள எல்லாப் பட்டணங்களையும், கிராமங்களையும் சபைகளையும் ஜனங்களையும் சொல்லித்தானாகவேண்டும்; ஜெப்பானிலுள்ள இந்தியர்களும் சீனாவிலுள்ள இந்தியர்களும், ஆபிரிக்காவிலுள்ள இந்தியர்களும், அமெரிக்காவிலுள்ள இந்தியர்களும், இங்கிலாந்திலுள்ள இந்தியர்களும், உலகத்தில் எங்குமுள்ள இந்தியர்களும் இச்செய்தியைக் கேட்டு வெட்டுண்ட மரம்போல் கீழே விழுந்து புரண்டு அழுதனர்.

## அவருடைய குண விசேஷங்கள்.

இதுவரையில் அவருடைய சரித்திரத்தைப் படித்து வந்த நீங்கள் அவருடைய குணமே அவருடைய பெருமைக்கு அஸ்திவாரமாயிருந்ததென்பதை அறிந்திருப்பீர்கள். பொருளை விரும்பாத எந்த மனிதனையும் இந்தத் தேசம் போற்றுவது வழக்கம். போக்கிரிகள்கூட சன்னியாசி உடை தரித்துக்கொண்டு விட்டால், ஜனங்களால் மிக மதிக்கப்படுவதை நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆகையால் ஸ்ரீமான் கோகலே அதிபால்யத்திலேயே தரித்திர உடையை மேல் போர்த்துக்கொண்டு விட்டபடியால் அந்த ஒரு காரணத்தினாலேயே அவர் கொண்டாடத் தக்கவராய் விட்டார்

சிலர் ஆரம்பத்தில் உத்தமர்கள்போல் நடித்து, ஜனாபிமானத்தைப் பெற்று, பிறகு சுயகாரியப் புலிகளாய் விடுவார்கள். ஆனால் நமது கோகலேயோ சிறு வயது முதல் ஆயுள்முடிய ஒரே பிடிவாதத்தை சாதித்துவிட்டார். பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் மெம்பராக வருஷம் ஒன்றுக்கு 1000 பவுன் பெற்றுக்கொள்ள அவருக்கு பாத்தியமிருந்தது. ஆனால் வேறு வேலை செய்யக்கூடாது. அந்த சமயத்தில் தென் ஆபிரிக்கா இந்தியர்களின் நிலைமை நெருக்கடியாகவிருந்ததால், ஒரு சமயம் சட்டசபையில் ஏதேனும் பிரஸ்தாபம் நேரிடக்கூடியதாயிருந்தது. ஆயிரம் பவுனுக்கு ஆசைப்பட்டு சட்டசபைக்குப் போகாமலிருந்து விட்டால், தேசத்தின் கௌரவத்துக்கு பங்கம் வந்துவிடுமோ என்று நினைத்து, அந்த ஆயிரம் பவுன் தமக்குத் தேவையில்லையென்று சொல்லிவிட்டார். அவருடைய நிலைமையில் ஆயிரம் பவுன் பெரிய ஐவேஜியாகும்; ஆயினும் அதை அவர் அசட்டை செய்ததிலிருந்து அவருடைய நிச்சய புத்தி விளங்கும்.

பணத்துக்கு ஆசைப்படாவிடினும் சிலர் பெருமைக்கு ஆசைப்படுவார்கள்; கோகலே அதையும் விரும்பினவரல்லர். அவருடைய குண விசேஷங்களைக் கண்டறிந்த நமது ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு "ஸர்" என்ற பட்டத்தை அவருக்கு அளிக்கும்படி நமது சக்கரவர்த்தியவர்களுக்குச் சிபார்சு செய்யவேண்டுமென்று சென்ற வருஷத்தில் இந்தியா மந்திரியைக் கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் கோகலேயின் குண விசேஷங்களை இந்தியா மந்திரி லார்டு க்ரூ நேரில் அனுபவித்தவராகையால் வெகு சந்தோஷத்துடன் சக்கரவர்த்திக்குச் சிபார்சு செய்தார். கருணாநிதியாகிய அவரும் அதற்கிசைய லார்டு க்ரூ அவ்விஷயத்தை ஸ்ரீமான் கோக-



லேக்கு அறிவித்து அவருடைய சம்மதத்தைக் கேட்டார். "தங்களுடைய அபிமானத்துக்கும் சக்கரவர்த்தி அவர்களுடைய காருண்யத்துக்கும் நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். அந்தப் பட்டத்தை நான் ஏற்றுக்கொண்டால் சாதாரண கோகலேயாகவிருக்கிறதுபோய் ஸர் கோகலேயாய் விடுவேன்.' அது எனக்குப் பளுவாயிருக்கும்போலிருக்கிறது. என்னை மன்னிக்கும்படி சக்கரவர்த்தி அவர்களுக்குத் தாங்கள் சிபார்சு செய்யும்படி மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று மிகவும் வணக்கமாயும் உறுதியாயும் பதிலெழுதி விட்டாரேயல்லாமல் தானாகவந்த பெருமையைக்கூட ஏற்றுக்கொள்ள சம்மதிக்கவில்லை.

ஸ்ரீமான் கோகலே மிக ரோஸக்காரர்; பொது வாழ்வில் புகுந்தவர்கள் அவ்வளவு ரோஸம் பாராட்டக் கூடாதென்று சிலர் சொல்லுகிறதுண்டு. இங்கிலாந்து முதலிய தேசங்களில் கட்சிப் பிரதிகட்சி வலுத்திருப்பதால் ஒரு கட்சியாரை மற்றொரு கட்சியார் சில சமயங்களில் தாறுமாறாகப் பேசுவார்கள். அம்மாதிரி பேசப்பட்டவர்கள் அதை லட்சியம் செய்கிற வழக்கமில்லை. ஆனால் அங்குப் பேச்சுக் கேட்க சம்மதிக்கிறவர்கள் தாங்கள் அதிகாரப் பதவியை வகிக்கவேண்டுமென்கிற சொந்த லட்சியங் கொண்டவர்கள். ஸ்ரீமான் கோகலேக்கு அம்மாதிரி லட்சியம் ஒன்றுமிருந்ததில்லை. அதல்லாமல் அவர் யாரையும் நிதானந் தவறிப் பேசுகிற வழக்கமுமில்லை; அதற்கு உதாரணமாக லார்டு கர்ஸனுடைய ஆளுகையை அவர் பல சமயங்களில் கண்டித்ததைக் குறிப்பிடலாம். லார்டு கர்ஸன் காலத்தில் இன்னின்ன தப்புகள் செய்யப்பட்டன வென்று அவர் பேசுவது வழக்கமே யல்லாது, அவரைத் தூஷித்ததில்லை. முற்காலத்தில் வருணாச்சிரமபேதம் அவசியமாகவும் நன்மை பயக்கத்

தக்கதாகவு மிருந்திருந்தாலும் இக்காலத்தில் ஜாதி வேற்றுமை நம்முடைய முன்னேற்றத்தைத் தடுக்கிறதென்றும் அது நீங்க வேண்டுமென்றும் அவர் திடமாக நினைத்தவர். ஆயினும் எந்த ஜாதியையும் தூஷிக்க அவர் சம்மதித்தவரல்லர். ஒரு சமயத்தில் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு கல்கத்தாவில் ஆசாரத்திருத்த கான்பரென்ஸில் பேசினபொழுது "பிராமணர்களுடைய அகந்தை" என்று சொன்னார்; பிறகு ஸரோஜினியை கோகலே கண்டபோழுது "அம்மா நீ மிகவும் அழகாய்ப் பேசுகிறாய், ஆனால் கொடிய பதங்களை உபயோகிக்கிறாய்" என்று சொன்னார்.

## ஆசாரத்திருத்தம்.

நமது ஆசார அனுஷ்டானங்கள் பல வழிகளில் திருந்தமடைய வேண்டுமென்று ஸ்ரீமான் கோகலே அழுத்தமாக நினைத்தவர். பஞ்சமர்களை நாம் நடத்தும் மாதிரியை நினைத்துப் பார்போமானால் ஐரோப்பியர் நம்மை அலட்சியஞ் செய்வதற்காக ரோஸப்படக் காரணமேயில்லை யென்று ஸ்ரீமான் ரானடே ஒரு சமயத்தில் தமக்குச் சொன்னது தம் மனதில் வேரூன்றி விட்டதென்று அவர் சொல்லியிருக்கிறார்; சிலர் வாய் கிழியப் பேசிவிட்டு நடைவடிக்கையில் தங்களுடைய கொள்கைகளை அனுஷ்டிக்கப் பயப்படுவார்கள். ஸ்ரீமான் கோகலே தம் மனதில் எது கிரமமென்று நினைத்தாரோ அந்தப்படியே நடக்கப் பிரயத்தனப்பட்டவர். பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் சென்னைக்கு முதல் முதல் வந்திருந்தபொழுது சென்னை கவர்ன்மெண்டில் நிர்வாக சபை மெம்பராயிருந்த ஸர் ஜான் அட்கின்ஸன் கமிஷன் மெம்பர்களுக்கு ஒரு விருந்து நடத்தினார். ஸ்ரீமான் கோகலே பிராமணராகையால் பிராமணப் பரிசாரகர்களைக் கொண்டு தனியாகச் சமையல் செய்விக்கவேண்டுமோ என்று கேட்டனுப்பினார். "நான் மாம்ஸம் சாப்பிடுகிறதில்லை; சாக ஆகாரங்களை யார் பரிமாறினாலும் சரிதான்" என்று பதில் எழுதிவிட்டார். ஆசாரத்திருத்தக் காரர்களுடைய கொள்கைகளை அவர் அனுசரித்து வந்தபோதிலும், வலுக்கட்டாயத்தினால் ஜனங்களின் ஆசாரங்களை மாற்ற அவர் இஷ்டப்பட்டதாகத் தெரியவில்லை. கல்வி பரவினால், தானாகவே சீர்திருத்தங்கள் உண்டாய் விடுமென்று நம்பினவர். ஆகையால் தேசத்தில் கல்வி பரவ அனுகூலங்களைத் தேடுவதிலேயே கவனத்தை அதிகமாகச் செலுத்தி வந்தார்.



வேலை செய்துகொண்டிருக்கிற சமயத்தில் யாரேனும் போய் அவரைத் தொந்தரவு செய்தால் திடீரெனக் கோபம் வந்து விடுமாம். ஆனால் மிகவும் தயவுள்ள குணமுடையவராகையால், தம்முடைய வேலைக்காரர்களைக் கூட சில சமயங்களில் மன்னிப்புக் கேட்டுக் கொள்வாராம்.

மிக்க விலை உயர்ந்த உடுப்புகள் தரித்துக்கொள்ள அவருடைய நிலைமை இடங்கொடுத்தது மில்லை; அவைகளை அவர் விரும்பினது மில்லை; ஆயினும் காலத்திற்கேற்ப நல்ல உடைதான் தரித்திருப்பார். இங்கிலாந்துக்குப் போன சமயங்களில் அங்கிருந்த வரையில் ஐரோப்பியர்களைப்போல் அவரும் தொப்பிதான் தலைக்குப்போட்டுக் கொள்வது வழக்கம். ஆங்கில கோஷ்டியில் தாராளமாகப் பழக அது ஒரு சமயம் தேவையாயிருந்திருக்கலாம். ஆனால் வெல்பி கமிஷன் முன் காட்சி சொல்ல நமது ஐயர் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யர் போயிருந்தபொழுது வெள்ளைத் தலைபாகையைத் தான் தரித்திருந்தார். அப்பொழுதே ஹிந்துப் பத்திரிகைக்கு ஐயரெழுதிய ஒரு கடிதத்தில் "ஸ்ரீமான் கோலேயும் ஸ்ரீமான் வாச்சாவும் பெரிய தொப்பிகளைச் சுமந்து போகிறார்கள்; நாம் நம்முடைய வெள்ளைத் தலைப்

பாகையை விடவில்லை" என்று எழுதியிருந்தார். இந்தியாவில் ஸ்ரீமான் கோகலே தொப்பி போட்டுக் கொண்டதேயில்லை.

## ஹிந்து முகம்மதியர்களின் ஒற்றுமை.

ஹிந்துக்களும் முகம்மதியர்களும் ஒற்றுமைப் பட்டால்தான் இந்த தேசம் நல்ல நிலைமைக்கு வருமென்பது அவருடைய கொள்கை. அவ்வொற்றுமை ஏற்படுவதற்கு விரோதமான எந்தக் காரியத்திலும் அவர் கலந்ததேயில்லை. இரு வகுப்பாருடைய அபிப்பிராய பேதங்கள் தொலைந்து ஐக்கிய பாவம் தோன்ற இன்னும் இரண்டொரு தலைமுறையாகுமென்றே நினைத்திருந்தார். ஆனால் அலிகார் நகரில் 1913-ம் வருஷத்தில் கூடிய "முஸ்லிம் லீக்" என்ற சபையில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அன்னியயோன்னியமாக ஒத்துழைப்பதே தேசத்துக்கு நன்மையாகுமென்று பல முஸ்லிம் பிரமுகர்கள் அபிப்பிராயப் பட்டதுடன், காங்கிரஸ் சபை என்ன லட்சியங்களைக் கொண்டு உழைத்து வருகிறதோ அந்த லட்சியங்களையே அந்த சபையும் ஏற்றுக்கொண்டது. காங்கிரஸ் சபைக்குப் போட்டியாக ஏற்பட்ட அந்த "முஸ்லிம் லீக்" காங்கிரஸின் லட்சியங்களையே ஏற்றுக்கொண்டு விட்டதென்றால் அதனிலும் நல்ல சமாச்சாரம் என்ன இருக்கக்கூடும். லீகில் நடந்த நடவடிக்கைகளைப் பத்திரிகைகளில் ஸ்ரீமான் கோகலே படித்துக்கொண்டிருக்கையில் அந்த சபைக்குப் போயிருந்த ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு அவருடைய ஜாகைக்குப் போய் சபையில் நடந்த விஷயங்களை விஸ்தாரமாக எடுத்துச்சொல்லி, முஸ்லிம் தலைவர்களின் உட்கருத்தும் ஹிந்துக்களுடன் அன்னியோன்னியத்தைக் கோரினதாகவே இருந்ததாகச் சொன்னார். அப்பொழுது கோகலேக்கு உடம்பு சௌக்கியமா-



யில்லை. ஸரோஜினி அந்த சமயம் போய்விட்டு மறுபடி அவரைப் பார்க்க மாலையில போனபொழுது அவருடைய முகம் தெளிவாயும் உடம்பு நடமாட சக்தியுள்ளதாயு மிருந்தது. "திடீரென்று தங்களுடைய உடம்பு தெளிந்துவிட்டாற்போலிருக்கிறது" என்று ஸரோஜினி சொல்ல, "அம்மா, நீ காலையில் சொன்ன செய்தி என் மனதுக்கு அடங்கா மகிழ்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. அதனுடைய பலனாக என்னுடைய உடம்பு சிறிது வலுப்பெற்றிருக்கிறது" என்று கோகலே பதில் சொன்னார். இந்த ஒரு விஷயத்திலிருந்து தேசத்தைப்பற்றிய கவலை அவருடைய மனதில் எவ்வளவு குடிகொண்டிருந்ததென்பது தெரியும்.

## அவர் செய்த வேலையின் பலன்.

பெர்கூஸன் காலேஜைவிட்டு நீங்கின பிறகு ஸ்ரீமான் கோகலே செய்த வேலையை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். சட்டசபையில் பகிரங்கமாகப் பேசியும், கவர்ன்மெண்டு மெம்பர்களிடத்தில் தனித்துப் பேசியும் கவர்ன்மெண்டின் அபிப்பிராயங்களிற் சில மாறுதல்களை உண்டுபண்ணினது ஒன்று; காங்கிரஸ் முதலிய பொதுச் சபைகளில் பேசி தேசத்தின் தேவைகளைப்பற்றிய அறிவை விருத்தி செய்ததும், ஜனங்கள் நிதானந் தவறிவிடாது சட்டத்துக்கு அடங்கி நடக்கும்படி அவர்களைச் செய்ய முயன்றதும் இரண்டு; இங்கிலாந்துக்கு அடிக்கடி சென்று மந்திரிமார்களையும் மற்றச் செல்வாக்குள்ள கனவான்களையும் கண்டுபேசி அவர்கள் இந்தியா விஷயத்தில் அபிமானம் பாராட்டும்படி செய்ய முயன்றதும், சில ஆங்கிலப் பத்திரிகைகள் பொய்யும் பித்தலாட்டமுமாக இந்தியர்களைப் பற்றி எழுதினதை பிரிட்டிஷ் ஜனங்கள் நம்பி மோசம் போகாமல் செய்வதற்காக அவர்களின் முன் அடிக்கடி பிரசங்கம் செய்து உள்ளதை உள்ளபடி

உரைத்து அவர்களுடைய தப்பெண்ணங்களைத் திருத்தியதும் மூன்று.

மேற் சொன்ன எல்லா வழிகளிலும் அவருடைய முயற்சிகள் ஓரளவு கைகூடின. உப்புவரி சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டதும், இன்கம்டாக்ஸ் வரி சிலருக்கு எடுக்கப்பட்டதும், கல்விக்காகவும் சுகாதாரத்துக்காகவும் முன்னிலும் அதிகப்பணம் செலவிடப்பட்டுவருவதும் அவருடைய பிரயாசையின் பலனென்று சொல்லலாம் ராஜப்பிரதிநிதி லார்டு மின்டோவுடன் அடிக்கடி அவர் தனித்துப் பேசி தேசத்தின் குறைகளையும் தேவைகளையும் எடுத்துச் சொன்னதன்மேல்தான் அந்த உத்தமனுடைய மனமிளகிச் சட்டசபையின் அமைப்பில் சில திருத்தங்களைச் செய்ய இந்தியா மந்திரிக்கு அவர் சிபார்சு செய்தாரென்று ஸ்ரீமான் பராஞ்சபே சொல்லியிருக்கிறார். தேசத்தில் அமளி பொங்கிக்கொண்டிருந்த அக்காலத்தில் ஸ்ரீமான் கோகலே ஊருராய்ச்சென்று ஜனங்களுக்கு சற்புத்தி புகட்டியிராவிடில் விபரீதங்கள் அதிகமாயிருந்திருக்கும். இங்கிலாந்தில் மந்திரிகளையும் பிறரையும் அவர் வசியப்படுத்தினதற்கு சட்டசபைத் திருத்தங்களே போதுமான சாட்சி.

### சட்டசபை மேம்பர்களின் அபிப்பிராயம்.

#### லார்டு கர்ஸன் புகழ்ந்தார்.

அவருடைய கொள்கைகளை ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட அவருடைய சாமார்த்தியத்தைப்பற்றி வியந்திருக்கிறார்கள். கோகலேயுடன் சட்டசபையில வாதஞ்செய்வது எனக்குப்பெரிய சந்தோஷமாயிருக்கிறதென்று லார்டு கர்ஸனே ஒருசமயத்தில் சொன்னார்.

1901-ம் வருஷத்தில் லார்டு கர்ஸன் சிபார்சு செய்ததன்மேல் நமது சக்கரவர்த்தி அவர்கள் அவருக்கு C. I. E. என்ற



பட்டத்தை அளித்தார். லார்டு கர்ஸன் தாமே ஒரு கடிதமெழுதி அதன்மூலமாக அந்த சமாச்சாரத்தை அவருக்கு அறிவித்தார். "தங்களுடைய சாமர்த்தியங்களை மெச்சி இந்தப்பட்டம் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் தங்களுடைய தேசத்தின் நன்மைகளைக் கருதி எப்படித் தங்களுடைய சாமார்த்தியங்களை உபயோகப்படுத்தி வந்திருக்கிறீர்களோ அதே மாதிரி இனியும் உபயோகிக்கவேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை. தங்களைப் போன்ற பலர் இத்தேசத்தில் இருக்கக்கூடாதாவென்று நான் ஆசைப்படுகிறேன்" என்று அக்கடிதத்தில் லார்டு கர்ஸன் எழுதியிருந்தார்.

### ஸ்ரீமான் கோகலேயின் ஜால வித்தை.

1902-ம் வருஷத்தில் சட்டசபையில் ஒரு பிரஸ்தாபத்தினிடையில் லெப்டினென்டு கவர்னராகவிருக்கும் ஸர்ஜேம்ஸ் மெஸ்டன் பின் வருமாறு நமது கோகலேயைச் சுட்டிச்சொன்னார் :—

ஏதேனும் ஒரு முறையை மிஸ்டர் கோகலே தாங்கிப் பேசி அது முக்கியமென்று வற்புறுத்துவாரானால், அந்த சமயங்களிலெல்லாம் மாங்கொட்டை புதைத்து வித்தை செய்யும் ஜாலக்காரனுடைய நினைப்பு எனக்கு வருகிறது. சிறிது மண்ணில் ஒருகொட்டையைப் புதைத்து ஒரு துணியால் மூடிவைத்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் அத்துணியை அவன் நீக்குகையில் பூவுங்காயுமாக ஒருமாங்கன்று உண்டாய் விடுகிறது. மிஸ்டர் கோகலே செய்வதும் அப்படித்தான் இருக்கிறது. ஒரு திருத்தம் அவசியமென்று அவர் சொல்லுகிறார். அவருக்குக் கோபமுண்டாகாமலிருக்குமாறு சாந்தமாக நாம் பதில் சொல்லுகிறோம்; மூச்சுவிட சிறிது சாவகாசமேற்பட்டிருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிரு

க்கையில், கோகலே தம்முடைய விதையைப் புதைத்து மூடி வைத்திருக்கிறார். சிறிதுநேரத்துக் கெல்லாம் அந்த துணியை அவர் எடுத்து விடும்பொழுது, பூவும் பிஞ்சுங் காயும் பழமும் குலுங்கும் ஒரு பல விருட்சம் உண்டாய் விடுகிறது; என்ன ஆச்சரியம்! என்று ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் சொன்னதிலிருந்து ஸ்ரீமான் கோகலேயின் கொள்கைகளை கவர்மெண்டார் நாளடைவில் ஆதரித்து அனுஷ்டிக்கத் தலைப்பட்டார்கள் என்பது தெளிவாகிறது.

### பருப்பில்லாக் கலியாணம்.

1913-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் நடந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றிய மீட்டிங்குக்கு தேக அசௌக்கியத்தால் ஸ்ரீமான் கோகலே போகவில்லை. இந்தியா கவர்ன்மெண்டின் வரவு செலவு மெம்பராயிருந்த ஸர் கய் ப்ளீட்வுட் வில்ஸன் "மிஸ்டர் கோகலே இல்லாமல் வரவு செலவு திட்டத்தைப்பற்றி நாம் யோசிக்கப் போகிறதானது ஹாம்லெட் என்ற ராஜகுமாரனுடைய சரித்திரத்தை ஆடப் புகுந்தவர்கள் ஹாம்லெட் வேஷமன்னியில் ஆடுவது போலிருக்கிறது. அவர் வராமலிருப்பதற்காக நான் வருந்துவதுடன், வியாதியினால் அவர் வரக்கூட வில்லையென்பதற்கே அதிகமாக வருந்துகிறேன்" என்று சொன்னார்.

### வியாதிக்குத்தக்க மருந்தோ!

இன்னொரு சமயத்தில் ஸர் கய் ப்ளீட்வுட் வில்ஸன் ஸ்ரீமான் கோகலேயின் அதிக உழைப்பைப்பற்றிப் பின் வருமாறு சொல்லி வருந்தப்பட்டார்:—

ப்ரிட்டிஷ் முதன் மந்திரியாயிருந்த மிஸ்டர் க்ளாட் ஸ்டனுடைய ஞாபகத்தை கனம் கோகலே எனக்கு உண்டு



பண்ணுகிறார்; ஒரு சமயத்தில் அதிக உழைப்பின்பலனாக மிஸ்டர் க்ளாட்ஸ்டன் வியாதியாயிருந்தார். ஒரு வேலையும் செய்யாமல் சாந்தமாக விருக்கவேண்டுமென்று அவருடைய வைத்தியர்கள் கண்டிப்பாய்ச் சொன்னார்கள். வைத்தியர் சொன்னபடி செய்கிறதற்காக உடனே துருக்கி பாஷையின் இலக்கணப் புஸ்தகமொன்றை அவர் வாங்கிக்கொண்டு அந்த பாஷையைப்படிக்க ஆரம்பித்துவிட்டார்!

"அதிக உழைப்பினால் மிஸ்டர் கோகலே அசௌக்கியமடைந்திருப்பது இங்குள்ள நமக்கெல்லாம் வருத்தமாயிருக்கிறது. அனாவசியமான வேலை ஒன்றும் செய்யக்கூடாதென்று அவருடைய வைத்தியர் சொல்லித்தானிருப்பார். அந்த யோசனைப்படி நடக்கிறதற்காக இடையில் 15 நிமிஷம் சாவகாசம் கிடைத்ததும் வரிகள் இன்ன ஆதாரத்தைப் பொருத்துத்தான் விதிக்கப்படவேண்டுமென்று வாதம் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

"அவரைப் பின்பற்றி நான் நடக்கத் தயாராயிருக்கவில்லை. நான் பின் வாங்கிக் கொள்ளுகிறேன். சண்டையின் பெருமையெல்லாம் அவருக்கே இருக்கட்டும்.

"நீட்டின விரல் எரிந்துபோய் விடும்படி வெயில் எரித்துக் கொண்டிருக்கையில் அவரைத் தாங்கியோ அல்லது எதிர்த்தோ கையில் தடிக்கொம்பை எடுத்துக்கொள்ள நான் தயாராக விருக்கவில்லை" என்று ஸர் கய் சொன்னார்.

### நட்டவிதை பழங் கொடுத்துவிட்டது.

ஸ்ரீமான் கோகலே வற்புறுத்தி வந்த ஒரு முறையை அடுத்த வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் ஸர் கய் ப்ளீட் வுட் வில்ஸன் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து

"மிஸ்டர் கோகலே நட்டவிதை வெகு சீக்கிரத்தில் பலன் தந்துவிட்டது" என்று ஒப்புக்கொண்டார்.

ராஜப் பிரதிநிதிகளும் மற்ற கவர்ன்மெண்டு மெம்பர்களும் அவர் வற்புறுத்தின திருத்தங்களைச் சரியாக மனதில் வாங்கிக் கூடியவரையில் அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவே முயன்றனர்.

## எதிர்க் கட்சித் தலைவர்.

கவர்ன்மெண்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்று சரியாகவோ தப்பாகவோ அவரைப் பலர் சொல்வதுண்டு. எதிர்க்கட்சி தலைமையை அவர் வகித்திருந்தாரென்பது உண்மையேயாயினும், இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கிருக்கும் லட்சியம் மாத்திரம் அவருக்கிருந்ததில்லை. அந்தத் தேசங்களில் கவர்ன்மெண்டார் சரியாக நடந்தாலும் தப்பாக நடந்தாலும் அவர்களை எதிர்த்து, அந்த அதிகாரப் பதவியைத் தாங்கள் பிடுங்கிக்கொண்டு விடவேண்டுமென்று எதிர்க்கட்சிக்கு நோக்கமுண்டு. ஸ்ரீமான் கோகலேக்கு அம்மாதிரி லட்சியமொன்று மிருந்ததில்லை. இந்தியாவிலோ இங்கிலாந்திலோ வரவு செலவு மந்திரி ஸ்தானத்தை வகிக்கக்கூடிய யோக்கியதை அவருக்கிருந்தும் அப்பதவிகள் அவருக்கு ஒருநாளும் கிடைத்திருக்க முடியாது. அதை உத்தேசிக்கையில் எதிர்க் கட்சித் தலைவரென்று அவரைச் சொல்வது பொருந்தாது. ஆனால் தேசத்துக்கு அனுகூலமில்லாத முறைகளை அவர் கண்டித்துப் பேசியதை யோசிக்குங்கால் எதிர்க் கட்சித் தலைவர் என்று அவரைச் சொல்வது தகும்.

## அவருடைய குடும்பம்.

ஸ்ரீமான் கோகலே இரண்டு தடவை விவாகமானவர்; இரண்டு மனைவிகளும் அவருக்கு முன்னாடியே இறந்து



போய்விட்டனர். இரண்டு பெண்கள்தான் இருக்கிறார்கள். மூத்த பெண் புனா பெர்கூஸன் காலேஜில் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார். இளைய பெண் நோய்ப்பலமாயிருப்பதால் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் வீட்டிலிருந்தபடியே படித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய தமையன் கோவிந்தராவ் இரண்டு வருஷங்களுக்கு முன்னாடியே இறந்துபோய்விட்டார். அவருக்கும் சில குழந்தைகளுண்டு. வேறு சகோதரிகளும் அவர்களுடைய குழந்தைகளுமிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் சிறிது ஆஸ்தி வைத்திருக்கிறார். ஏராளமாகப் பணஞ் சேகரித்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கல்கத்தாவிலுள்ள சில தனவான்கள் முன்வர, தேசமெங்கும் அதற்குத் தயாராயிருந்தது. அந்த ரோஸவானுடைய பெண்களும் சுற்றத்தார்களும் அவர் வைத்துவிட்டுப் போன சிறிது பொருளே தங்களுக்குப் போதுமென்றும், தங்களுக்கு பணந் தேவையில்லையென்றும் சொல்லிவிட்டதால், அவருடைய குடும்பத்துக்கு இந்தத் தேசத்தார் தங்களுடைய நன்றியறிவைக் காட்ட சமயமில்லாமற் போய்விட்டது.

## அவருடைய வேறிரண்டு குழந்தைகள்.

தம்முடைய குழந்தைகளைவிட அதிக அன்புடன் அவர் வளர்த்த வேறிரண்டு குழந்தைகளுமிருக்கின்றன. நாம் பணம் கொடுத்தால் அக்குழந்தைகள் பெற்றுக் கொள்ளும். ஸ்ரீமான் ரானடேயின் ஞாபகார்த்தமாக புனாவில் அவர் ஸ்தாபித்த "எகனாமிக் இன்ஸ்டிட்யூட்" என்ற ஆராய்ச்சிசாலை அவ்விரு குழந்தைகளில் ஒன்று; மற்றது 1905-ம் வருஷத்தில் அவர் ஸ்தாபித்த "இந்திய ஊழியர் சங்கம்." அக்குழந்தையும் பணத்தையும் நாம் செய்யக்கூடிய வேறு உபகாரத்தையும் விரும்புகிறது. முதலிற் சொன்ன "எகனாமிக் இன்ஸ்

டிட்யூட்" என்ற பெரிய புஸ்தக சாலை ஒன்றை ஏற்படுத்தி இந்தியாவின் பொருளாதார விஷயங்களைப்படிக்க அனுகூலமுண்டாக்கவும், ஆராய்ச்சிகள் நடத்தவும் ஸ்ரீமான் கோகலே உத்தேசித்தார். அன்னிய; தேசத்திலிருந்து வரும் பல சாமான்களை நமது தேசத்திலேயே செய்யக்கூடுமா என்று பார்ப்பதற்கு நமது தேசத்தில் உற்பத்தியாகும் பண்டங்களை உபயோகப்படுத்தி முதலில் சோதனைகள் செய்யவேண்டும். அந்தவேலைக்கு ஏராளமான கருவிகளும் வேறு உபகரணங்களும் தேவை. ஆனால் ஏற்பட்டிருக்கிற மூலதனம் அந்தவேலையை சரியாகச் செய்யப் போதுமானதல்ல. ஆகையால் பிறர் உபகாரஞ் செய்தால், அந்த ஸ்தாபனம் வலுத்து தேசத்துக்கு நன்மையுண்டாக்கும்.

## இந்திய ஊழியர் சங்கம்.

மகாராஷ்டிர நாட்டில் கல்வி அபிவிருத்தியடைய வேண்டி "தட்சிண வித்யாசபை" மெம்பர்கள் பொருளாசையை நீக்கி உழைத்து வருவதுபோல், ஸர்வ இந்தியாவின் நன்மையை நாடிப் பல்வழிகளில் உழைக்க ஒரு சபை வேண்டுமென்று ஸ்ரீமான் கோகலே பல வருஷங்களாக யோசித்துக்கொண்டிருந்தார். கிறிஸ்து மதத்தை உலகில் பரவச் செய்வதற்காக "சேசு சபை" என்று ஒரு சபை இருக்கிறது. அதைச் சேர்ந்தவர்களாகப் பல்லாயிரம் ஜனங்கள் உலகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் இன்பங்களைத் துறந்து சன்னியாசிகளாய், கிறிஸ்து மதம் பரவ வேண்டியதற்காகத் தங்கள் காலத்தையெல்லாம் செலவிட்டு வருகிறார்கள். போக போக்கியங்களில் மூழ்கிக் கிடக்கும் ஐரோப்பியர்களிலேயே ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்களுக்கு ஒரு பிரயோஜனத்தையுங் கருதாது சன்னியாசிகளாகையில், உலகம் அனித்திய மென்றும், ஸுகமும் துக்கமும்



ஸமமாக பாவிக்கப்படவேண்டு மென்றும், பரோபகாரமே உத்தம தர்ம மென்றும் பரம்பரையாக நம்பி நடந்து வரும் இந்தப் புண்ணியபூமியில் சிலர் தங்கள் தாய்நாட்டின் நன்மையை உத்தேசித்துப் பொருளாசையை விட்டு முன்வரக் கூடுமென்று ஸ்ரீகோகலே நிச்சயமாக நம்பி 1905-ம் வருஷம் ஜூன்மாதத்தில் "இந்திய ஊழியர்சங்கம்" என்றபெயருடன் புனாவில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து, தாமே அதன் முதல் மெம்பராகச் சேர்ந்து கொண்டார். இந்தச் சங்கத்தின் முயற்சியால் தேசத்துக்கு விசேஷ நன்மையுண்டாகக் கூடுமென்று அவர் நம்பி யிருந்ததல்லாமல் பிராணனை விடும் பொழுது கூட அதைப்பற்றியே கவலைப் பட்டுக்கொண்டிருந்தாராகையால் சற்று விரிவாக அதன் லட்சியங்களைப் பற்றிச் சொல்வது பொருந்தும். நன்றாய்க் கற்றறிந்தவர்களே சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். தங்களுடைய சொந்தத்துக்காக அவர்கள் பணம் சம்பாதிக்கக் கூடாது; ஆனதால் அவர்களுக்கு ஏதேனும் வரும்படி கிடைத்தால் அதைச் சங்கத்தின் நிதியுடன் சேர்த்து விடவேண்டும். சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வழிகளை அறிந்து கொள்வதற்காக அவர்கள் பயிற்சி பெறுங்காலத்தில் மாதமொன்றுக்கு சங்கம் அவர்களுக்கு 30 ரூபாய் கொடுக்கும். பயிற்சி முடிந்து விட்டால் மாதமொன்றுக்கு 50 ரூபாய் கொடுக்கும். அவர்களுக்குக் குழந்தைகளிருந்தால் அவர்களைப் படிக்கவைக்க சங்கம் உபகாரஞ் செய்யும். சாதாரணமாக 5 வருஷ காலம் பயிற்சி பெறவேண்டும். சில சமயங்களில் அதற்குள்ளாகவும் பயிற்சி முடிந்து அஸல் மெம்பராய்விடலாம். பயிற்சிக் காலத்தில் தேச சரித்திரம், அர்த்த சாஸ்திரம், ஜனச்சார சாஸ்திரம் முதலிய விஷயங்களை முதலிரண்டு மூன்று வருஷகாலம் படிக்கவேண்டும். பிறகு சங்

கத்தின் மெம்பர்கள் எவ்வாறு வேலைசெய்கிறார்களென்று நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ள மெம்பர்களிருக்குமிடத்துக்குப் போய் அவர்களுடன் கூட இருக்கவேண்டும்.

சங்கத்திற்காகத் தமது நண்பர்களிடமிருந்து ஸ்ரீமான் கோகலே சில தொகைகளை வசூல் செய்தார். சிலர் வருஷமொன்றுக்கு இவ்வளவென்று கொடுத்து உதவி வருகிறார்கள். ஒருவரும் கணக்குக்கேட்க அதிகாரமில்லை; சங்கத்தினர் சரியாகச் செலவிடுவார்கள் என்று நம்பியே தொகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் 20 மெம்பர்கள் இதுவரையில் சேர்ந்திருக்கிறார்கள். சென்னை மாகாணக்காரரும் எமதாசிரியருமாகிய ஸ்ரீமான் வலங்கிமான் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் ஸ்ரீமான் கோகலேக்குப் பிறகு சங்கத்தின் அக்கிராஸனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பது நமக்கெல்லாம் பெருமையே.

## சங்கத்தின் லட்சியங்கள்.

சங்கத்தின் லட்சியங்களென்னவென்பதை ஸ்ரீமான் கோகலேயே எழுதியிருக்கிறார். "நமது தேசத்தின் அபிவிருத்தியை உத்தேசித்து, இதுவரையில் செய்யப்பட்டிருக்கிற வேலையானது ஒரு நகரத்தை நிர்மாணஞ் செய்யும் பொருட்டு காட்டை அழித்து அஸ்திவாரம் போட்டிருப்பது போலிருக்கிறது. மேல் கட்டடவேலையை இனித்தான் ஆரம்பிக்கவேண்டும். வேலை செய்கிறவர்கள் வேலைக்குத் தக்கபடி சிரத்தையுடனும் ஆத்மத் தியாகஞ் செய்தும் உழைக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதற்காகவே 'இந்திய ஊழியர் சங்கம்' ஸ்தாபிக்கப்பட்டது. பகவத் ஸங்கல்பத்தால் இந்தியாவின் க்ஷேமத்தின் பொருட்டு ப்ரிட்டிஷ் அரசாட்சி இந்த தேசத்தில் ஏற்பட்டதென்று இந்த சங்கத்தின் மெம்



பர்கள் மனதார ஒப்புக்கொண்டவர்கள். ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அடங்கி இத்தேசம் சுய ஆட்சி பெறவேண்டுமென்பதும், ஜனங்கள் இப்பொழுதிருப்பதைவிட மேன்மையாக வாழக்கூடியவர்களாகச் செய்யவேண்டுமென்பதும் இந்த சங்கத்தின் மெம்பர்களுடைய லட்சியங்கள். பொறுமையுடன் பல வருஷங்கள் உழைத்தாலன்றி இந்த உத்தேசங்கள் நிறைவேற மாட்டாவென்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஜனங்களுடைய நடத்தையும் சாமார்த்தியமும் இப்பொழுதிருப்பதை விட சிலாக்கியமானவைகளாகும்படி செய்யவே சங்கம் முக்கியமாக வேலை செய்யவேண்டும்.

(1) தங்களுடைய போதனையாலும் நடத்தையாலும் ஜனங்களுக்குத் தேசாபிமானம் உண்டாகும்படி செய்ய மெம்பர்கள் பிரயாஸைப் படுவார்கள்; தன்னுடைய நன்மையை விட்டுக் கொடுத்து, தேசத்துக்கான வழிகளில் ஊழியஞ் செய்வதே தேசாபிமானமுள்ள ஒருவன் செய்ய வேண்டிய வேலை.

(2) ராஜாங்க விஷயங்களைப் பற்றிய அறிவை ஜனங்களுக்கு உண்டுபண்ணவும், தங்களுடைய குறைகளையும் தேவைகளையும் பற்றி முறையிட்டுக் கொள்ளும்படி செய்யவும் மெம்பர்கள் உழைப்பார்கள். பொதுவிஷயங்களைப் பற்றி நன்றாகப் படித்தறிந்து கொண்டே இந்த வேலையைச் செய்வார்கள்.

(3) பல வகுப்பார்களுக்குள்ளும் அந்தரங்கமான அன்னியோன்னியம் உண்டாகவும் விருத்தியாகவும் மெம்பர்கள் பிரயாஸைப் படுவார்கள்.

(4) கல்வி அபிவிருத்திக்காக உழைப்பார்கள்; முக்கியமாக ஸ்திரீகளுடைய கல்வியும், படிப்பில்லாத வகுப்புகளின்

கல்வியும், தொழிற்கல்வியும் விருத்திபடைய வேண்டிய விஷயத்திலேயே அதிகமாக உழைப்பார்கள்.

(5) தேசத்தில் தொழில்கள் விருத்தியடையவும் பாடுபடுவார்கள்.

(6) தாழ்ந்த வகுப்புகளைக் கைதூக்கி விட வேண்டிய விஷயத்திலும் உழைப்பார்கள்."

### மெம்பர்கள் செய்யவேண்டிய பிரமாணங்கள்.

இந்திய ஊழியச் சங்கத்தைச் சேருகிறவர்கள் அடியிற்கண்ட பிரமாணங்களைச் செய்ய வேண்டியது:—

(1) இந்த தேசத்தின் காரியங்களிலேயே எப்பொழுதும் என்னுடைய கவனத்தைச் செலுத்துவேன்; என்னால் கூடிய வரையில் பிரயாசைப் படுவேன்.

(2) தேச ஊழியம் செய்வதன் பலனாக எனக்கு எந்த நன்மையையும் தேடமாட்டேன்.

(3) எல்லா இந்தியர்களையும் என்னுடைய சகோதரர்களாகப் பாவித்து, ஜாதி வித்தியாஸம் மத வித்தியாசங்களைப் பாராட்டாமல் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபடுவேன்.

(4) எனக்கும் என்னுடைய குடும்பத்துக்கும் சங்கம் என்ன ஏற்பாடு செய்கிறதோ அதைக் கொண்டு திருப்தியடைந்திருப்பதல்லாமல், எனக்காகப் பணம் சம்பாதிக்க முயற்சி செய்யவே மாட்டேன்.

(5) பரிசுத்தமாகவும் தோஷ மில்லாமலும் வாழ்வேன்.

(6) யாரிடத்திலும் என்னைப்பற்றி சச்சரவு செய்ய மாட்டேன்.

(7) சங்கத்தின் லட்சியங்களை எப்பொழுதும் நினைப்பில் வைத்துக்கொண்டு, அதனுடைய நன்மைகளில் கருத்தைச் செலுத்தினவனாகவே இருப்பேன். என்னால் கூடிய உற்சாகத்துடன், அதனுடைய நோக்கங்கள் நிறைவேற வழி தேடுவேன். சங்கத்தின் லட்சியங்களுக்குப் பொருந்தாத எந்தக்காரியத்தையும் நான் செய்யமாட்டேன்.



### சங்கத்திற்குக் நாம் செய்யவேண்டிய கடமை.

இந்த இந்திய ஊழியர் சங்கத்தைப் போன்ற சங்கங்கள் ஒவ்வொரு தேசத்தில் ஒரோர் காலத்தில் ஏற்பட்டு வெகு வேலைகள் செய்திருக்கின்றன. அந்தந்த தேச ஜனங்கள் செய்த உதவியே அச்சங்கங்கள் நல்ல வேலை செய்திருப்பதற்குக் காரணம். நமது தேசத்து ஜனங்களும் இந்திய ஊழியச் சங்கத்தின் நோக்கங்கள் நிறைவேறவேண்டி ஒத்துழைத்து அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்களானால், அது வலுத்து நாளடைவில் சிறப்புடன் விளங்கக் கூடும். அதைச் சேர்ந்திருக்கிறவர்கள் தேச நன்மைக்காகக் கையிற் கங்கணம் கட்டிக்கொண்ட சன்னியாசிகள் என்பதை நாம் எப்பொழுதும் நினைப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். சன்னியாசிகளை நாம் நன்கு மதிப்பதுபோல், இந்திய ஊழியச் சங்கத்தினர்களையும் மதிக்கவேண்டும். தீர்க்கமாக யோசிப்போமானால், ஒரு சன்னியாசியைவிட "இந்தியாவின் ஊழியன்" மேலானவன். சன்னியாசி தனக்கு நித்திய சுகத்தைத் தேடுகிறவன்; இந்திய ஊழியன் நமக்கு நித்திய சுகத்தைத் தேடுகிறவன். முக்கியமான வேறு பல வேலைகளில் ஸ்ரீமான் கோகலே உழைத்துக் கொண்டிருந்து விட்டாராகையால் இந்தச் சங்கம் நிர்விக்கினமாக நடப்பதற்கு வேண்டிய அளவு பொருள் தேடிவைத்திருப்பதாகத் தெரியவில்லை. உடலைவிட்டு உயிர் நீங்கும் காலத்திலும் இச்சங்கத்தைக் குறித்துக் கவலைப்பட்டுக்

கொண்டிருந்தாராம். அவருடைய கடைசி எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு எல்லா இந்தியர்களும் இந்தச் சங்கத்துக்குப் பொருளுதவி செய்து அதை விருத்திக்குக் கொண்டுவருவது கடமையாகும்.

சுபம்.

---

# தோத்திர மாலை

ஸ்ரீமான் கோகலே இறந்துவிட்ட சமாசாரத்தை அறிந்தவுடன் இங்கிலாந்தில் பல பிரமுகர்கள் அவருடைய குணாதிசயங்களைப் புகழ்ந்து பத்திரிகைகளுக்கு எழுதினார்கள். அக்கடிதங்களிற் சிலவற்றை இங்கு மொழி பெயர்த்தெழுதுகிறோம் :—

## ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் "காமன்ஸ் ஸபை" என்று சொல்லப்படும் ஜனப்பிரதிநிதிகளின் ஸபையில் முன் மெம்பராயிருந்தவரும், இந்தியர்களின் நன்மைக்காகப் பாடுபடுவதையே விரதமாகக் கொண்டவருமாகிய ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்ற ஆங்கில உத்தம புருஷன் ஸ்ரீமான் கோகலே இறந்துபோன சமாசாரத்தைத் தந்தி மூலம் கேட்டவுடன், "டெய்லி நியூஸ்" என்ற லண்டன் பத்திரிகைக்கு எழுதின கடிதத்தின் சிலபாகங்கள் பின்வருமாறு :—

"'கோகலே அகால மரணமடைந்து விட்டார்; இந்தியா முழுமையும் துக்கப்படுகிறது; உண்மையான தேசாபிமானியாகிய அவரை இழந்த நஷ்டத்துக்குப் பரிகாரம் இல்லை' என்று பம்பாயிலிருந்து எனக்கு வந்த ஒரு தந்தி சமாச்சாரம் சொல்லுகிறது; இந்தச்செய்தி உலகம் முழுமைக்கும் துக்கத்தை உண்டுபண்ணும்.



"இந்தியாவின் காரியங்களில் ஓயாமல் உழைத்து வந்ததால், அவருடைய தேகஸ்திதி கெட்டுப் போயிருந்த விஷயம் அவருடைய நண்பர்கள் பலருக்கும் அதிகக் கவலைக்கிடமாயிருந்தது; ஆனால் அவர் இந்தியாவுக்குத் திரும்பிப் போனது முதல் சிறிது நம்ப இடம் உண்டாயிருந்தது; கடைசியாக அவரிடமிருந்து வந்த கடிதத்தில் "கொஞ்சங் கொஞ்சமாக என்னுடைய தேகஸ்திதி அநுகூலமாய் வருகிறது" என்று அவர் எழுதியிருந்தார். ஆகையால் இந்த அநியாயச் செய்தி எதிர்பாராத நிலைமையில் வந்ததாகும்; இதைப் பார்த்தவுடன், மனது பிரமையடைந்துவிட்டது; வெகு நாளாக அவருடைய யோசனையைக் கேட்டு அந்தப்படி நடந்து வந்திருக்கிறவர்கள் தங்களுக்குள்ள துக்கத்தைப் பற்றி சிலவரிகள்கூட எழுதக்கூடாமல் இந்தச் செய்தி அவர்களை அடித்துப்போட்டு விட்டது.

"அவரை இழந்த நஷ்டத்துக்குப் பரிகாரமில்லை யென்று தந்தி சொல்வது உண்மையே; அவருடைய யோக்கியதைகளையும், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அவருடைய செல்வாக்கால் உண்டாய்வந்த நன்மையையும் யோசிக்கையில் அவருடைய மரணத்தால் நேர்ந்த சேதத்துக்குப் பரிகாரமில்லைதான். அவருடைய உத்தமமான நடக்கையை அறிந்தவர்கள் அவரிடத்தில் மிகப் பிரேமைகொண்டிருந்தார்கள்; அவருடைய புத்தியின் வன்மையைக் கண்டவர்கள் அவரிடத்தில் வெகு மதிப்புக் கொண்டிருந்தார்கள். இந்தியாவின் உத்தமத் துறவிகள் இன்னமாதிரிதான் இருப்பார்கள் என்று அவரைக் கொண்டு உலகம் அறியும்படி அவர் இருந்து வந்தார். நமக்குள்ள சொந்த துக்கத்தை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானாலும், இந்த சமயத்தில் அவரை இழந்ததால் இந்தியா எவ்வளவு நஷ்டந்தான் அடைந்திருக்கிற

வென்று கணக்கிடமுடியாது. ஏனென்றால் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் புத்திமான்களுடைய நம்பிக்கையை அவர் சம்பாதித்திருந்ததுபோல் வேறெவரும் சம்பாதித்திருக்கவில்லை. கிழக்கையும் மேற்கையும் ஒட்டவைத்துக் கொண்டிருக்க சரியான சங்கிலி அவர்.

* * * *

## இங்கிலாந்தில் அவர் செய்த வேலை.

"இங்கிலாந்தில் அவர் செய்து வந்த வேலையைப்பற்றிச் சிறிது சொன்னால் போதுமானது; தெளிவான புத்தியுடையவரென்றும், நிச்சயமான ராஜபக்தி உடையவரென்றும், இந்தியாவைப்பற்றின விஷயங்களை நன்கறிந்தவரென்றும் இங்கிலாந்திலுள்ளோர் அவரைக் கருதியிருந்தார்கள்; பொது ஜன மீட்டிங்குகளில் அவர் பேசிய பொழுதெல்லாம் வினயமான அவருடைய பிரசங்க வன்மையானது சபையோரை அவருடைய பக்கத்தில் திருப்பிவிட்டது. * * *

"தனிமையில் யாரையாவது அவர் கண்டு பேசிய சமயங்களிலும், அவருடைய அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ளும்படியே செய்துவந்தார். மிஸ்டர் கோகலே பேசப் போனபொழுதெல்லாம் இங்கிலாந்திலுள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் தடையன்னியில் அவருக்குப் பேட்டிகொடுத்து அவர் சொல்ல விரும்பியதை கவனமாகக் கேட்டுவந்தது அவர்களுக்குப் பெருமையே. லார்டு மார்லி இந்தியா மந்திரியாயிருந்த பொழுது பல சமயங்களில் வெகு நேரம் மிஸ்டர் கோகலேயுடன் பேசிக் கொண்டிருந்தாரென்பதும், அந்த சமயங்களிலெல்லாம் இந்தியர்களுடைய ஆசைகளையும் தேவைகளையும் மிஸ்டர் கோகலே அவருக்கு எடுத்துச் சொன்னாரென்பதும் எல்லோரும் அறிந்த விஷயங்களே.



லார்டு மார்லியும் லார்டு மின்டோவும் யோசித்துச் செய்த திருத்தங்கள் மிஸ்டர் கோகலே லார்டு மார்லிக்குத் தெரிவித்த விஷயங்களை வெகுவாக அனுசரித்தவை. * * *

"அவரை இழந்துவிட்ட துக்கத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கையில், என்னுடைய சிநேகிதரைப்பற்றி இவ்வளவுதான் என்னால் எழுதக் கூடியதாயிருக்கிறது. இந்தியாவுக்குத் திரும்பிப் போகும்பொழுது அவர் என்னிடத்தில் சொல்லிக்கொண்டபொழுதே, மறுபடி இங்கிலாந்துக்கு வரக்கூடுமோ என்றும் என்னைப் பார்க்க நேருமோ என்றும் சந்தேகப்பட்டுவிட்டார். ஒரு விஷயத்தில் அவர் வெளியிட்ட இஷ்டம் நிறைவேறிவிட்டது. அவருடைய தேசத்தில், அவருடைய வீட்டில், அவரிடத்தில் மிக வாஞ்சையுள்ள பந்துக்களும் பால்ய சிநேகிதர்களும் கூடவிருக்க இறந்து போனாரே அதுதான் அவர் விரும்பிய விஷயம்."

## ஸர் ஹென்றி காட்டன்.

ஸர் ஹென்றி காட்டன் இந்தியாவில் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகத்தில் அமர்ந்து, படிப்படியாக உயர்ந்து, கடைசியாக வங்காளத்தின் லெப்டினெண்டு கவர்னராயிருந்து, இங்கிலாந்துக்குச் சென்று, பார்லிமெண்டில் காமன்ஸ் சபையில் மெம்பராயிருந்தவர். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற முதுமொழியை மனதில்கொண்டு இந்தியாவின் நன்மையை நாடி இங்கிலாந்திலிருந்து கொண்டு ஓயாமல் உழைத்து வருகிறவர். காங்கிரஸ் சபையின் அக்கிராஸனாதிபதியாகவும் ஒருவருஷம் இருந்திருக்கிறார். ஸ்ரீமான் கோகலேயின் மரணத்தைக் கேட்டு லண்டனில் பிரசுரமாகும் "இந்தியா" என்ற பத்திரிகைக்கு ஒரு கடிதத்தை அவர் எழுதியனுப்பினர். அது பின் வருமாறு :—

"1902-ம் வருஷத்தில் நான் உத்தியோகத்திலிருந்து நீங்கிக் கொண்டபொழுது, மிஸ்டர் கோகலேயைக் கல்கத்தா நகரில் முதல் தடவை சந்தித்தேன். ராஜப் பிரதிநிதியின் சட்டசபையில் அப்பொழுதுதான் அவர் ஒரு ஸ்தானத்தை அடைந்திருந்தார். பிறகு 1904-ம் வருஷத்தில் பம்பாய் நகரில் காங்கிரஸ் கூடினவரையில் அவரை நான் சந்திக்கவில்லை; அதுமுதல் நாங்கள் இருவரும் வெகு நெருக்கமாகப் பழகி அன்னியோன்னியமாக இருந்து வந்தோம். அந்தக் காங்கிரஸுக்கு வந்திருந்தவர்களில், அவர் என்னுடைய கவனத்தைக் கவர்ந்ததுபோல் வேறெவரும் கவரவில்லை. அப்பொழுது அவருக்கு வயது 38; அவருடைய சக்திகள் எல்லாம் திடமாயிருந்த காலம்; இந்தியாவின் வரவு செலவு சம்பந்தமான ஒரு தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசவேண்டியவேலை அவருக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவர் பேச ஆரம்பித்ததும் சபை முழுமையும் மந்திரத்தால் கட்டுப்பட்டதுபோல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தது. வேறெந்த இந்தியரும் அம்மாதிரிப் பேசி நான் கேட்டதில்லையென்று அந்த சமயத்தில் நினைத்தேன். ப்ரிட்டிஷ் ராஜதந்திரிகள் பேசியிருக்கிற பேச்சுகளில் மிகச் சிலாக்கியமான பேச்சுகளுக்குச் சமானமாக அவர் பேசிய மாதிரியும் அவர் எடுத்துச் சொன்ன நியாயங்களுமிருந்தன.

"மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி, காலஞ்சென்ற லால்மோகன் கோஸ் முதலானவர்களைப்போல் வாசாமகோசரமாகப் பேசும் சக்தி மிஸ்டர் கோகலேக்கு இருந்ததில்லை; ஆனால் வினயமாகப் பேசும் சாமார்த்தியத்திலும், படிப்படியாக நியாயங்களை எடுத்துச் சொல்வதிலும், பேசப்புகுந்த விஷயத்தைப் பற்றிய அறிவிலும் வேறெவரும் அவருக்கு



உயர்வாக இந்தியாவில் இருந்ததில்லை; சட்ட சபையில் இருந்ததேயில்லையென்பது நிச்சயம். அங்குதான் மிஸ்டர் கோகலே பல வெற்றியடைந்தார்.

"வரவு செலவு விஷயத்தில்தான் அவருக்கு அதிகப் பாண்டித்தியமிருந்தது. வருஷா வருஷம் வரவு செலவு திட்டத்தைப் பற்றி அவர் பேசிய பேச்சுகள் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களுமாகிய அந்தச் சபை மெம்பர்கள் எல்லோராலும் மிகப் பாராட்டப்பட்டவை. அவருடைய காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் வரவு-செலவு மெம்பர்களாயிருந்தவர்கள் கோகலே ஒருவர் தான் தங்களுக்குச் சரியான எதிரியென்று ஒப்புக் கொண்டார்கள்; வரவு செலவு திட்டங்களைப்பற்றி வாதம் நடந்த பொழுது அவர் எடுத்துச் சொன்ன நியாயங்களின் குணத்தை ஒவ்வொரு ராஜப்பிரதிநிதியும் தாராளமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையாலும் பயிற்சியாலும் அவ்வளவு யோக்கியதையை அடைந்திருந்த அவர் நிர்வாக சபை மெம்பர்களில் ஒருவராகித் தம்முடைய சாமர்த்தியங்களையெல்லாம் உபயோகப் படுத்தக் கூடாமல் எதிர்க்கட்சிப் போர்வையையே எப்பொழுதும் போர்த்துக் கொண்டிருக்கும்படி கவர்ன்மெண்டின் முறை இருப்பதானது அவருடைய நண்பர்களுக்கு வருத்தமாகத்தான் இருந்திருக்கும்.

"காங்கிரஸுக்காக அவர் எப்பாடு பட்டாரென்றும் அந்த சபையின் நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு இந்தியாவிலும் இந்த தேசத்திலும் எப்படி உழைத்தாரென்றும், அவருடைய அன்பு முழுமையையும் கவர்ந்திருந்த அவருடைய தேசத்துக்காக எப்படி உயிரையும் பலிகொடுத்தாரென்றும் பிறர் சொல்வார்கள்; கடைசித் தடவையாக

நான் அவரைப்பார்த்த பொழுது, சிறிதும் நம்ப இடமில்லாமல் அவருடைய தேக ஸ்திதி கெட்டுப் போயிருந்தது. அப்பொழுதும் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் ஏம்மாதிரி ரிபோர்ட் எழுதுமோ என்று கவலைப்பட்டு அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய மரணம் அந்தக் கமிஷனுக்குப் பெரிய நஷ்டமாகும். அவரால் ஸ்தாபிக்கப்பட்ட "இந்தியாவின் ஊழியர் சங்கத்"தைப்பற்றியே கடைசிகாலத்திலும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாரென்று தெரிகிறது. அவர் காட்டியிருக்கும் வழியைப் பின்பற்றி நடந்து அந்த சங்கம் விருத்தியாகுமென்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

"எவ்வளவு வேலைகளை மிஸ்டர் கோகலே மேலே தூக்கிப் போட்டுக்கொண்டு உழைத்தாரென்பதாவது, தென் ஆப்ரிக்காவிலுள்ள தம்முடைய சுஜனங்களுக்காக எப்படிப் பிரயாஸைப்பட்டாரென்பதாவது எனக்கு நினைப்பில்லாமலிருக்கவில்லை. ஆனால் அவருடைய உத்தமகுணங்களைப்பற்றிப் பேசுவதே எனக்கு ருசியாயிருக்கிறது; மற்றெல்லா விஷயங்களையும்விட பிறரையும் தன்னைப்போல் நினைக்கும் அவருடைய சுபாவத்தையும் தன்னுடைய நன்மையைத் தியாகஞ் செய்யும் குணத்தையும், எந்த சமயத்திலும் எந்த விஷயத்திலும் சத்தியமாகவே நடக்கும் வழக்கத்தையும், அவர் செய்து வந்த வேலையின் மேன்மையையும் நினைத்து நான் தலைவணங்குகிறேன்.

## மிஸ்டர் சார்ல்ஸ ராபர்ட்ஸ்

பிரிடிஷ் பார்லிமெண்டில் ஜனப்பிரதிநிதி சபையாகிய "காமன்ஸ் சபை"யில் மெம்பரா யிருப்பவரும், ஸ்ரீமான் கோகலே இறந்து போன பொழுது இந்தியா உதவி மந்திரியாயிருந்தவருமான மிஸ்டர் சார்ல்ஸ் ராபர்ட்ஸ் ஸ்ரீமான்



கோகலேயைப் பற்றி "இந்தியா" என்ற பத்திரிகைக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:—

"மிஸ்டர் கோகலேயின் மரணத்தால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிற அவருடைய சிநேகிதர்கள் எல்லோருக்கும் நான் என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கும் எனக்கும் சொற்பப் பழக்கந்தான் ஏற்பட்டது; அவர் இந்தியாவுக்குப் புறப்படுவதற்குமுன் அவரிடத்தில் சில சமயமேனும் பேச நேர்ந்ததற்காக இப்பொழுது சந்தோஷப் படுகிறேன். அவருடைய புத்தியின் பலமும், விஷயங்களை அவர் கவனித்திருந்ததும், அவருடைய நிதானமும் அவரைக் கண்டு பேசியவர்களின் மனதில் பதியாமலிருக்க முடியாது. அவருடைய அகால மரணமானது பெரிய அனர்த்தமாக இந்தியாவில் கருதப்படுகிறது போல் இங்கிலாந்திலும் கருதப்படுகிறது."

## மிஸ்டர் மிர்ஸா அப்பாஸ் அலிபெக், C.S.I.

இந்தியா மந்திரியின் ஆலோசனை சபையில் மெம்பராயிருக்கும் மிஸ்டர் மிர்ஸா அப்பாஸ் அலிபெக் என்ற முகம்மதிய கனவான் பின்வருமாறு எழுதுகிறார்:—

"மிஸ்டர் கோகலேயின் மரணம் இந்தியாவுக்கு நேர்ந்த பெரிய துரதிருஷ்டம்; அதற்குப் பரிகாரமே யில்லை. இந்தியா தன்னுடைய உத்தமமான பிள்ளைகளில் ஒருவரை இழந்துவிட்டது; பிரமுகர்கள் எல்லோரிலும் முக்கியமானவர் போய் விட்டார். அவருடைய பரிசுத்தமான வாழ்வும் அந்தரங்க சுத்தமும் பளிங்குபோல் வெளிப்படையா யிருந்தன. எந்த ஜாதியாரிடத்திலாவது, எந்த மதத்திடத்திலாவது அவருக்குத் துவேஷமிருந்ததில்லை. அவருடைய சாந்த சுபாவமும், உயர்ந்தகுணமும், வினயமாகப்

பேசும் திறமையும், கபட மற்ற தன்மையும், அடக்கமும், டாம்பீகமில்லாத நடத்தையும் சொந்தப் பிரயோஜனத்தைக் கருதாத சுபாவமும் அவருடைய உயர்ந்த சாமர்த்தியங்களுக்குப் பின் பலமாக உபயோகப்பட்டன. அத்தனை சக்திகளையும் அவர் தம்முடைய தேச ஜனங்களுக்காகவே உபயோகப்படுத்தி வந்தார். அழுந்திக் கிடக்கிற ஒரு ஜாதியில் சொந்த நன்மையைக் கருதாதவர்களாக எத்தனை பெயர்கள் வெளிப்படுகிறார்களோ அவ்வளவு அந்த ஜாதி முன்னுக்குப் போகுமென்று பலதேச கவர்ன்மெண்டுகளையும் சோதித்து அவர் அறிந்து கொண்டார்; அதன் மேல்தான் இந்திய ஊழியர் சங்கத்தை ஸ்தாபித்தார். பொது நன்மைக்காக உழைக்க முன் வருகிறவன் தன்னுடைய சொந்த நன்மையை விட்டவனாக இருக்கவேண்டுமென்பதைத் தாமே அனுஷ்டித்துக்காட்டினார். படித்த பொழுதும், கம்பீரமாகக் காலேஜ் மாணவர்களுக்கு போதித்த பொழுதும், ஜனச்சாரத் தர்க்கத்திலும், ராஜரீக வாதத்திலும், சட்ட சபையிலும் ஓயாமல் அவர் உழைத்த உழைப்பு நல்ல பலனைத் தந்திருக்கிறது. கடைசிக் காலத்தில் அவருடைய உழைப்பானது பிரிட்டிஷ் ஏகாதியத்துக்கு ஒரு பெரிய ஐவேஜியாயிருந்தது. பாவி இயமன் அவருடைய தொண்டையை நெருக்கிக்கொண்டிருக்கையிலும், தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியரின் நிலைமையைச் சற்று சௌகர்யமாகச் செய்யும் பொருட்டு அங்கு அவர் ஓடினதைப் பார்த்தவர்களுக்கு அவருடைய குணஞ் சிறிது உண்டாயிருக்கும்; மளமள வென்று தம்முடைய பிராணன் போய்க்கொண்டிருப்பதாக அவர் அறிந்திருந்தும், பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் ஓயாமல் வெகு பாடுபட்டு உழைத்ததைப் பார்த்த கல் மனமும் கரைந்திருக்கும்.”



## ஸர் ஜியார்ஜ் பர்ட்வுட்.

பம்பாய் கவர்னரின் நிர்வாகசபை மெம்பராயிருந்து இப்பொழுது இங்கிலாந்தில் இருந்துவருகிற ஸர் ஜியார்ஜ் பர்ட்வுட் பின் வருமாறு எழுதுகிறார்:—

“காலஞ் சென்றுவிட்ட மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே என்னைவிட ஒரு தலைமுறைக்கதிகம் இளையவர். நான் பம்பாயைவிட்டு வந்து 20 வருஷமானதற்குப் பிறகே அவருக்கு பிரக்யாதி உண்டாகத் தலைப்பட்டது; இக்காரணங்களாலும் அவருடைய சில அபிப்பிராயங்களை நான் முழுமையும் ஒப்புக் கொள்ளாதவனாகையாலும், அவர் இங்கிலாந்துக்கு வந்த சமயங்களில் அவரை அதிகமாக நான் சந்தித்ததில்லை. ஆனால் அவர் பிராமணனாகையாலும், அதிலும் “சித்பவ” பிராமணனாகையாலும், அவரிடத்தில் எனக்கு அன்புண்டு.

“பௌத்தர்களும் முகம்மதியர்களும் வட இந்தியாவில் பல கொடுமைகளைச் செய்த காலத்தில் ‘சித்பவ’ பிராமணர்கள் மகாராஷ்டிர தேசத்தில் மலைகளுக்கிடையில் வாழ்ந்து தங்களுடைய ஆரியப்பிறப்பும் மதமும் கலப்படையாமல் காப்பாற்றினவர்கள். முகம்மதிய ராஜ்யம் ஒடுங்கவே, அவர்கள் வெளிப்பட்டு, தங்களுடைய புத்தி வலிமையாலும் சரீர வலிமையாலும் மகாராஷ்டிர ஜனங்களையெல்லாம் தங்கள் வசப்படுத்தி மந்திரி ஸ்தானம் முதல் எல்லா அதிகாரங்களையும் கைக்கொண்டனர். ராஜ தந்திரத்திறமை அவர்களுடைய ரத்தத்திலேயே கலந்திருக்கிறது. இக்காரணத்தாலும் அவர் சரியான பிராமணனாகையாலும், அவருக்கு பிரக்யாதி உண்டாகத் தலைப்பட்டது முதல் குறிப்பாக நான் அவரை கவனித்துக் கொண்டேயிருந்தேன்

1897-ம் வருஷத்தில் அவர் இங்கிலாந்துக்கு வந்தபொழுது அவரை நான் கண்டதும், அந்த ஜாதிக்குள்ள புத்தி வன்மை அவரிடத்தில் இருக்கக் கண்டு அவரிடத்தில் அதிசப் பிரமை கொண்டுவிட்டேன். என்னுடைய தம்பிபோலவே பாவித்தேன்.

“சொந்த நன்மையை உத்தேசித்து எத்தனையோ பெயர்கள் பொதுக் காரியங்களில் இறங்குவார்கள்; அப்பேர்ப்பட்டவரல்லர் அவர். சுபாவத்திலேயே அவர் ராஜ தந்திரி. ஒரு காரியத்தில் தாம் செய்வது இந்தியாவுக்கு நன்மையை உண்டுபண்ணும் என்று அவருடைய புத்தி திருப்திப்பட்டுவிட்டால், ஜனங்கள் தம்மை ஆதரிக்கிறார்களா அல்லது தம்மிடத்தில் அபிமானமுள்ளவர்களாயிருக்கிறார்களா என்று அவர் கவனித்ததே இல்லை. தமக்கு வேண்டியவர்களையோ வேண்டாதவர்களையோ தோத்திரம் பண்ண அவருடைய புத்தி கீழ் இறங்கினதேயில்லை. வாயால் சொன்னதைச் செய்தே தீருவர் ;

“பிறருடன் பழகுவதில் வெகு ரம்யமான சுபாவமுள்ளவர் ; யாரும் அவரிடத்தில் ஆசைகொள்ளுவார்கள். அவருடைய மரணம் பரிகார மற்ற சேதமே. ஆனால் அவர் காட்டிய வழி அழியாவழியாயிருந்து அநேகருக்கு உதவும். அவருக்குப் பின் வருகிறவர்கள் அவருடைய வழியைவிட்டு விலகாத வரையில் ஸ்ரீ பரதபூமிக்குப் பெரிய பாக்யமாயிருப்பார்கள்.”

## மிஸ்டர் J. ராம்ஸே மாக் டொனல்டு.

பார்லிமெண்டில் காமன்ஸ் சபை மெம்பரும், பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் மெம்பருமாகிய மிஸ்டர் J. ராம்ஸே மாக்டொனல்டு பின் வருமாறு எழுதுகிறார் :—

என்னுடைய தோழரும் ஸகாவுமாகிய மிஸ்டர்



கோகலேயின் மரணத்தால் எனக்குண்டாயிருக்கிற துக்கத்தை “இந்தியா”ப் பத்திரிகை மூலமாக வெளியிட்டுக் கொள்கிறேன். அவருடைய மரணத்தால் உத்தமமான ஒரு பிள்ளையை இந்தியா இழந்து விட்டது. தங்களுடைய ஜாதியிடத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையுள்ளவர்களுக்கு என்ன மனோ சாந்தியும் மனோ திடனும் இருக்குமோ அந்த மனோ சாந்தியும் மனோதிடனும் அவருக்கிருந்தன.

“மேல் நாடுகளையும், அவைகளின் சக்திகளையும் அவர் நன்றாயறிந்தவர். மேல் நாட்டார் சாதித்திருக்கிற காரியங்களை அவர் வாயாரப் புகழ்ந்தது போல் வேறெவரும் புகழ்ந்ததில்லை ஆனால் கிழக்கு தேசங்களின் யோக்கியதையும் அவருக்குத் தெரியும். இந்தியாதான் அவருக்கு உயிர். இந்தியாவின் பெருமையைத் தாங்கிப் பேச வெகு உஷாராக எப்பொழுதுமிருப்பர்; அதனுடைய குறைகளைநீக்க வெகு பாடுபட்டார். இந்தியா விழுந்து விட்ட இடத்தில் அதைத் தூக்கிவிடப் பார்ப்பர் ; இந்தியா வெற்றியடைந்த இடத்தில் அதைப் புகழ்ந்து கொண்டாடுவர்.

“பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் மெம்பர்களாக நாங்களிருவரும் சேர்ந்தாற்போல் பலநாளிருந்து விசாரணை செய்திருக்கிறோம். அந்தக் கமிஷன் சம்பந்தமாக நடந்த பல விசேஷங்களில், அவர்கூட விருந்ததும் அவருடைய முறைகளும் முக்கியமான விசேஷங்களாயிருந்தன. விஷயங்களை சாங்கோபாங்கமாக அவர் அறிந்திருந்ததும், அவருடைய பரபரப்பும், அவருடைய பிடிவாதமும், அவருடைய அதிகாரமும் எனக்கு ஆச்சரியத்தை விளைவித்துக் கொண்டே இருந்தன. ஐயோ! அந்தக் கமிஷனுடைய ரிபோர்ட்டில் கை எழுத்து செய்ய இருக்காமலா போய்விட்டார்!

“அவர் புறப்பட்டுப் போனபொழுது வெகு விசனத்துடன்தான் அவரை விட்டுப் பிரிந்தேன்; மறுபடியும் அநேகமாக சந்திக்க மாட்டோமென்ற சந்தேகம் எனக்குண்டு. அவருடைய ஞாபகம் அவருடையதேச ஜனங்

ரிகளின் மனதில் ஊன் நிலைபெற்றிருக்கட்டும். அதைவிட வேறு கோவில் தனக்கு வேண்டுமென்று அவருடைய ஜீவன் விரும்பாது. அவர் காலிசெய்துவிட்ட ஸ்தானங்களை வகிக்கப் போகிறவர்களுக்கு அவர் செய்த வேலை தைரியத்தைக் கொடுக்கட்டும். அதைவிட வேறெதையும் அவர் விரும்பியிருக்கமாட்டார்."

## லார்டு ரே, G. C. S. I., G. C. I. E.

ஏற்கெனவே பம்பாய் கவர்னராயிருந்த லார்டு ரே எழுதிய கடிதம் பின் வருமாறு :—

மிஸ்டர் கோகலே இறந்துபோய் விட்டாரென்று கேள்விப்பட்டு வெகு விசனப்பட்டேன்; அவரிடத்தில் நான் விசேஷ மதிப்பு வைத்திருந்தேன். தம்முடைய சொந்த நன்மைகளைத் தியாகஞ்செய்து ஒரே மனதாக இந்தியாவின் நன்மைக்காகத் தம்முடைய வாழ்நாளை அவர் அர்ப்பணம் செய்து உழைத்தவர். அவருடைய யோசனை எப்பொழுதும் அதிக மதிப்புள்ளதாகவே இருந்தது. இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து முடிக்க வேண்டியிருந்த விஷயங்கள் சம்பந்தமாக மிதமான கொள்கைகளையே அவர் எப்பொழுதும் கொண்டிருந்தவர். அப்பேர்ப்பட்ட ஒருவருடைய மரணம் நாலு திக்கிலும் துக்கத்தை உண்டுபண்ணும்; அவருடன் பழக நேர்ந்த எல்லோரும் அவருடைய ஞாபகத்தை கௌரவமாகவேதான் கொண்டாடுவார்கள்."

## ஸர் ஹெர்பர்ட் ராபர்ட்ஸ்.

பார்லிமெண்டில் காமன்ஸ் சபை மெம்பராகிய ஸர் ஹெர்பர்ட் ராபர்ட்ஸ் பின் வருமாறு எழுதுகிறார் :—

மிஸ்டர் கோகலேயின் மரணம் சமீபித்துக்கொண்டிருந்ததாகச் சிறிது காலமாக ஒருவாறு நான் அறிந்திருந்தும், அவர் இறந்துபோய் விட்டாரென்ற செய்தி திடுக்கிடும்படி செய்து, துக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. இந்தியாவைப்பற்றிய விஷயங்களில் பார்லிமெண்டில் நான் அக்கறை



காட்ட ஆரம்பித்தது முதல்—அதாவது சென்ற 20 வருஷங்களுக் கதிகமாக—இந்தியர்களுடைய வாழ்விலும் புத்திப் போக்கிலும் எது சிரேஷ்டமானதோ அதை மிஸ்டர் கோகலேயைக் கொண்டு அறிந்து கொள்ளலாமென்றும், இந்தியாவின் விஷயங்களைப்பற்றி அவரிடமிருந்து சரியாகத் தெரிந்து கொள்ளலாமென்றும், அவர் உண்மையான சிநேகிதரென்றும் நினைந்திருந்தேன். இந்தியாவின் ஜனங்களுக் கேற்பட்ட ஒரு நெருக்கடியான காலத்தில் அவர் முக்கியஸ்தராயிருந்து காரியங்களை நடத்தினார். மிஸ்டர் கோகலே தம் தேசத்தின் பொருட்டு உழைத்த காலத்தை நான் இப்பொழுது திரும்பிப் பார்க்கையில் இரண்டொரு விஷயங்கள் முக்கியமாக மனதுக்குப் புலப்படுகின்றன.

முதல்விஷய மென்னவென்றால் மிஸ்டர் கோகலே அபூர்வமான புத்தி வன்மையுடையவர். கவர்ன்மெண்டின் வரவுசெலவு சம்பந்தத்தில் சிக்கலான விஷயங்களையெல்லாம் அவர் அறியக்கூடியவர் என்பது சட்டசபையில் அவர் செய்த வேலையிலிருந்து தெரிகிறது. இரண்டாவது, இந்தியாவின் நிலைமையையும் அதன் தேவைகளையும், ஜனங்களுடைய உண்மையான புத்திப்போக்கையும்பற்றி அவருக்கிருந்த அறிவு பிறருக்கு இல்லை. * * *.

முன்னிலுஞ் சிறிது அதிகமாகச் சுய ஆட்சிபெறக் கிரமமான முறைகளை அனுசரித்துப் பாடுபட்ட இந்தியர்களுக்கு அவர் தலைவர். இந்தவழியில் சென்ற 10 வருஷத்தில் உண்டாயிருக்கிற விருத்தியாம்சத்துக்கு அவரே காரணம். * * *"

## மிஸ்டர் A. மாக் காலம் ஸ்காட்.

பார்லிமெண்டில் காமன்ஸ் சபை மெம்பராகிய மிஸ்டர் A. மாக் காலம் ஸ்காட் பின்வருமாறு எழுதுகிறார் :—

"கோபால கிருஷ்ண கோகலே ஒரு பெரிய இந்திய ராஜ தந்திரி; ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பெரிய பிரஜைகளில் ஒருவர். இந்தியாவில் தோன்றிய ஜாதீய உணர்ச்சி பலப்பட்டு பெரிய சக்தியானதற்கு அவர் ஒரு முக்கியக்

காரணம். அவருடைய லட்சியங்கள் அற்ப சொற்பமாயில்லாமல் மிகப் பெரியவைகளாகவே இருந்தன. ஆனால் மிதமாகவே அவர் பேசுவது வழக்கம்; சமரஸமான முறைகளைத் தான் அனுஷ்டிப்பார். சமீபத்தில் இந்தியாவில் ஏற்பட்டிருந்த நெருக்கடி சமயத்தில் ஜாதீயக்கட்சியின் தலைவராக அவரிருந்ததானது இந்தியாவுக்கு மாத்திரமே யல்லாமல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குமே நல்ல காலந்தான். கவர்ன்மெண்டின் முறைகளை மாற்றக்கூடிய உத்தியோகத்தை அவர் வகிக்கவில்லையாயினும், அவருடைய சொற்ப காலத்திற்குள் இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பில் ஏற்பட்ட விருத்தியாம்சத்துக்கு அவர் பெரிய காரணம். இப்பொழுது இந்தியாவிலேற்பட்டிருக்கிற நல்ல நிலைமைக்கு லார்டு ஹார்டிஞ்சும், லார்டு மார்லியும், லார்டு க்ரூவும் எவ்வளவு காரணமோ அவ்வளவு மிஸ்டர் கோகலேயும் காரணந்தான். இனி உண்டாகவேண்டிய விருத்தியாம்சத்துக்கு வழிகாட்டக்கூடிய அவர் இந்த சமயத்தில் போய்விட்டதானது பெரிய துரதிருஷ்டம். கோபால கிருஷ்ண கோகலேயைப் போன்ற ஒரு ராஜதந்திரியைப் பெற்றெடுத்த தேசம், தன்னுடைய பிற்காலகதி என்னவாகுமோ வென்று கவலைப்படத் தேவையில்லை; அவரைப் போன்றவர்களின் யோக்கியதையை அறியக்கூடிய கவர்ன்மெண்டு தேசத்தில் ஜாதீய உணர்ச்சி பெருத்து வருகிறதற்காகக் கவலைப் படவும் தேவையில்லை."

### மிஸ்டர் ஸையது அமீர் அலி.

இந்தியா மந்திரியின் ஆலோசனை சபை மெம்பர்களில் ஒருவராக சமீபகாலம் வரையிலிருந்து வராகிய மிஸ்டர் ஸையது அமீர் அலி என்ற முகம்மதிய கனவான் பின் வருமாறு எழுதுகிறார் :—

மிஸ்டர் கோகலேயின் அகால மரணமானது எனது தேசத்து ஜனங்களுக்கெல்லாம் எவ்வித துக்கத்தை உண்டு பண்ணி விட்டதோ அதே துக்கத்தை எனக்கும் உண்டு பண்ணி விட்டது. அவருடைய மரணத்தால் இந்தியா



வானது தன்னுடைய வெகு சமர்த்தான பிள்ளைகளில் ஒருவரை இழந்து விட்டது. அவரும் நானும் சில விஷயங்களை வெவ்வேறு நோக்கங்களுடன் கருதினவர்களாயினும், அவருடைய குணத்தை நான் மிக மதித்தவன். அவருடைய சாமர்த்தியத்தை மெச்சினவன். அவரைக்காட்டிலும் முடிவாக நிடமான கொள்கைகளை அவர் உடையவர்; அவைகளை யெடுத்துச் சொல்வதில் தைரிய முள்ளவர்; ஆயினும் வேறு அபிப்பிராயங்களை உடையவர் சமிடத்தில் கலந்து பேசவும் அவர்கள் சொல்வதைக் கேட்கவும் எப்பொழுதும் தயாராயிருந்தவர். அவரைப் போன்றவர்கள் இந்தியாவில் அதிகமாக இல்லாததால், அவருடைய மரணம் பெரிய நஷ்டமேயாகும்.

---

## ராஜப் பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு அவர்கள் ஸ்ரீமான் கோகலேயைப் பற்றி பிரஸ்தாபம்.

1915-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23-ந்தேதி யன்று மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதி அவர்களின் சட்டசபை மெம்பர்கள் டில்லிமா நகரில் சட்டசபை மண்டபத்தில் மிகுந்த துக்கத்துடன் கூடினர். ராஜப்பிரதிநிதியும் கவர்னர் ஜெனரலுமாகிய லார்டு ஹார்டிஞ்சு அவர்கள் அக்கிராஸனத்தில் அமர்ந்தபொழுது வழக்கம்போல் சபை மெம்பர்கள் கூடியிருந்ததல்லாமல் வங்காளத்து கவர்னர் லார்டு கார்மிகேலும், பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் மெம்பர்களில் ஒருவரான ஸர் வாலண்டைன் சிரோலும் வேறு பல பிரமுகர்களும் மண்டபம் நிரம்ப உட்கார்ந்திருந்தனர். தூல உடம்பை விட்டுப் புகழ் உடம்பை எய்தின அதிதீர புருஷரான ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே யிடத்தில் தங்களுக்கிருந்த மதிப்பைக் காட்டுவதற்காகவே லார்டு கார்மிகேலும், ஸர் வாலண்டைன் சிரோலும் அங்கு விஜயஞ் செய்திருந்தனர். ராஜப் பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சு அவர்கள் எழுந்து பின்வருமாறு ஸ்ரீமான் கோகலேயைப் பற்றிப் பேசிப் புகழ்ந்தார் :—

“இந்த சபை மெம்பராகிய கனம் மிஸ்டர் கோகலே முதனாள் இரவில் காலஞ் சென்று விட்டாரென்ற செய்தி சென்ற 20-ந்தேதிக் காலை எனக்குக் கிடைத்தவுடன், வெகு வருத்தமுண்டாய் விட்டது. டில்லிக்கு அவர் வருவதாயிருந்தது தேக அசௌக்கியத்தால் தாமதப்பட்டதாகவும், ஆயினும் இன்று நடக்கும் இந்த மீட்டிங்குக்கு வந்து விடுவாரென்றும் நான் கேள்விப் பட்டிருந்தேன். அவ்வாறு எதிர்பார்த்திருந்த நிலைமையில் வெகுசாந்தமாக அவர் போய் விட்டாரென்று தெரிந்தவுடன் இடி இடித்தாற் போலிருந்தது எல்லோருக்கும் அப்படித்தான் இருந்திருக்கும்.” * * *

பிறகு ஸ்ரீமான் கோகலேயின் சரித்திரத்தை ராஜப்பிரதிநிதி வெகு சுருக்கமாகச் சொல்லி விட்டு, அடியிற்கண்டபடி பேசினார் :—

“1905-ம் வருஷத்துக்குப் பிறகு அடிக்கடி அவர் இங்கிலாந்துக்குப் போய் அவருடைய மனதிலிருந்த பல உத்தேசங்களைப் பற்றி வெகுவாக உழைத்து வந்தார். இந்த சட்ட சபையும் மாகாண சட்ட சபைகளும் சீர் திருத்தம் பெற்ற விஷயமாக நடந்த பேச்சு வார்த்தைகளில் அவர் அமரிக்கையுடன் வெகுவாக சம்பந்தப் பட்டிருந்தாரென்றே நான் எப்பொழுதும் நினைத்திருந்திருக்கிறேன். * * சட்ட சபையில் மிகவும் சாமர்த்தியமாகவும் அதிசயிக்கத்தக்க வாக்சாதுர்யத்துடனும் அவர் பேசக்கூடியவரென்றே பரந்தபுகழ் படைத்திருந்தார். அவருடைய உற்சாகத்தாலும ஆழ்ந்த அறிவாலும் இத்தேசத்திலுள்ள ஜனத்தலைவர்களில முக்கியஸ்தானத்தை அவர் அடைந்திருந்தார். பிரிட்டிஷ் ஆளுகையை அங்காங்கமாக ஆதரித்தவர்; ஆயினும் நிர்வாக முறைகளையும் கவர்ன்மெண்டின் போக்கையும் அநேக சமயங்களில் பயமில்லாது கண்டித்துமிருக்கிறார்; ஏதேனும் ஒரு காரியம் சரியல்ல வென்று அவருடைய புத்தியில் பட்டால், அதை கவர்ன்மெண்டு கவனிக்கும்படி செய்ய ஒரு நாளும் அவர் பின்தாங்கினதில்லை. வரவு செலவு சம்பந்தமாகவும் கல்வி சம்பந்தமாகவும் அடிக்கடி வெகுபலமாக கவர்ன்



மெண்டை அவர் தாக்கினதுண்டு. அவருடைய வாதங்களுக்குப் பதில் சொல்ல அவருக்கு எதிர்க்கட்சியார் அடிக்கடி தங்களுடைய சாமர்த்தியங்களை யெல்லாம் உபயோகித்துச் சிரமப்பட்டதுண்டு. அவரை எதிர்த்தவர்களை வெகு கடுமையாகக் கண்டிப்பாராயினும், வாதத்தில் மரியாதை தவறினதேயில்லை; அவருடைய உத்தேசம் நிறைவேறாமற் போன சமயங்களிலும், அவர் பேசியதைக் கேட்டவர்கள் அவர் மனதில் சரியென்று பட்டதைப்பற்றியே பேசினாரென்று நினைக்கும்படி செய்துவிடுவார். அவர் காலத்தில் சட்ட சபையில் பிரஸ்தாபத்துக்குவந்த விஷயங்களைப்பற்றி அவர் வெகு நன்றாக வாதஞ்செய்து வந்தார் கல்வி, வரவு செலவு, தேசநிர்வாகம் முதலிய விஷயங்களில்தான் அதிக முக்கியமாக அவர் கவனம் செலுத்திவந்தார். என்னுடைய காலத்தில் மிஸ்டர் கோகலே சிரத்தையெடுத்துக்கொண்ட பெரிய விஷயம் பிரதமக்கல்வியைப் பரவச்செய்ய வேண்டுமென்ற மசோதா. அந்த மசோதாவை அங்கீகரிக்கும்படி மெம்பர்களைச்செய்ய அவரால் கூடவில்லை யாயினும் எவ்வளவு பலத்துடனும் சாமர்த்தியத்துடனும் அவ்விஷயத்தை அவர் வற்புறுத்தினாரென்பது அவர் பேசியதைக்கேட்டவர்களுக்கு நினைப்பிலிருக்கலாம்.

“இந்தியர்கள் அன்னிய தேசங்களுக்குப் போகும் விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்ட பிரயாசையையும் இந்த சமயத்தில் நான் பிரஸ்தாபிக்க வேண்டியது அவசியம்; தென் ஆபிரிக்காவுக்கு இந்தியர்கள் போகும் விஷயத்தில் அவர் பட்ட பாடே அதிக முக்கியமானது. அங்கும் இந்தியருடைய நிலைமையை சௌகர்யமாகச் செய்ய வேண்டியே வழக்கப்படி ஓய்வு ஒழிவன்னியில் அவர் பிரயாசைப்பட்டார். அந்த சங்கடமான விஷயம் கடைசியில திருப்திகரமாக முடிந்ததற்கு முக்கியக் காரணம் தென்னாபிரிக்காவுக்கு அவர் போயிருந்த காலத்தில் தந்திரமாகவும் யுக்தியாகவும் அவர் நடந்து கொண்டதே என்பது என்னுடைய அபிப்பிராயம்.

“அவரிடத்தில் நான் பழகி வந்ததில், என்னுடைய

சட்ட சபை மெம்பராக மாத்திரம் அவரை நான் பாவித்த தில்லை; என்னுடைய சிநேகிதராகவுந்தான் பாவித்து வந்தேன். இரண்டொரு சமயங்களில் அவர் எனக்கு ஆலோசனை சொன்னதுண்டு; அப்படி அவர் சொன்ன புத்திமதி எனக்கு உபயோக முள்ளதாகவும் ஆழ்ந்த கருத்துள்ளதாகவுமே இருந்தது. தென் ஆபிரிக்கா இந்தியர் விஷயத்தில் எனக்கு அவர் வெகு நல்ல உதவி செய்தா ரென்பதையும் நான் சொல்லவேண்டும்.

"அவர் செய்து வந்திருக்கிற ஊழியத்தை மதிப்பதற்கு அடையாளமாக அவருக்கு "ஸர்" பட்டம் கொடுக்கும்படி ஆறு மாதத்துக்குமுன் தான் நான் சிபார்சு செய்தேன். ஆனால் தம்முடைய அடக்கமான சுபாவப்படி மிஸ்டர் கோகலே வந்தனமளித்துவிட்டு, எப்பொழுதும் போல் இருக்கும்படி விட்டுவிட வேண்டுமென்று சொல்லிவிட்டார்.

"இப்பொழுது நம்மை விட்டுப் போய்விட்டார்; அவ ரில்லாக் குறையை எப்பொழுதும் நான நினைக்கும்படி யாகவே இருக்கும்; இந்தியாவில் அவர் வகித்த ஸ்தானத்தைப் பூர்த்திசெய்வது கூடாத காரியமென்றே சொல்லிவிடலாம். என்னுடைய சபையிலுள்ள உத்தி யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் பொருட்டு கனம் ஸர் கங்காதர சிட்னுவிஸ் சிலவார்த்தை சொல்ல விரும்புகிறார்; அவர் பேசியான உடன் நமது நண்பரான மிஸ்டர் கோகலே யிடத்தில் நமக்கிருந்த மதிப்புக்கு அறிகுறியாக இந்த சபை இன்றைக்கு நாளைக்கூட வேண்டும். மிஸ்டர் கோகலே யின் ஜீவன் சாந்தியடையும்படி பகவான் அருள்புரிவாராக என்று லார்டு ஹார்டிஞ்சு பேசிமுடித்ததும் ஸர் கங்காதர் கண்ணீருங் கம்பலையுமாக எழுந்துநின்று தமது பால்ய சிநேகிதரைப்பற்றி வெகுவாகப் பேசிப்புகழ்ந்தார். பிறகு பிரதிநிதி அன்று சபையைக் கலைத்து விட்டார்.

ஸ்ரீமான் கோகலேயின் எண்ணங்கள் நிறைவேற, அவருடை[illegible] அடையவும் பகவான் புரிவாராக.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

171225



தரம பதினான்கனுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படி- யாரில் பசுகரணம் நீங்கிச் சிவகரணம் பிரகாசித்த சிவ ஞானிகளிடத்தில் விளைந்த விசேடங்கட்குப்பிரமாண- மாகப் 'பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங் - காலனை அன்றேவிக் காரங்கொண்ட - பாலன்-மரணந்தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம் - கர- ணம்போ லல்லாமை காண்' என்னும் வெண்பாவில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இதுவேயன்றி, திரு- நாவுக்கரையர்பால் நிகழ்ந்த அற்புதங்களை 'கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல் - கல்லேமிதப் பாக்கடனீந்த-னல்ல - மருவார் மறைக்காட்டில்வாசல் திறப்பித்தல் - திருவாமூராளி செயல்' என்று விதந்து கூறியிருக்கின்றனர். இவைகளெல்லாம் பசுகரணம் நீங்கிச் சிவகரணம் எய்திய சிவஞானிகள் செயல் என்று தெளியலாம். சிவகரணம் எய்தப் பெற்ற அடியவர்கள்பால் எல்லாம்வல்ல இறைவ னிடத்தில் காணப்படும் அற்புதச் செயல் விளங்கும் என்பத னுக்கு ஆதாரம் கீழ் வரும் தோத்திரங்கள் சான்று பகரும்.

வடமருவுதென்னிழலிற் கருணைவடிவாய்
விளங்கு வரதன்போல
விடமமிர்த மெனப்பருகிச் [ண்டு
சூலந்தோண் மிசையேற்று விடைமேற்கொ
தடமருவு தரணியிடைத் திகழ்ந்திடு
வாகீசர்பத சரோருகத்தைத்
திடமுறமன்பொடுதினமுஞ் சிந்திப்போம்
துயர்களெல்லாஞ் சிந்திப்போமால்.

பாலிடை நஞ்சங்கண்டு
பதைபதைத் தோடியோர்பால்
ஆலிடையவருண்பார்க்கு
அவன்றமா லயனுண்ணப்
பாலிடை நஞ்சங்கண்டு
பதைப்பின்றித் தாமுண்டோர்பா
ஆலிடையவரே யென்னப் பொலியு
நோன்மையர் தாள்போற்றி.

Printed at the 'Caxton Press,' Madras—1925 (A.)

எம். மாணிக்கவாசகம் பிள்ளை

எழுதிய

## இராமாயணம் — தமிழ் வசனம்

சித்திரப் படங்கள் உள்ளது.

1. பால காண்டம் ... ... ... 0 8 0
2. அயோத்தியா காண்டம் ... ... 0 10 0
3. ஆரணிய காண்டம் ... ... 0 10 0
4. கிஷ்கிந்தா காண்டம் ... ... (அச்சில்)
5. சுந்தர காண்டம் ... ... ... 0 12 0
6. யுத்த காண்டம் ... ... ... 1 8 0

---

செய்யூர் - முத்தைய முதலியார், பி. எ. M.L.C.

எழுதிய

இராமாயண சாரம் (முதல் பாகம்) ... 0 12 0
இராமாயண சாரம் (இரண்டாம் பாகம்) ... 0 12 0

---

## கம்பராமாயணம்

பால காண்டம் (சுருக்கம்) ... ... 0 10 0
அயோத்தியா காண்டம் ,, ... ... 0 14 0
ஆரணிய காண்டம் ,, ... ... 0 12 0

## பெரிய புராணம்

சுருக்கம் (முதற் புத்தகம்) ... ... 0 14 0